AA1 MONEY TRANSFER UK
227, Preston Road, Wembley, HA98NF
இலங்கை, இந்தியா, ஐரோப்பா மற்றும் கனடா போன்ற அனைத்து நாடுகளிற்குமான துரித கதியிலான பணமாற்று சேவையை பெற்றுக் கொள்வதற்கு நாடவேண்டிய ஒரே இடம்.
Tel: 079 4131 5048
020 89049732/020 89044545
Opening Offer Service Charge Free
email: aa1moneytransferuk@hotmail.co.uk

BILINGUAL FORTNIGHTLY
ஒரு பேப்பர் ORU PAPER
FREE
PAPER - 09 ♦ ISSUE - 174 ♦ FRIDAY 20 JULY 2012

LONDON ACCIDENT CLAIMS LIMITED
70 Windmill Road, Croydon, CR0 2XP
வாகன விபத்தா? உங்கள் தவறில்லையா?
Driver / Passenger – within last 3 years
3 வருட காலத்துக்குள் சந்தித்த அனைத்து வாகன விபத்துக்களிலும் ஏற்பட்ட
NO WIN NO FEE
• தனிநபர் அனர்த்த நஸ்ட ஈடு (Neck, Back & Shoulder Pain)
• வாகனப் பிரதியீடு = வாடகை வாகனம் (Terms & Conditions Apply)
• புனர் நிர்மாணம் அல்லது வாகன இழப்புக்களுக்கான பூரண நஸ்ட ஈட்டுத்தொகை முதலில்
Mini cab ஓட்டுனர்களுக்கு "PCO" உடன் வாகனம் வழங்கப்படும்
Call Free:0800 032 6798 | Tel: 020 8665 7667
Web: www.lacl.co.uk | Mail: info@lacl.co.uk

உங்கள் வாழ்க்கைத் துணையை இணையத்தில் தேடுங்கள் WWW.ORUMANAM.COM

UK VISA SERVICE
09.07.2012இல் மாற்றத்திற்குள்ளான குடிவரவு விதிகள் உங்கள் எதிர்காலத்தைப் பாதிக்கலாம்!
* மார்ச் 2007ற்கு முன்னர் அரசியல் அடைக்கலம் கோரியிருந்தும் இன்னமும் வதிவிட அனுமதி கிடைக்கவில்லையா?
* உங்கள் குழந்தைகள் 07 வருடங்கள் இங்கே வசித்துள்ளார்களா?
இலவச ஆலோசனைகளுக்கு அழையுங்கள்
Kulendran Immigration Law Chambers
90, High Street, Colliers Wood, London, SW19 2BT
We Open Seven Days
Kulendran (KILC)
T: 0208 542 8222
M : 07769 185 592
F: 0208 542 8666

BRITISH AIRWAYS Preferred Partner
www.flyplaces.co.uk
Flyplaces
Worldwide Travel & Tours
உங்கள் விருமுறை அல்லது உத்தியோகப் பயணத்திற்கான விமானச்சீட்டுகளை நியாயமான விலையில் பெற்றுத்தரும் நம்பிக்கையான தமிழ் நிறுவனம்
COLOMBO FROM £169 +TAXES
CHENNAI FROM £189 +TAXES
TORONTO FROM £199 +TAXES
EXPRESS VISA SERVICES
இலங்கை, இந்தியா மேலும் ஐரோப்பிய நாடுகளுக்கு சென்றுவர விசா ஒழுங்கு செய்து தரப்படும்.
VISA
CALL US NOW 020 8866 3311
மேலதிக தகவல்களுக்கு எமது HAYES அல்லது CROYDON கிளைகளை நாடுங்கள்
Note: All fares mention above are low season, excluding taxes/ terms & conditions apply.

FM CARPETS
விலையில், தரத்தில், சேவையில் என்றும் முன்னணியில்
SALE NOW ON Opening Offer 20% OFF
வீட்டிற்கும் தொழில் நிலையங்களுக்கும் ஏற்றவை
HUGESTOCK VARIETY OF COLOURS FAST FITING
இலவச மதிப்பீடு
இலவச பிட்டிங்
நட்புடனான சேவை
020 8252 6433 / 07946 566 885
120 Aldborough Road South, Seven Kings, ILLford, 1G3 8EZ
www.fmcarpets.com

கட்டணங்கள் £3.00இலிந்து!
Faircut Nails
Faircut Barbers (Ground Floor)
15 London Road, Tooting ,SW17 9JR
For info Please call: 07947 175 493
(Tamil technician required, please apply within)

UK Visa from INDIA
Our office in Chennai can process:
• Domestic Worker Visas • Visit Visas
• Dependant Visas • Student Visas
Contact UK Immigration specialists
Poul & Minnaa
044 4261 3698
New no 88 old no 150, 1st floor, Dharma Towers, Nelson Manickam road, Choolaimedu Chennai 94

Are you an overstayer in the UK or a failed asylum seeker?
If so you may be eligible to apply for a Visa under the Human rights Act.
Contact Immigration law experts
Paul John & Co Solicitors
020 8215 1205
• Free initial advice session (if you bring this advertisement)
• Legal Aid available for eligible clients
We process all UK Visa applications
Paul John & Co SOLICITORS
115a The Grove, Stratford, London, E15 1EN
www.pauljohnandco.co.uk
We are authorized and regulated by the SRA

குழந்தைப் பாக்கியம் கிடைக்காதோர் வாழ்க்கைக்கு ஒளியூட்டுங்கள்!
நீங்கள் 35 வயதுக்குள் இருந்தால் கருமுட்டை தானம் செய்து அதற்கீடாக '£750' ஐ அன்பளிப்பாகப் பெற்றுக் கொள்ளுங்கள்
குழந்தைப் பாக்கியம் இல்லையே என்ற கவலையைப் போக்க 20 வருட அனுபவமுள்ள நிபுணமான வைத்தியர்களைத் தொடர்பு கொள்ளுங்கள்
தமிழில் தொடர்புகொள்ள அழையுங்கள்
HARLEY STREET FERTILITY CLINIC
HSFC HARLEY STREET FERTILITY CLINIC
Director: Dr Geetha Venkat MD, FRCOG
43 Devonshire Street, London, W1G 7AL
Phone: +44 (0)20 7436 6838
Mail : info@hsfc.org.uk | Web:www.hsfc.org.uk

ஒசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

Prime Training College முதன்மை குடியுரிமை பெறும் பரீட்சைகள்

Our services:

- ESOL with citizenship
- Point Base Test
- Spouse Visa Test
- Multilingual Staff

You Pay Only Once, We Train You until You Pass, Certificate with 20 Days

C1, B1 & B2 Test

பிரித்தானியா பற்றிய விடயங்களை ESOL பயிற்சி மூலமும் குடியுரிமை வகுப்புக்கள் மூலமும் அதியுச்ச பயிற்சி வழங்குகின்றோம்.

சனி மற்றும் ஞாயிறுகளிலும் வகுப்புக்கள் உண்டு.

நீங்கள் சித்தியடையும் வரை உங்களைப் பயிற்றுவோம்- மேலதிக கட்டணம் இல்லை

Tel: 020 8150 9953 | Mob: 075 3893 3261

Head Office
14 Lombard Business Park, 2 Purley Way,
Croydon CR0 3JP.

www.primetrainingcollege.co.uk

உங்கள் பரீட்சைக்கு தயார் படுத்தும் வகுப்புகளுக்கு

£ 190 .00 மட்டுமே

(பரீட்சைக் கட்டணம் உட்பட)

இங்கே சனி 10.00 மணிக்கு ESOL வகுப்புக்கள் உண்டு

ISLAND TRAVEL & TOURS

Specialist to all worldwide destinations

உலகின் எப்பாகத்திற்கும் நியாயமான விலையில்
விமானச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாடவேண்டிய தமிழர் நிறுவனம்

020 8554 2500 | Emergency travel 07951 537 567 07957 450 895

742, EASTERN AVENUE, NEWBURY PARK, ILFORD, IG2 7HU

பிரியமானவர்களே...

"உங்கள் துக்கம் சந்தோசமாய் மாறும்"

இந்த தேசத்தில் உன் உள்ளம்
எதை குறித்து கலங்குகிறது?

- கணவனின் குடி பழக்கத்தினால் நோகடிக்கப்படுகிறாயா?
- குழந்தையின் உடல் உள நிலையை குறித்து கலங்குகிறாயா?
- மரணத்திற்கேதுவான நோயா?
- கடன் தொல்லையா?
- பில்லி சூனியமா?
- பிள்ளைகளை குறித்து பாரமா?
- மன அழுத்தமா?
- கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனையா?
- திருமணமாகி குழந்தைகள் இல்லை என்று கலங்குகிறாயா?

அருள்நாதர் இயேசு சொல்கிறார்:
"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே என்னிடத்தில் (இயேசு) எல்லோரும் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்."
வாருங்கள் ஜெபிப்போம் இயேசுவின் நாமத்தில் ஜெயம் பெறுவோம்.

ஞாயிறு ஆராதனை நடை பெறும் இடம்:

19-21 Bellingham Estate, Bellingham,
Catford, Lewisham. SE6 3BX
நேரம் 2. 30 pm
[Near **Bellingham station**]
[Bus Stop **Catford Bus Garage**]
[Bus route no: 47,54,136, 171 ,199, 208, 320]

தொடர்புகளுக்கு: **நல்ல சமாரியன் தேவ சபை**

Bro. Edmond
Mob: 07877 977 086 Tel: 020 8691 2705

SURREY PAWNBROKERS

உங்கள் நகை அடைவில் உள்ளதா ?

அதி கூடிய வட்டியா ?

கவலை வேண்டாம்!

நாம் நேரில் வந்து உங்கள் நகைகளை மீட்டு
குறைந்த வட்டியில் மீள் அடைவு செய்து தரப்படும்.

மீளடைப்பு மட்டும்

2.5% இருந்து

- நகை அடைவும் மீள் அடைவு சேவையும்
- பழைய புதிய நகைகள் கொள்வனவு செய்யப்படும்
- வங்கிக் கணக்கு இல்லாதோருக்கு காசோலை மாற்றுதல்
- நாணய மாற்று சேவை

உங்கள் நகைகளுக்கு
பிரித்தானியாவில் அங்கீகாரமும், உத்தரவாதமும் பெற்ற
ஒரே தமிழ் நிறுவனம் SURREY PAWNBROKERS

தொடர்புகளுக்கு: **Surrey Pawnbrokers**

94, TOLWORTH BROADWAY, TOLWORTH,SURREY, KT6 7HT

T: 0208 399 9176 M: 07947 579 682

UK COOL AND SHOP FITTING

168, Manor farm Road, Wembley, Middlesex, HA0 1DD, UK
MOB: 07788289281,07951854057(KUMAR) TEL: 02033710046 EMAIL: ukcool247@yahoo.co.uk

இயேசு அழைக்கிறார்



பாவக்கட்டா? சாப தோஷமா?
கவலையா? கண்ணீரா? வியாதியா?

உங்கள்துக்கம் சந்தோஷமாக மாறும் – யோவான் 16:20
தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை – லூக்கா 1:37

இதோ! சீக்கிரமாய் வரப்போகின்ற இறைவன் இயேசுவை ஆராதிக்க வாருங்கள்.

துதி ஆராதனை ஞாயிறு காலை 10:00 | தொடர்ந்து சிறுவர் பாடசாலையும் நடைபெறும்

இடம்: GLORY CHURCH OF GOD - U.K.
1,George Lane, Lewisham, London SE13 6HQ,
(Near Lewisham Hospital and Behind the Ealam Shop)

Bus: 47, 54, 75, 136, 185, 208
Station: Catford, Lewisham,
DLR: Lewisham

Contact: **Pr.Robert Bhaskharan**
Tel:**020 8695 1510 | 077 3761 2352**
Email: glorychurchofgod@yahoo.co.uk, robert_bhaskharan@yahoo.co.uk

புலம்பெயர்

இரவியின் எழுத்து தொடரவேண்டும்

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் தங்களது சக்தியை ஒன்று திரட்டி ஒருங்கிணைவாக பொது எதிரியான சிறிலங்கா அரசுக்கு எதிராகப் போராடாமல், தம்மிடையே ஒருவருக்கொருவர் முரண்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இவ்விடயத்தில் திரு. இரவி அருணாசலத்தின் வெப்பிராயத்தை புரிந்துகொள்ளக் கூடியதாகவிருக்கிறது. திரு. அருணாசலம் அவர்கள் தொடர்ந்தும்ஒருபேப்பருடன்இணைந்திருக்க வேண்டும் எனவேண்டிக் கொள்வதுடன், தொடர்ந்தும் தமிழ் அமைப்புகளை எமது பொது இலட்சியத்தின் அடிப்படையில் ஒன்றுபடுத்தும்வகையில்அவரதுஎழுத்துஅமையவேண்டும் என எதிர்பார்க்கிறேன்.

த. செல்வரத்தினம்

ஏகாதிபத்தியத்துடன் இணைவதா?

மட்டைக்களப்பானின் புதிய சிந்தனையை வரவேற்றாலும், நடைமுறைச் சாத்தியம் தலையில் இடிக்கிறது. 30 வருடங்களாக சாத்வீக வழியிலும், 30 வருடங்களாக விடுதலைப் போராட்ட வழிகளிலும் தவறவிட்ட சுதந்திர உணர்வைமீண்டும்ஒருஏகாதிபத்தியத்துடன் இணைப்பதா, இழப்பதா நம்பவே முடியவில்லை பூனைக்கு மணி கட்டுவது யார்?

உமா மகாலிங்கம்

சைவமதத்தை விளங்கிக் கொள்ளுங்கள்...

ஈஸ்ற்ஹாம் கோவில் ஐயர் இலங்கைக்கு சென்று இராஜபக்சவிற்கு மாலைபோட்டமை, அதனை லண்டன் சைவ முன்னேற்றக்கழகம் ஆதரித்தமை தொடர்பான சர்ச்சைகள் அர்த்தமற்றவை. சைவ சமயம் மற்ற மதங்களைப் போல், மதபீடங்களையோமதகுருக்களையோகொண்டிருக்கவில்லை. ஆதலால் சைவசமயத்தை பின்பற்றுபவர்களை யாரும் கட்டுப்படுத்த முடியாது. அதுதான் அதன் தனித்துவம். ஐயர் என்பவர் மதக்கிரியைகளை செய்வதற்காக பயிற்றப்பட்ட ஒருவரே தவிர ஒரு மத குருவானவர் அல்ல. இன்னும் சொல்லப்போனால் பணத்திற்கு தொழில் புரியும் ஒரு ஊழியர். ஆகவே அவர் தனது வருமானத்தை அதிகரித்துக் கொள்ள யாருக்கு வேண்டுமானாலும் மாலை மரியாதை செய்வார், அது தான் அவரது தொழில். அதுபோல் சைவ முன்னேற்றச் சங்கம் என்பது வத்திக்கான் போன்றது அல்ல பழைய மாணவர் சங்கங்கள், ஊர்ச்சங்கங்கள் போன்ற ஒரு அமைப்பு அவ்வளவே!

சிவநாதன்

கனவு காண வேண்டாம் ?

பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் கூட்டமைப்பும், முஸ்லீம் கொங்கிரசும் இணைந்து போட்டியிடும் என எதிர்பார்த்தார்கள். ஆனால் மு.கா. மகிந்த கட்சியுடன் இணைந்து விட்டது. அது மட்டுமல்ல வேறெந்த முஸ்லீம் மத கட்சிகளும் கூட்டமைப்புடன் இணைந்து போட்டியிட மறுத்துவிட்டன. இந்த லட்சணத்தில் தமிழ் - முஸ்லீம் ஒற்றுமை பற்றியும், 'தமிழ் பேசும் சமூகங்களின்' இணைவு பற்றியும் சிலர் கனவு காண்கிறார்கள்.

மரியோ பிரிட்டோ

இலண்டன் உங்களை வரவேற்பதில்லையா ?

இளைய அப்துல்லா எழுதிய புத்தகம் லண்டன் உங்களை வரவேற்பதில்லை என்று ஆனால் முக்கிய விடயம் என்னவென்றால் லண்டன் உங்களை வரவேற்பதில்லை என்று எழுதிவிட்டு அவர் இந்த நாட்டில் உல்லாசமாகத் தான் இருக்கின்றார். அவர் இந்த நாட்டை விட்டு போகவில்லை. அப்படி எழுதியவர்களையும் வரவேற்கின்றது தான் லண்டனின் பண்பு.

ஒலி அசுஞ்சலில் வந்த
மொட்டைக் கடதாசி

அனைத்துல மக்களின் ஆதரவு தேவை..!

தென்ஆபிரிக்காவில் கறுப்பு இன மக்களுக்கு எதிராக இருந்த Apartrian Park க்கு எதிராக நெல்சன் மண்டேலா எடுத்த முயற்சிக்கு உலகலாவிய ரீதியில் கிடைத்த ஆதரவின் மூலம் தான் வெற்றிகிடைத்ததுஎன்பதையாவரும் அறிவர்.

அதேபோன்று ஈழத்தமிழர்கள் தங்கள் உரிமையை பெறுவதற்கு குறுகிய வட்டத்தில் போராட்டம் செய்து, வெளி வட்டத்தையும் தாண்டி உலகலாவிய ரீதியில் ஆதரவைப் பெறுவதன் மூலம் தான் எமது உரிமையைப் பெற முடியும் என்பதே எனது கருத்து.

அண்மையில் மகிந்த லண்டனுக்கு வந்த போது இமானுவேல் அடிகளார் போன்றவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே வெளிவட்டத்தில் உள்ள தமிழ் உணர்வார்களும் பங்கு பற்றி படியாலதான் இப்போராட்டம் வெற்றி அளித்தது.

எனவே, உலகலாவிய ரீதியில் அனைத்து மக்களின் ஆதரவைப் பெறுவதன் மூலமே ஈழத்தமிழர்களுக்கு விடிவு பிறக்கும் என நம்புகின்றேன்.

அதற்காக அனைத்து மக்களின் கருத்துக்களை பிரசுரிப்பதில் ***ஒரு பேப்பர்*** முக்கிய பங்கு அளிக்கும் என எண்ணுகின்றேன்.

த.செல்வரத்தினம்.

சபாஷ் மட்டக்களப்பான்!!

எங்கள் சூழலில் இந்தியாவுடன் இணையும் யோசனை சிறந்ததுதான். ஆனால் சிங்களவன் போட்ட எலும்புக்காக 10 இலட்சம் தமிழர் வாக்கை பறித்த மசோதாவுக்கு கை உயர்த்திய பொன்னம்பலத்தை இப்பவும் புகழும் எம்கூட்டம்உப்படியான நல்ல யோசனைகளை உணர்ந்து வர வேற்க இன்னும் 60 ஆண்டுகள் தேவை. அப்போது தமிழன் இருப்பான். ஆனால் தமிழ் பிரதேசம் இருக்காது.

மனோ

ஆற்றல் கண்டு வியக்கின்றேன்

சிறைக் கைதிகள் அநியாயமாகக் கொல்லப்பட்டபோது சிங்கள உழைக்கும் வர்க்கம் குரல் கொடுக்கவில்லை என்பது உண்மை. அவர்களுக்கு அந்த செய்தி முறையாக எட்டியதோ தெரியவில்லை. அவர்கள் உள்ளத்தை அப்படியே படம் பிடித்து அவர்கள் மகிழ்ச்சியாக இருந்தார்கள் என்று எடுத்துக் காட்டிய ஊருள வாரியின் ஆற்றல் கண்டு வியக்கின்றேன்.

ரமணன்

மட்டக்களப்பான்???

என்னையா நாங்கள் போராடி போராடி கடைசியா இந்தியாவிடம் போய் இணையுற மாதிரி மட்டக்கிளப்பு அண்ணா கதைச்சிருக்கிறார். கூரை ஏறி கோழி பிடிக்காதவன் வானம் ஏறி வைகுண்டம் போனானாம். பேயரை வைத்து வாசிப்பம் என்டு வேலையால வந்து வாசிக்கத் தொடங்கினால் எழுதியிருக்கிறதை பார்த்தால் சிங்களவனிடம் விடுதலைக்கு போராட வெளிக்கிட்டு கடைசியா கொண்டு போய் இந்தியாவிடம் அடிமையா பிழைக்க அவர் ஆயத்தம் செய்யிறார் போல....

பெயரில்லை

ஒரு பேப்பர் *தொடர்பான*
உங்கள் கருத்துக்களுக்கு.....
Tel : 020 7043 4314
www.facebook.com/orupaper
Email: info@orupaper.com

வெளியுறவு அமைச்சர் ஏன் தயாரிப்பாளர் ஆனார் ?

அமைச்சர் ஒருவர் தனக்குரிய பொறுப்பான தொழிலைக் குப்பையில் போட்டுவிட்டு காட்சிப் பொருளாகத் தோன்ற முடியும் என்பதனை GTV தொலைக்காட்சியேநிரூபித்துள்ளது. அதுவும்உலகலாவிய அளவில் தமிழ் மக்கள் விரும்பிப் பார்க்கும் வெளிச்சம் நிகழ்ச்சியை முதலிடத்திற்குக் கொண்டு சென்றவர் தமிழ் பெருமகன் தினேஸ் குமாரேயாம்.

இந்நிகழ்ச்சிக்கு அவருடைய தனிப்பட்ட ஆளுமை, புத்திக் கூர்மையுடன் கேள்வி பதில்களைப் தயாரித்தல் என்பன எல்லோராலும் கணப் பொழுதில் ஈடு கொடுத்து செய்யக்கூடிய கைங்காரியமல்ல.

தமிழன் ஈழத்திலாவது, தமிழகத்திலாவது தன் ஆட்சியுரிமை களையிழந்து அடிமைகளாக வாழ்ந்து வருவதற்குக் காரணம் அவனிடம் நிறைந்து வழியும் போட்டி பொறாமைகளேயாம். ஆனால் அறிவுசார் துறைகளிலும் ஊருடுவியிருப்பதனையிட்டுக் கவலைப்படுவது தவிர வேறு வழியில்லை. ஒருவரிடமுள்ள திறமைகளை எல்லாத் துறைகளிலும் வளர்த்தெடுக்க வேண்டும். அதுவும் தொலைக்காட்சிகள் ஒரு பெரும் காட்சிப் பொருள் பணியகங்கள். இதில் திறன், ஆளுமை மட்டுமன்றி தோற்றப் பொலிவு, பேச்சுத் திறன், மதிநுட்பம் எனப்பல விடயங்கள் உள்ளடங்கியுள்ளன. எனவே தரம் என்பது ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பொறுப்புடன் நடாத்தும் ஆற்றலுடையவராலேயே உயர்த்தப்படுகின்றது

மேலும் கௌரவ அமைச்சர் தயாபரன் 9-7-2012 அன்று வெளிச்சம் நிகழ்ச்சியில் எம்மால் ஏற்றுக் கொள்ள முடியாத தகவல் ஒன்றினை உளறி, தன் அறிவுத் திறனை வெளிப்படுத்தியிருந்தார். அதாவது 1800 ஆங்கிலேயர் இலங்கையின் காணிகளை அபகரித்து தென்னியாவிலிருந்து ஆட்களை (தவறானதும் புண்படுத்தக் கூடியதுமான கொச்சை சொற்பிரயோகம்) கொண்டு வந்து மலையகத்தில் குடியமர்த்தினர் என்றார். தற்பொழுது ஆங்கிலேயர் கொண்டு வந்து குடியமர்த்திய தமிழக மக்களே அங்கு வாழ்ந்து, பல தமிழ் அறிவாளிகளை உருவாக்கியிருக்கிறார்கள். அதனாலேயே நாம் சிங்களவர் மத்தியில் தமிழர் பகுதி என இப்பகுதிகளை இன்று உரிமை கோருகின்றோம்.

இவ்வாறு முரணான கருத்துக்களை வெளியிடுவதானால் பலர் இவரது வெளிச்சம் நிகழ்ச்சியை பார்ப்பதை நிறுத்திக் கொண்டுள்ளார்கள். இப்படித் தான் இவரது அமைச்சுத் தொழிலும் தமிழீழமே தமிழரின் தாயகம் என்று உரக்கக் கூறி காலத்தை வீணடிப்பதாக இருக்கும். மிகவும் பாராட்டிக் கௌரவிக்கப்பட வேண்டிய வாசுகி முருகதாஸ் கூட இந்த அமைச்சருடன் இணைந்து வெளிச்சம் நிகழ்ச்சியில் தோன்றிய பொழுது தினேஸ்குமார் எங்கே, தயாபரன் ஏன் வந்திருந்தார் என்று கேட்காதீர்கள் என நேயர்கள் மீது வார்த்தைகளை தமிழனின் உரிமைக் குரலுக்காகப் பயன்படுத்துவார் என்பதில் ஐயமில்லை.

தனம், லண்டன்

TrainingConnect
www.trainingconnect.co.uk
E-mail: courseinfo@trainingconnect.co.uk Tel:+44(0)207 099 2400

Head Office: 9th Floor, Vista Centre, 50 Salisbury Road, Hounslow TW4 6JQ
0207 099 2400

➡ESOL with Citizenship
▪ British Passport/ Naturalisation
▪ Indefinite Leave to Remain

➡International ESOL Diploma(A1,A2,B1,B2,C1,C2)
▪ Student Visa / Extension Test
▪ Spouse Visa / Extension Test
▪ Work Permit / Extension Test

▪ Courses from £200
▪ Successfully trained over 35,000 students
▪ Certificates within 20 days
▪ Multilingual staff
▪ City & Guilds approved centre

National Centres

BIRMINGHAM
7 Washington Street
Birmingham
B1 1JR
01216339919

SHEFFIELD
Sorby House
42 Spital Hill, Sheffield
S4 7LG
01143034303

LEICESTER
Imperial House
St Nicholas Circle, Leicester
LE1 4LF
01163260248

LUTON
169 A, Dunstable Road
Luton.
Beds – LU1 1BW
01582723123

SLOUGH
18-24 Stoke Road
Slough, Berkshire
SL2 5AG
01753722056

NEWCASTLE
51-52 Victoria Avenue
Whitley Bay,Tyne & Wear
Newcastle Upon Tyne – NE26 2BA
01912525265

FREE INITIAL ASSESMENT

London Centres: Hounslow, Wembley, Kenton, Whitechapel, Camden, Holloway.

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JULY 20, 2012, ISSUE 174

அமைதி வழிப் போராட்டங்களுக்கு இடமில்லை!

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் மூலமும், இராணுவத்தை பலப்படுத்துவது என்ற போர்வையிலும் தமிழ் மக்களின் காணிகள் அபகரிக்கப்படுவதை நிறுத்துமாறு கோரியும், தமிழ் அரசியற் கைதிகளின் மீதான தாக்குதல்களை கண்டித்தும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஒரு அமைதி வழியான ஆர்ப்பாட்டத்தை நெல்லியடியில் நடாத்தியுள்ளது. இவ்வார்ப்பாட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக, முன்னணியின் தலைவர்கள் இருவரது வீடு கல்வீச்சுக்கு உள்ளானதுடன், கழி வெண்ணைத் தாக்குதலுக்கும் உள்ளாகியுள்ளன. நெல்லியடியில் நடைபெற்ற போராட்டத்திற்கு அனுமதியை வழங்கிய பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் திருமதி. சிறிநிதி நந்திசேகரன் அவர்களது வீடும் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள மக்கள் தொகையுடன் ஒப்பிடும்போது, மிகவும் செறிவாக சிறிலங்காப் படையினர் குவிக்கப்பட்டுள்ள நிலையில், அங்கு மக்களின் அன்றாட விடயங்களில் அவர்களது தலையீடு அதிகரித்துக் காணப்படுகிறது. இவ்வாறான சூழலில், அதிகாலைப்பொழுதில் இத்தாக்குதல்களை நடாத்தியவர்கள் யாராக இருக்கும் என்பதனை ஊகித்து அறிந்து கொள்ளவது சிரமமாயிருக்காது. இச்சம்பவங்கள் போருக்கு பின்னரான நிலைமையின் தாற்பரியத்தை விளக்குவதற்கு போதுமையானதாக அமைந்திருக்கின்றன. இந்நிலையில் இனங்களுக் கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்பது வெட்டிப்பேச்சாகவே அமையும்.

ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டமையுடன், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் நீர்த்துப் போய்விடும் என எதிர்பார்த்தவர்களுக்கு, தமிழ் மக்கள் உயிர் அச்சுறுத்தல்களுக்கு முகம் கொடுத்தபடி தமது உரிமைக்கு குரல்கொடுக்க முன்வருவது ஆச்சரியத்தை தந்திருக்கலாம். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்கள் கிளர்ந்தெழுவார்கள் என்ற இயங்கியலை எந்த ஆயுதம் கொண்டும் அடக்கிவிட முடியாது என்பதனை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் போராடங்கள் நிருபித்து வருகிறது.

வன்முறை தழுவிய தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தை அழித்தொழிப்பதில் சிறிலங்காவிற்கு உதவிய சர்வதேச சக்திகள், அங்கு சனநாயக வெளி முற்றாக அடைக்கப்பட்டுள்ளமையிட்டு எதுவித நடவடிக்கைகளையும் எடுப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் அடிப்படை மனிதவுரிமைகளை மதிக்காத சிறிலங்கா அரசாங்கத்தின் அமைச்சர்களும் பிரதானிகளும் சனநாயக முகமூடியுடன் சர்வதேச அரங்குகளில் வலம் வரமுடிகிறது.

ஒரு பேப்பர்

வணக்கம்!

*எட்டாவது வருசம் முடிஞ்சதையிட்டு வாழ்த்து சொன்ன எல்லாருக்கு நன்றி. **ஒரு பேப்பர்** இன் எட்டாவதை தாண்டினதை 'எழுத்துத்தாகம் எந்தத் தடைகளாலும் முடங்கிப் போவதில்லை' எண்டு பேஸ்புக்கில் சுபேஸ் எழுதினதைப் பார்த்து நாங்கள் கிறங்கிப் போயிருக்க, 'எனக்கு எட்டு வருசமா வெங்காயம் உரிக்க, வீடு மூவிங் செய்யேக்க உடையிற சாமான்கள் பக் பண்ண பெரிய உதவியாய் இருந்தது' எண்டு ஒரு பொம்பிளைப்பிள்ளை பின்னூட்டம் போட்டிருக்கு. நாங்கள் முந்தி ஒருக்கால் சொன்னது உங்களுக்கு ஞாபகத்திலை இருக்கோ தெரியாது. **ஒரு பேப்பர்** வாசிக்கிறதுக்கு குறைஞ்சது ஒ - லெவலாவது பாஸ் பண்ணியிருக்க வேணும் எண்டு. இல்லாட்டி அந்தப்பிள்ளை செய்யிற மாதிரி வெங்காயம் வெட்டிப் போடத்தான் பாவிக்க வேணும்...*

ஒரு பேப்பர் ல் பிரசுரிக்கப்படும் விளம்பரங்களிலை சொல்லப்பட்டிருக்கிற விசயங்களுக்கு விளம்பரம் கொடுப்பவர்களே பொறுப்பாளிகள். இந்த விசயத்திலை நாங்கள் கண்காணிப்பாளர்களாக மாறமுடியாது. இருந்தாலும் விளம்பரத்திலை போட்டிருக்கிறமாதிரி கடைக்காரர் நடந்து கொள்ளவில்லை எண்டால் அது சம்பந்தமாக முறைபாடு செய்யிற நிறுவனங்களுக்கு சொல்லி நடவடிக்கை எடுங்கோ. அதை விட்டுட்டு நீங்கள்தானே விளம்பரம் போட்டனிங்கள் எண்டு எங்களிலை குறைபிடிக்கிறதிலை ஒரு பிரயோசனமும் இல்லை. எங்கடை விளம்பரதார்களில் பெரும்பாலானவர்கள் நேர்மையான ஆட்கள் எண்டதையும் சொல்லி வைக்கிறம்.

*போன பேப்பரிலை **ஒரு பேப்பர்** - எட்டு ஆண்டுகள் என்ற தலைப்பிலை ஒரு பேப்பரின் அனுபவங்களைப்பற்றி எழுதினதிலை தவறுதலாக முக்கியமான ஒராளைபற்றி விபரம் விடுபட்டுப் போட்டுது. அது வேறை யாரும் இல்லை இதயச்சந்திரன் அண்ணை. அவருடைய அரசியல் ஆய்வுகள் முத்தான கையெழுத்திலை உரிய நேரத்திற்கு வந்து சேரும். நாங்கள் தட்டச்சு செய்யிறதையிலை சில நேரம் பிழை விட்டாலும், அவரது கருத்துகளை மக்கள் மத்தியில் சேர்ப்பிக்கிறது எங்களுக்கு மகிழ்ச்சி தருகிறது.*

இன்னொரு விசயம் அனஸ் இன் 'லண்டன் நகரம் உங்களை வரவேற்பதில்லை' புத்தக அறிமுக விழா பற்றிய குறிப்பிற்கு தவறுதலாக ஆறாவது ஆண்டு விழா என்று தலைப்பிட்டு விட்டோம்.

அப்ப அடுத்த பேப்பரிலை சந்திப்பம் என்ன?

மீண்டும் சந்திப்பம்....

***ஒரு பேப்பர்** காரன்கள் + காரிகள்*

Indian proscriptions and Sri Lanka's ethnic crisis: a policy of failure

The intemperate attacks against the Tamil Diaspora that accompanied India's predictable decision to re-proscribe the LTTE earlier this month reflects more than anything the dismal failure of India's attempts to shape a political solution to the island's ongoing and escalating ethnicconflict.

So, ironically Indian aid is effectively providing material assistance for Colombo's project of establishing Sinhala hegemony.

Indian approaches to the Tamil crisis in Sri Lanka have long been driven by the belief that the LTTE and particularly its senior leadership remained the singular obstacles to an equitable political solution to the conflict. To this end the Indian political and military establishment provided unqualified support for Sri Lanka's military efforts to crush the Tamil struggle.

However, three years after the end of the war and the military destruction of the LTTE, amidst Sri Lanka's horrifying slaughter of Tamil civilians, the prospects of a political solution to the ongoing ethnic conflict are by all accounts remote.

Indeed, freed from the constraints of the LTTE's military force, the Sinhala leadership in Colombo has publicly told their erstwhile allies and patrons in Delhi, in more or less polite and explicit terms, to mind their own business.

Meanwhile Sri Lanka's intensified efforts to violently establish Sinhala hegemony over the Tamil people and Tamil territory is palpably fuelling Tamil resistance and insistence on political independence – both in the homeland and Diaspora.

Faced with a recalcitrant and determined Sinhala leadership and the growing resentment and resistance of the Tamil population, Delhi has decided to (in the words of Jayalalitha) cower like a mouse in front of the aggressor whilst lashing out and blaming the latter.

Not exactly a response befitting a regional power and aspirant global power!

It wasn't supposed to be this way.

Indian calculations presumed that in exchange for supporting Sri Lanka's military onslaught in the Tamil speaking regions, a grateful Sinhala leadership would implement Indian proposals on political reform, reconstruction and rehabilitation in the north-east and also sign up to an expanded free trade agreement.

These steps would have produced greater self government for the Tamil speaking areas, the rapid normalisation of social and economic life in the former war zones and thereby a waning of support for political independence. At the same time it was expected that expanded Indo – Lanka trade and the rapid implementation of infrastructure projects in the north-east would have led to a revival of the economy there as well as greater social and economic integration with India.

Of course none of this has come to pass.

While rejecting a political solution based on the Indian sponsored thirteenth amendment to the constitution, Sri Lanka's has also resisted efforts to increase trade between the two countries. The infrastructure projects for the north-east are either moving slowly or at a standstill, like for example the attempts to rebuild the Palaly airport as a commercial hub.

Meanwhile Indian humanitarian and reconstruction assistance, such as Indian efforts to build 50, 000 houses, far from meeting Tamil needs are actually being used by Colombo for its own purposes. Having taken control of Indian assistance, Colombo has diverted this towards its paramilitary operatives who use the resources to build patronage networks amongst the needy population.

So, ironically Indian aid is effectively providing material assistance for Colombo's project of establishing Sinhala hegemony.

India's decision to re-proscribe the LTTE and attack Tamil demands for self rule is largely unsurprising and more or less in keeping with India's past policies. It is in effect a rather ham – fisted attempt to assert and maintain a stake as well as a position of leverage in Sri Lanka's politics.

Indeed, freed from the constraints of the LTTE's military force, the Sinhala leadership in Colombo has publicly told their erstwhile allies and patrons in Delhi, in more or less polite and explicit terms, to mind their own business.

However, as long as Delhi remains unable or unwilling to check Colombo's determination to violently pursue Sinhala utopia, India will remain either a willing accomplice or become an ineffectual bystander to the island's intensifying ethnic polarisation.

Courtesy: Tamil Guardian

இனப்படுகொலைக்கு துணைபோன பிரணாப் முகர்ஜியை ஆதரிக்கும் கருணாநிதி, திருமாவளவன்

தமிழ் ஈழத்தை உருவாக்கப் போவதாகக் கூறி, தமிழீழ ஆதரவாளர் மன்றம் (ரெசோ) அமைத்துள்ளகருணாநிதியும்,அதில்இணைந்துள்ளதொல். திருமாவளவனும் எவ்வளவு போலித்தனமாக ஈழம் பற்றி பேசுகிறார்கள் என்பதற்கான இன்னுமொரு எடுத்துக்காட்டு தான் அவர்கள் இந்தியக் குடியரசுத் தலைவர் வேட்பாளரான காங்கிரசுக் கட்சியின் பிரணாப் முகர்ஜியை ஆதரிப்பது.

அதிகாரத்தில் இருந்து கொண்டு இந்தியப் படையையும், இந்திய அரசையும் சிங்கள இனவெறி அரசு நடத்திய தமிழின அழிப்புப் போருக்குத் துணையாகச் செயல்படுத்திய பிரணாப் முகர்ஜியின் தமிழின எதிர்ப்பு வெறி எந்தளவில் உச்சத்தில் இருந்திருக்கும்?

பிரணாப் முகர்ஜியின் வாய்மொழி மூலமாகவே, அவரது தமிழின எதிர்ப்பு மனப்பான்மையை அறிந்து கொள்ளலாம்.

2008இல் தமிழின அழிப்புப் போரை இலங்கை அரசு உக்கிரமாக நடத்திக் கொண்டிருந்த போது, தமிழ்நாட்டில் கட்சி கடந்து, சாதி கடந்து, தமிழர்கள் ஈழத்தில் போர் நிறுத்தம் கோரி போராடினார்கள். அப்போது முதல்வராக இருந்த கருணாநிதி, இந்திய அரசு தலையிட்டுப்போரை நிறுத்தவில்லை யென்றால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் பதவி விலகுவார்கள் என்று அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் முன்மொழிந்து தீர்மானம் நிறைவேற்றினார்.

2008 நவம்பர் - டிசம்பரில் இது நடந்தது. குறிப்பிட்ட நாளுக்குள் போர் நிறுத்தம் வரவேண்டும் என்றும் கெடு விதித்தார். கெடு முடியப்போகும் கடைசி நாளுக்கு முதல்நாள் பிரணாப் முகர்ஜி சென்னையில் கருணாநிதியை அவரது வீட்டில் சந்தித்துப் பேசினார். பேசி முடித்து வெளியே வந்த பிரணாப் முகர்ஜியை செய்தியாளர்கள் சூழ்ந்தனர்.

"போர் நிறுத்தம் செய்ய ஒத்துக் கொண்டீர்களா?" என்று கேட்டனர் செய்தியாளர்கள்.

"நாங்கள் போர் நிறுத்தம் கோரவில்லை (We are not for Ceasefire)" என்றார் பிரணாப்.

"இந்தியா இலங்கைக்கு ஆயுதம் தருவதை நிறுத்திக் கொள்ளுமா?" - செய்தியாளர்கள்.

"இந்தியாவின் தென்பகுதியில் நாம் சில அமைப்புகளை நிறுவியுள்ளோம். அவற்றைப் பாதுகாப்பதற்காக இலங்கைக்கு ராடார் உள்ளிட்ட கருவிகள் கொடுக்க வேண்டியுள்ளது"- பிரணாப்.

"சிங்களப் படைவீரர்களுக்கு இந்தியாவில் பயிற்சி கொடுப்பது நிறுத்தப்படுமா?"

"இந்தியப் படை வீரர்கள் பலநாடுகளில் பயிற்சி பெறுகிறார்கள். பலநாட்டுப் படை வீரர்கள் இந்தியாவில் பயிற்சி பெறுகிறார்கள். அதுபோல், இலங்கைப் படை வீரர்களும் இந்தியாவில் பயிற்சி பெறுகிறார்கள்" - பிரணாப்.

ஆனால்,இதற்குப் பிறகும் பேச்சுவார்த்தை இணக்கமாக நடந்து வெற்றி பெற்றதாக கருணாநிதியும் கூறினார். பிரணாப்பும் கூறினார்.

தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகமாட்டார்கள் என்று அறிவித்தார் கருணாநிதி. கருணாநிதி - பிரணாப் உடன்படிக்கைக்குப் பிறகு, சிங்கள இனவெறி அரசு தமிழின அழிப்புப் போரை தீவிரப்படுத்தியது. கொத்துக் குண்டுகளை வீசி கூடம் கூட்டமாகத் தமிழ் மக்களைக் கொன்றது. 2009இல் முல்லைத் தீவில் தமிழீழ தேசியத் தலைவர் உள்ளிட்ட விடுதலைப்புலிகளும், தமிழ் மக்களுமாக மூன்றரை இலட்சம் பேர் ஒரு சிறு நிலப்பரப்புக்குள் சிங்களப் படையால் சுற்றிவளைக்கப்பட்டனர். அம்மக்கள் மீது வான்வழியே குண்டுமாரி பொழிந்தது சிங்களப் படை.

இலட்சக்கணக்கான மக்கள் ஒரு சில நாட்களில் கொல்லப்படப் போகிறார்கள் என்ற நிலையில், உலகமனிதஉரிமை அமைப்புகள் இலங்கையைக் கண்டித்தன. இலட்சக்கணக்கான தமிழ் மக்களை கூட்டமாகக் கொல்லத் திட்டமிட்ட இராச பக்சேகும்பல், அங்கேசிக்கியுள்ளமூன்றரை இலட்சம் மக்கள் தொகையை வெறும் 80,000 பேர் என்று குறைத்துச் சொன்னது. கடைசியில், அவ்வளவு பேர் தான் மிஞ்சுவார்கள் என்று கணக்கிட்ட இராச பக்சே கும்பல் தந்திரமாக, முன்கூட்டியே மக்கள் தொகையைக் குறைத்துச் சொல்லி உலகை ஏமாற்ற முனைந்தது. அப்போது, இலங்கை சென்ற பிரணாப் முகர்ஜி முல்லைத் தீவுப் பகுதியில் சிக்கியுள்ள தமிழ் மக்களின் எண்ணிக்கையை 70,000 லிருந்து 80,000க்குள் இருக்கும் என்று உலகிற்கு அறிவித்தார்.

ஈழத்தமிழ் இன அழிப்பின் மூளையாகவும், முக்கியப் புள்ளியாகவும், செயல்பட்டவர் பிரணாப் முகர்ஜி ஆவார். அந்த பிரணாப் முகர்ஜியை தான் ரெசோவின் "மாவீரர்'களான கருணாநிதியும், திருமாவளவனும் குடியரசுத் தலைவராக்கி சிங்காரிக்கச் சேவை புரிகிறார்கள்.

இப்பொழுதும், இந்திய அரசு மற்றும் அதன் உளவுத்துறையின் திட்டத்தைச் செயல்படுத்த மாறுவேட டெசோ அமைத்துள்ளார் கருணாநிதி. தமதுநம்பகமான கூட்டாளியாகவுள்ள கருணாநிதியின் ஒப்புதலைப் பெற விரும்பித்தான் அந்தோணியை அனுப்பி வைத்தார் சோனியா.

தமிழினத்தை அழிப்பதில் முனைப்புக் காட்டிய பிரணாப் முகர்ஜிக்கு தமிழ்நாட்டுத் தமிழர்கள் எதிர்ப்புக் காட்டினார்கள் என்ற அளவில் ஒருவரலாற்றுப் பதிவிருக்க வேண்டும். அதில், கருணாநிதியும் திருமாவளவனும் பிரணாப்பை எதிர்த்து பதிவு செய்ய வேண்டும் என்ற நோக்கில் இவற்றை எழுதுகிறோம்.தி.மு.க.வின் இனத்துரோகம் தொடர்கிறது. தி.மு.க.வின் இனத்துரோகத்தில் வழக்கம் போல் விடுதலைச் சிறுத்தைகளும் பங்கு பெற்றிருக்கிறது.

நன்றி: தமிழர் கண்ணோட்டம்

ஒரு பேப்பர் உங்கள் கைகளில் தவழுவதற்கு உறுதுணையாய் நிற்பவர்கள் . . .

BBK Partnership
Croydon..... 020 8150 9950

Meera Arnold & Co
Southgate..... 020 8882 2333

Aananthi Acca [Rayners Park]
Dr. Ratneswaran [Bromley]
R. Ganeshalingam [Purley]
Subramaniam [Eastham]
Sinnakutty [Walthamstow]
Babu [Thornton Heath]
Sriskanthan [Kensal Rise]
Vithuran [Croydon]
Bobby [Sutton]
P. Pathmanathan [Wembley]
Peter Jesudasan [Rayners Park]
T.Selvaratnam [Wembley]

இந்த வெற்றிடத்தை நிரப்புவது உங்கள் கைகளில்தான் உள்ளது.

ஒரு பேப்பர் தொடர்ந்து வெளிவர உங்கள் தயவை நாடி நிற்கிறது. உங்களால் முடிந்த சிறிய பங்களிப்பை தந்துதவுமாறு அன்புடன் கேட்கின்றோம்.
நன்றி.

Name: **ORU PAPER**
Bank: **HSBC**
A/C: **61429035**
S/C: **40-33-09**

" We love India. We love the people of India", Prabhakaran

By: Nadarajh Balasubramaniam (PFLT-UK)

India is one of the oldest civilizations in the world with rich cultural heritage. India adopted a steady Parliamentary form of government, with the President as the nominal head of the Executive and the Prime Minister and the Council of Ministers wielding actual power.

In the twenty-first century, India has become self-sufficient in agricultural production and is now one of the top industrialized countries in the world and one of the few nations to have gone into outer space to conquer nature for the benefit of the people. All these achievements are most welcome.

In spite of all these India looks pathetic and the South Block dominated Delhi government resorted to unfair and treacherous actions specially against the Tamils of Eelam. The failure of Indian politicians to differentiate between the alleged involvement of LTTE with the murder of Rajiv Gandhi and the Tamils ended up in a unspeakable tragedy for the Eelam Tamils. These events occurred during the critical period of Tamils struggle for equal rights and recognition, which shook the foundation of amiable relationship between India and Eelam Tamils.

LTTE was banned in India in the aftermath of the assassination of former Prime Minister Rajiv Gandhi in 1991. Then India keeping Eelam Tamils too at arm's length encouraged successive governments of Sri Lanka, in the guise of fighting terrorism, to subject the Tamils to military offensive causing death and destruction, as India waited on the sideline and remained silent.

At present it is simply obvious that the actions of Delhi government is governed or depend on the degree of sensitivity Delhi has for the hurt feelings of Tamil Nadu Tamils over the Eelam Tamils. Is Delhi still indifferent or changing for the better?

Recently, the union government, as India's central government is known, extended the ban on LTTE for another two years declaring that it continues to adopt a strong anti- India posture and pose a grave threat to the security of its citizens. In a notification, the Home Ministry specifically said the activities of LTTE are detrimental to the sovereignty and territorial integrity of India and there is a continuing strong need to control all such separatist activities by all possible means.

Nothing could be further from the truth. All these reasoning are mere fallacious and utterly absurd. This is nothing but paranoia!The policy making decisions look simply a thought process believed to be heavily influenced by anxiety, frustration and fear.

It is very unfortunate that prohibitions on contacts with the LTTE had prevented useful engagement in the past. Now it a universally accepted reality that the LTTE understood the Sri Lanka governments more than anybody else. The absence of a workable strategy between Liberation Tigers of Tamil Eelam (LTTE) and India was the root course of the nasty acts of India and India has to blame herself only. LTTE and Prabhakaran have been always very genuine, generous and magnanimous!.

Some review of the past will lead to fair interpretation and expose the fallacy of arguments. On August 4th 1987 Prabhakaran made a memorable appearance in the midst of a massive crowd at the Suthumalai Amman grounds.

Quote:

"Prabhakaran's " We love India. We love the people of India" speech that day, described by an Indian commentator as an interesting political exposition", was noted for its statesman like restraint and candour

While expressing his apprehensions on the Accord, he said the responsibility of protecting the Tamils had now passed from the LTTE to the Indian government. They would however continue to fight for an independent Tamil Eelam".(Ref. Page 353, "A Journalist's Memoirs 2930-2004" By S.Sivanayagam).

Thileepan died on the 26th of September 1987.His death created an anti-Indian mood in Jaffna that was pro-India till then. . The death of Thileepan was hence seen as a pivotal moment in Tamils - Indian relations for years to come.

On October 1987 was D-Day when the Indian army went to war with the LTTE, but what in effect turned out to be a war against the Eelam Tamil population. It was only three months earlier they had welcomed the Indian jawans with open arms, that was their pathetic trust in "Mother India"!

Taking advantage of the political innocence of Rajiv Gandhi, the Indian Peace Keeping Force (IPKF) sent to Sri Lanka to help implement the Indo-Sri Lanka Agreement of 1987, was made use of by the then President Jayawardene to fight the LTTE, struggling for political freedom of the Tamil people in Sri Lanka

Sonia has already set the fuse for the doom of India, her action over ruled the national interest..Unless that family quit politics, and allow other great men in India to lead India will accelerate towards its doomsday.

There is a pair of German proverbs which go :

"Revenge converts a little right into a great wrong"

"While seeking revenge, dig two graves – one for yourself.",

Tamils hope Indians wake up to the writings on the wall and save India from disaster.

There are are only two possible solutions 1. Complete the genocide on Tamils. 2. Carve them out a separate country, Bangladesh style.Western foreigners want some thing in between, but that will not be possible and practi cal. The Solution will be Separation!

Over five decades of Sinhala-Tamil conflict led to the migration of about a million Tamils; resulting in the establishment of prosperous migrant Eelam Tamils community in Western countries, which increased the aware ness of Western Nations to events in Sri Lanka. This has further exposed India , even if we ignore the role of the whistle blower, the Wikileaks!

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:

பிரித்தானியா
அ.இரவி - மணி - அகிலன் மாதவன்

கனடா
தயா - அரவிந்தன் - சிந்து

பிரான்ஸ்
சிறி

சுவிஸ்
சயந்தன்

பொறுப்பாசிரியர்
- கோபி -

மக்கள் தொடர்பு
சுகன்யா

விளம்பரம்
சோபனா - அஜந்தா

அச்சு
தர்சினி (கனடா) - சுகன்யா

வடிவமைப்பு
மயூரன் - யுகன்

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - மாயா- சாரங்கன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
சோபனா

வழங்கல்
உதயகுமார்-ரூபன்-பிரகாஸ்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
லண்டன் 020 7043 4310
கனடா 416 613 2850

தொலைநகல் (Fax)
லண்டன் 020 7043 4312
கனடா 416 438 7855

ஆக்கங்கள் மற்றும் அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
ORU PAPER
G11 LOMBARD HOUSE
2 PURLEY WAY
CROYDON, CR0 3JP
மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Oru Paper Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

சிறிலங்காவிற்கு சற்றும் சளைத்ததல்ல இந்தியா.. சத்தீஸ்கரில் நிகழ்ந்த பழங்குடிகள் படுகொலை

கடந்த யூன் 28, 2012 அன்று, இந்திய தென் கிழக்கு மாநிலமான சத்தீஸ்கரில் உள்ள சர் கேல்குடா கிராமத்தில் இந்திய அரச படைகள் நிகழ்த்திய வெறித்தனமான தாக்குதலில் 19 கிராம வாசிகள் படுகொலை செய்யப்பட்டனர். கொல்லப் பட்டவர்களில் ஐந்து பேர் 12 வயதுக்கும் 15வயதுக் கும் இடைப்பட்ட சிறுவர்கள். மேலும், கத்தி, அரிவாள் மற்றும் துப்பாக்கிக் குண்டுகளால் மக்கள் கொல்லப்பட்டதுடன், பதின்வயதுக்குட் பட்ட நான்கு இளம்பெண்கள் பாலியல் தாக்கு தலுக்கும் உள்ளாக்கப்பட்டுள்ளனர். சத்தீஸ்கரில் உள்ள பழங்குடிகளின் உயிரைப் பறிப்பதை இந் திய அரசு கிஞ்சித்தும் பொருட்டாகக் கருத வில்லை என்பதையே இச்சம்பவம் மீண்டும் ஒரு முறை நிரூபித்துக் காட்டுகிறது.

இப்படுகொலையை மூடிமறைப்பதில் அதி கார வர்க்கம் ஒத்திசைவுடன் ஈடுபட்டிருப்பது மற் றொரு அதிர்ச்சிக்குரிய விடயமாகும். 'மக்கள் கவசங்களாக'(Human Shields) பயன்படுத்தப்பட் டவர்களே கொல்லப்பட்டார்கள் என அதிகாரத் திமிரோடு சத்தீஸ்கர் முதல்வர் படுகொலையை நியாயப்படுத்தினார். ஆனால் இந்த 'மக்கள் கவசங்கள்' கதையை கிராமவாசிகள் அடியோடு மறுத்துள்ளனர். சத்தீஸ்கர் மாநில உள்துறை அமைச்சரோ நக்சல் கூட்டங்களில் பங்கேற்கும் மக்கள் கொல்லப்படுவது சரியானதே என வாதா டியுள்ளார். இதனை மத்திய உள்துறைச் செய லாளர் பாராளுமன்ற நிலைக் குழுவிடம் அளித்த வாக்குமூலத்துடன் இணைத்துப் பார்க்க வேண் டும். அவ்வாக்குமூலத்தில் பாதுகாப்புப் படையினர் 'கைது அல்லது கொலை செய்ய' ஆணையிட் டுள்ளதாகத் தெரிவித்தார். எனவே, குழும முதலா ளித்துவத்தின் (corporate) நிலப்பறிப்பு, வனம் மற் றும் நீர்க் கொள்ளைக்கெதிராக போராடும் மக்கள் மீதான போர், தனது காட்டுமிராண்டித்தனத்தின் புதிய உச்சங்களை எட்டியுள்ளது மிகத் தெளிவா கப் புலப்படுகிறது.

அதனால்தான், தம் மீது 'தாக்குதல்' துவங்கியவு டனேயே, சுடத் துவங்குவது நியாயமானது தான் என பாதுகாப்புப் படையின் உயர் அதிகாரிகள் விளக்கமளிப்பது அதிர்ச்சியளிப்பதாக இல்லை. இவ்விவகாரத்திலோ, படையினர் தாக்குதலுக்கு ஆளானார்களா என்பதே ஐயத்திற்கிடமானதாக உள்ளது. ஏனெனில், கிராமவாசிகள் அதனை முழுமையாக மறுத்துள்ளனர். எனவே, இது கட் டுப்பாடுடன் கூடிய ஒரு காவல்துறை நடவடிக் கையல்ல, மாறாக கொலைவெறியுடன் அரசுப் படைகள் நிகழ்த்தும் ஒரு யுத்தம் என்பதன் வெளிப்படையான ஒப்புதலாகவே எடுத்துக் கொள்ள வேண்டும். படையினர் கிராமத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த பிறகும், சில கிராமவாசிகள் கொல்லப்பட்டதே இதற்கான சான் றாகும்.

இவ்வுண்மைகள் அனைத்தும் சத்தீஸ்கரில் ஒரு போர் நிகழ்ந்து கொண்டிருப்பதையே உறுதிப் படுத்துகின்றன. இப்போரில் சத்தீஸ்கர் மக்கள் கொல்லப்படுவது தவிர்க்கவியலாத விபத்தல்ல. மாறாக, அம்மாநிலத்தில் வாழும் பழங்குடிகள் தான் இப்போரில் கொல்லப்பட வே ண்டிய எதிரி கள், தாக்குதல் இலக்குகள்!

மேலும், இது போன்ற நியாயப்படுத்தல்கள் அனைத்தும் சம்பவங்களுக்கு பிறகாக உரைக் கப்படுவது மட்டுமின்றி, இவை கூறாமலேயே விளங்கப்பட வேண்டியவையாக கருதப்படுவது மேலும் அபாயகரமானதாக உள்ளது. கொல்லப் படுபவரின் அடையாளத்தை உறுதிப்படுத்து வதோ, விசாரணை நடத்துவதோ அல்லது அவரது குற்றத்தை நிரூபிப்பதோ தேவையில்லை கொலை முடிந்த பின் சரியான நடைமுறைகளை பின்பற்றுவதோ, அடிப்படை உரிமைகளை உயர்த்தி பிடிப்பதோ தேவையில்லை பிரேதப் பரிசோதனை நடத்தத் தேவையில்லை இவை குறித்த அறிக்கை களை பொதுவெளியில் வைக்கத் தேவையில்லை அல்லது கொல்லப்பட்டவர்களின் உடல்களில் உள்ள அரிவாள் காயங்கள் குறித்து விளக்க வேண்டிய தேவையில்லை. தாம் கூறும் விடயங்க ளைக் கூட நிரூபிக்க வேண்டியதில்லை. உதாரண மாக, காவல்துறையினர் உடலில் ஏற்பட்ட காயங் கள் துப்பாக்கிக் குண்டுச் சிதறல்களால் ஏற்பட் டவை என அரசு மருத்துவர்கள் கூறுகிறார்கள். ஏ.கே.47-எஸ்.எல்.ஆர் துப்பாக்கி குண்டுகளால் ஏற்பட்டவை என அதிகாரிகளும், சிப்பாய்களும் கூறுகிறார்கள். ஆனால், இது குறித்தெல்லாம் உண்மையில் யார் கவலைப்படுகிறார்கள்? நிச்ச யமாக அரசு கவலைப்படுவதில்லை.

பிரிவினைக்குப் பிறகான 60 ஆண்டுகளில், மருத்துவ வசதியின்றியும், ஊட்டச் சத்துக் குறை பாட்டுடனும், இடம் பெயர்தலை எதிர்கொண்டு மெதுவாக பேரழிவை நோக்கி தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் சத்தீஸ்கரின் பழங்குடி மக்கள். அப்பேரழிவு கடந்த சில ஆண்டுகளில், முதலில் சல்வா ஜூடும் மூலமாகவும், பின்னர் பச்சை வேட்டை மூலமாகவும் துரிதப்படுத்தப் பட்டு வருகிறது. இன்று இது எத்தகைய கட்டத்தை நோக்கி வந்து விட்டதென்றால், தற்போது அரசு குறைந்தபட்சம் தனது பொறுப்புணர்வு குறித்து நடிக்கக் கூட முன்வருவதில்லை. இம்மாநிலத் தின் தாதுப் பொருட்களை, குழும முதலாளித் தின் நலன்களுக்காக அரசு வரைமுறையின்றி கொள்ளையடிப்பதும், அதன் பொருட்டு மக்களின் உயிரையும், உரிமைகளையும் (மக்களின் மானம் குறித்தெல்லாம் எப்பொழுதுமே அது கவலைப்பட் டதில்லை) பலி கொடுப்பதும் ஒரு வெளிப்படை யான, வெட்கமற்ற உண்மையாகி விட்டது. இத னைப் பாராமல் கண்களை மூடிக் கொள்வோ மேயானால், சத்தீஸ்கர் மக்கள் மீது நடத்தப் படும் போரில் அரசுடன் கைகோர்ப்பது என்றே பொருள்படும்.

நன்றி: கீற்று

வாழ்ந்து படிக்கும் பாடங்கள்!

திறமை இருந்தும் தோல்வி ஏன்?

நமது அன்றாட வாழ்க்கையில் பல துறைகளில் பல திறமையாளர்களைப் பார்க்கிறோம். நாளடை வில் அவர்களில் மிகச் சிலரே அந்தந்த துறைகளில் வெற்றி அடைகிறார்கள் என்பதையும் பெரும் பாலோனோர் நாம் எதிர்பார்த்த அளவு சாதனை கள் புரியாமல், இருந்த சுவடே தெரியாதபடி காணா மல் போவதையும் பார்க்கிறோம். அப்போதெல் லாம் நம்மால் வியப்படையாமல் இருக்க முடிவ தில்லை. அதுவும் வெற்றியடைந்தவர்களை விட அதிகத் திறமை கொண்டவர்கள் என்று நாம் கணித் தவர்கள் சாதிக்காமல் போய் விடும் போது அது ஏன் என்ற ஒரு மிகப் பெரிய கேள்வி நமக்குள் எழாமல் இருப்பதில்லை. அதற்கு 'விதி' என்ற மிக வசதி யான பதிலை நமக்கு நாமே சொல்லிக் கொள் கிறோம். ஆனால் அபூர்வமாய் ஒருசில விதிவிலக் குகள் தவிர அந்த விதி அவரவர்களால் எழுதப்படு வது அல்லது ஏற்படுத்திக் கொள்வது என்பதே நிதர்சனமான உண்மை.

ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் தோல்வி அடை யும் அனைவருக்கும் பொதுவாக மூன்று குணாதிச யங்கள் இருப்பதை நம்மால் காண முடியும். அதில் முதலாவது, அவர்களுக்குள்ளே சாதனை புரிந்தே ஆக வேண்டும் என்ற அக்னி இருப்பதில்லை. இது இல்லாத வரை எத்தனை திறமை இருந்தாலும் அது பிரகாசிப்பதில்லை. இரண்டாவது, அவர்கள் ஈடு பாடுகள் சீராகவும், தொடர்ச்சியாகவும் ஒரே விஷயத்தில் இருப்பதில்லை. இன்று ஒன்றில் ஈடு பாடு, நாளை வேறு ஒன்றில் தீவிர ஈடுபாடு, சில நாட் களில் புதிதாக ஒன்றில் பேராவல் என்று மாறிக் கொண்டே போகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் பல நல்ல ஆரம்பங்கள் இருக்கின்றன, திறமைக் கும் குறைவில்லை என்றாலும் எதிலும் முழுமை இருப்பதில்லை.

மூன்றாவது, அவர்கள் வெற்றி வரும் வரை பொறு மையாக தாக்குப் பிடித்து நிற்பதில்லை. தற்காலி கத் தோல்விகளிலேயே பின்வாங்கி விடுகிறார்கள். தற்காலிக தடங்கல்களும், நிராகரிப்புகளும், தோல் விகளும் முயற்சிகளைக் கைவிடப் போதுமான வையாக இருக்கின்றன. இந்த மூன்று தவறு களையும் வெற்றியாளர்கள் செய்வதில்லை. இதை தங்கள் துறையில் சிகரத்தை எட்டிய இருவர் வாழ்க்கை அனுபவங்களைப் படித்தால் நம்மால் புரிந்து கொள்ள முடியும்.

பாஸ்கல் என்கிற கணித மேதையை அறியாதவர் இருக்க முடியாது. அவர் பிற்காலத்தில் தத்துவ ஞானியாகவும் விளங்கினார். அவர் வாழ்ந்த கால கட்டத்தில் சட்டம் மட்டுமே மேல்நிலை மக்களின் கௌரவமான தொழிலாகக் கருதப்பட்டது. எனவே அவர் தந்தை மகன் சட்டப் பேரறிஞனாக வர வேண் டும் என்று ஆசைப்பட்டார். பாஸ்கலோ கணிதத் தில் தான் மிகுந்த ஈடுபாடுடன் இருந்தார். எத்தனை அறிவுரை கூறியும் மகன் மாறாததைக் கண்ட தந்தை கடைசியில் மகனை சட்ட புத்தகங்கள் மட் டுமே நிறைந்த அறையில் வைத்துப் பூட்டி வைக்கத் துவங்கினார். உள்ளே கணிதக் கோட்பாடுகளை மகன் எழுதிக் கொண்டு இருப்பதை பின்னர் கண்டு பிடித்து அங்கிருந்து எழுத்துக் கருவிகள், தாள்கள் அனைத்தையும் அப்புறப்படுத்திப் பார்த்தார். ஆன ால் பாஸ்கலோ கரித்துண்டில் தரையில் எழுதிப் பார்க்கத் துவங்கினார். கடைசியில் தந்தை விட்டுக் கொடுக்க வேண்டியதாயிற்று. அவர் ஆவலுடன் தன் கணித ஆராய்ச்சிகளில் ஈடுபட்டார். ஆரம்பத் தில் பிற கணித மேதைகள் இவருடைய வித்தியாச மான, புதிய கோட்பாடுகளை அங்கீகரிக்கவில்லை. ஆனால் அவர் பொருட்படுத்தாமல் தொடர்ந்தார். தடங்கல்களைக் கண்டு தளராமல் தொடர்ந்த இத்தகைய ஈடுபாட்டிற்குப் பின் வராத வெற்றியும் உண்டா? வெற்றியும், புகழும் கடைசியில் அவ ருக்கு உலக அளவில் கிடைத்தன.

பெர்னார்டு ஷா எழுதுவதில் காட்டிய ஈடுபாடு மகத்தானது. இளம் வயதில் வயிற்றுப் பிழைப்புக் காக ஒரு வேலை செய்து கொண்டிருந்தாலும், தின மும் குறைந்தது ஐந்து பக்கங்களாவது எழுதுவது என்று உறுதியுடன் ஓய்வு நேரங்களில் தொடர்ந்து எழுதி வந்தார். அதைத் தொடர்ந்து பத்திரிக்கைக ளுக்கும், பிரசுரங்களுக்கும் அனுப்பியும் வந்தார். எழுதி அனுப்பிய முதல் ஒன்பதாண்டுகளில் அவ ருக்குத் தாள், பேனா மை, தபால் செலவுகளுக் கான பணம் கூடக் கிடைக்கவில்லை என்பது தான் கசப்பான உண்மை.

ஓரிரு தோல்விகளைக் குறுகிய காலத்தில் சந்தித் தாலே மனம் ஒடிந்து போகும் மனிதர்கள் மத்தியில் ஒன்பதாண்டு காலம் தொடர்ந்து சந்தித்த தோல் விகளையும் பொருட்படுத்தாமல், தொடர்ந்து எழுதி பிற்காலத்தில் பிரபலமாகி மிகப்பெரிய செல்வந்தரானார். அவர் எழுத்து இன்றளவும் பேசப் பட்டும், மேற்கோள் காட்டப்பட்டும் வருகிறது என்பது வரலாறு.

இவர்கள் எல்லாம் துவக்கத்தில் சந்தித்த எதிர்ப் புகளும் தோல்விகளும் கொஞ்ச நஞ்சமல்ல. வெற்றி சுலபமாக வந்து விடவில்லை. இடைக் காலத்தில் விதி என்று தீர்மானித்துக் கொண்டு தங் கள் பாதைகளில் இவர்கள் திரும்பிப் போய் விட வில்லை. தங்கள் பார்வைகளையும், ஈடுபாடுகளை யும் வேறிடத்திற்குத் திருப்பிக் கொள்ளவில்லை. உலகம் தோல்வி என்ற சான்றிதழைத் திருப்பித் திருப்பித் தந்தாலும் அவர்கள் அதை ஏற்கத் தயா ராக இருக்கவில்லை. அவர்களுக்கு உள்ளே இருந்த அக்னி வெளியே இருந்த இருண்ட சூழ்நி லைகளிலும் ஒளி கொடுத்து வழி காட்டியது. வெற்றி வரும் வரை காத்திருந்தார்கள். தங்கள் விதியைத் தீர்மானிக்க மற்றவர்களுக்கு அவர்கள் அனுமதி தரவில்லை.

பொய்யான விதியை ஏற்றுக் கொண்டு முயற்சியைக் கை விட்டு விடாதீர்கள். விதியின் நாயகனான இறைவன் திறமையை உங்களுக்குத் தந்திருக்கிறார் என்றால் அது நீங்கள் வெற்றி பெறவே என்பதை மறந்து விடாதீர்கள்.

எனவே திறமை இருப்பவர்களே, ஒன்றை மட்டும் உணர்ந்து கொள்ளுங்கள். திறமை மட்டுமே போது மானதல்ல, அது வெறும் ஆரம்பம் மட்டுமே என் பதை மனதில் வையுங்கள். உடனடி லாட்டரி போல வெற்றி வந்து மடியில் விழும் என்று எண்ணா தீர்கள். தடங்கல்கள் சகஜம் என்று எதிர்பார்த்துத் தயாராக இருங்கள். உங்கள் சக்திகளை எதிர்மாறான பல துறைகளில் அடிக்கடித் தாவிசிதற டிக்காதீர்கள். தொடர்ந்து ஈடுபாடு குறையாமல் செயல்படுங்கள். தோல்விகளில் இருந்து கற்றுக் கொள்ளுங்கள். துவண்டு விடாதீர்கள். நீங்களாக ஏற்றுக் கொள்ளாத வரை தோல்வி சாசுவதமல்ல. அது வெற்றிக்கு முந்தைய இடைநிலையே. பொய் யான விதியை ஏற்றுக் கொண்டு முயற்சியைக் கை விட்டு விடாதீர்கள்.

- என்.கணேசன்

நாலு தூண்களும்..
நாலாயிரம் கேள்விகளும்...

சிறிலங்காவின் இராசதந்திரிகள்

கோபி
ஒரு பேப்பர்

இம்மாதம் 7ம் 8ம் திகதிகளில், சிறிலங்கா இராணுவத்தின் பயிற்சி கல்லூரிகளைக் கொண்ட தியத்தலாவவில் சிறிலங்காவின் வெளிநாட்டு தூரகங்களில் பணியாற்றும் அதிகாரிகளுடானான சிந்தனைப் பரிமாற்ற அமர்வுகளை சிறிலங்கா அரசாங்கம் நடாத்தியிருக்கிறது. 'இரசதந்திரப் பரப்பை 21ம் நூற்றாண்டுக் கேற்றவகையில் மீளாக்கம் செய்தல் (Reshaping the Diplomatic Landscape for the 21st century) என்ற தலைப்பில் நடைபெற்ற பட்டறையில் 36 தூதுவர்கள், 10 உயர்ஸ்தானிகள் உட்பட வெளிநாடுகளில் சிறிலங்காவின் இராசதந்திரிகளாகப் பணியாற்றும் 59 உயர் அதிகாரிகள் பங்கேற்றனர். மகிந்த, கோத்தாபாய, பசில் என இராஜபக்ச சகோதரர்களும், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் காமினி லக்ஸ்மன் பீரிஸ், புலனாய்வுதுறையின் உயரதிகாரி கப்பில ஹெந்த விதாரண ஆகியோர் கலந்து கொண்டு உலையாற்றியுள்ளனர். இந்த அமர்வுகளில் விவாதிக்கப்பட்ட விடயங்களில், 'விடுதலைப்புலிகளின் எச்சங்கள்' என சிறிலங்கா அரசாங்கத்தால் அழைக்கப்படும் தமிழ் அலைந்துழல்வு (diaspora) அமைப்புகளினை எவ்வாறு எதிர்கொள்வது என்பது முக்கிய இடம் பிடித்துக் கொண்டமை ஆச்சரியப்படத்தக்க விடயமல்ல. ஏனெனில் தீவிலுள்ள தமிழ் மக்களையும், அவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்புகளையும் இராணுவத்தின் கிடுக்குப்பிடியில் வைத்திருக்கும் சிறிலங்கா அரசிற்கு வெளிநாடுகளிலுள்ள தமிழ் அமைப்புகளே பெருத்த சவாலாக அமைகின்றன.

இரு துருவங்களாக இருக்கும் தமிழ் அலைந்துழல்வு சமூகத்திற்கும், சிறிலங்கா ஆட்சி மையத்திற்கும் இடையில் இணக்கப்பாட்டை ஏற்படுத்துவதற்கு மேற்குலக சக்திகள் முனைப்புக் காட்டி வருகின்றன. தற்போதைய சிறிலங்கா அரசாங்கத்தை தவிர்த்தாலும், ஐக்கிய தேசியக்கட்சி உள்ளிட்ட ஏனைய சிங்கள அரசியற்கட்சிகளுக்கு ஏற்புடைய வகையில், தமிழ் மக்களின் குறைந்தபட்சக் கோரிக்கைகள் அமையவேண்டும் என்பதில் மேற்குலக சக்திகள் அக்கறை செலுத்தி வருகின்றன. இப்பத்தியில் அடிக்கடி சுட்டிக்காட்டி வருவது போல், தமிழ்த் தேசிய இனத்தின் அரசியல் அபிலாசைகளை ஏற்றுக் கொள்ளும் நிலையில் மேற்குலக சக்திகள் இல்லை. அவை ஆகக்குறைந்தது ஈழத்தமிழ் மக்களை சிறுபான்மை சமூகமாகக் கருதாமல் ஒரு தேசிய இனமாக அங்கீகரிப்பதனைக்கூட தவிர்த்து வருகின்றன. ஆகவே ஒற்றையாட்சி முறைக்குள், சிறுபான்மை இனங்களின் உரிமைகளை உறுதிசெய்தல் என்ற அடிப்படையிலேயே தீர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இப்பின்புல யதார்த்தத்தை வைத்தே, சில தமிழ் அமைப்புகளின், அதிலும் குறிப்பாக இந்தியாவுடனும், மேற்குலக சக்திகளுடன் உறவுகளைப்பேணி வரும் தமிழ் அமைப்புகளின், நடவடிக்கைகளை அவதானிக்க வேண்டியுள்ளது. மேற்குலக சக்திகளின் எதிர்பார்ப்புகள் பற்றி, அவர்களது இராஜதந்திரிகள் குறிப்பாக எரிக் சூல்ஹெய்ம், ரொபர்ட் ஒபிளேக் போன்றவர்கள் வெளிப்படையாகக் கூறும் கருத்துகளிலிருந்தும், தனிப்பட்ட சந்திப்புகளில் அவர்களால் பரிமாறப்பட்டதாகத் தெரியவரும் கருத்துகளிலிருந்தும் அறியக் கூடியதாகவுள்ளது. ஆகவே இதில் இரகசியம் எதுவுமிருப்பதாகத் தெரியவில்லை.

இந்த வகையில், இன்று மேற்குலக சக்திகளின் நம்பிக்கையைப் பெற்ற அமைப்பாக மாறியுள்ள உலகத்தமிழர் பேரவையினது நடவடிக்கைகளும் தமிழ் மக்களினது கவனத்தைப் பெற்றுள்ளன. அண்மையில் இவ்வமைப்பு தமது உத்தேச செயற்திட்டங்களை விளக்குவதற்காக ஒரு கூட்டத்தினை இலண்டனில் நடாத்தியிருந்தது. தமது கடந்த கால செயற்பாடுகள் பற்றியும் எதிர்காலத் திட்டங்கள் பற்றியும் மக்களுக்கு விளக்குவதற்காக இக்கூட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இக்கூட்டத்தில், பேரவையின் தலைவர் இமானுவல் அடிகளார் மற்றும் அதன் பேச்சாளர் சுரேன் சுரேந்திரன் ஆகியோர் உரையாற்றியதுடன் கூட்டத்தில் கலந்துகொண்டவர்களின் வினாக்களுக்கும் விளக்கமளித்தனர். அழைப்பின் அடிப்படையில், சற்றேறக் குறைய ஐம்பது பேர் வரை கலந்து கொண்ட இக் கூட்டத்தில், கேள்வி நேரத்தின் போது, இருபத்துமூன்று வினாக்கள்? உலகத்தமிழர் பேரவையை நோக்கி தொடுக்கப்பட்டன. கேள்வி நேரத்தின் இறுதிப் பகுதியில் இடம்பெற்ற வாக்குவாதங்களினால், பிரித்தானிய தமிழர் பேரவையின் உறுப்பினர் ஒருவர் கூட்டத்திலிருந்து வெளியேறுமாறு பணிக்கப்பட்டார் என்பதைத்தவிர, சில இணைய ஊடகங்களில் தவறாக விபரிக்கப்பட்டுள்ளது போல் வேறு குழப்பங்கள் எதுவும் இடம்பெறவில்லை.

உலகத்தமிழர் பேரவையினர் தமது எதிர்காலத் திட்டங்கள் நான்கு தூண்களை அடிப்படையாகக் கொண்டதாகவும் அதனடிப்படையிலேயே தமது செயற்பாடுகள் அமையவிருப்பதாகவும் இக்கூட்டத்தில் அறிவித்தனர். அந்த நான்கு தூண்களாக பினவரும் விடயங்கள் அமைந்துள்ளன.

1. தமிழ் அமைப்புகளுக்கிடையில், அடிப்படை விடையங்களில் குறைந்த பட்ச அளவிலாவது இணக்பாட்டை ஏற்படுத்தி ஒரு உடன் பாட்டினை கொண்டு வருதல்?

2. சிறிலங்காவின் தென்பகுதியிலுள்ள குடிசார் அமைப்புகளுடன் தொடர்பாடலைப் பேணுதலும், சிறிலங்காவிற்கு எதிரான பொருளாதார தடைகளை கொண்டுவருதலும்

3. போர்க்குற்றச் சாட்டுகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு தொடர்ந்து சர்வதேசத்தை வலியுறுத்துதல்

4. தாயகத்தில் மீள்வாழ்வு, புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்காக, சர்வதேச மட்டத்தில் பிரபலமானவர்களை இணைத்து தொண்டு நிறுவனம் ஒன்றை நிறுவுதல்

வழமையாக தமிழ்த் தேசிய அமைப்புகள் வலியுறுத்துவது போன்று, வட்டுக்கோட்டைத் தீரமானம், திம்புக் கோட்பாடு, தாயகம் தேசியம் தன்னாட்சியுமை அடிப்படையிலான எந்த அம்சமும் குறித்த நான்கு தூண்களில் வெளிப்படையாகத் தெரிவிக்கப்படவில்லை. அவை உட்கிடையாக அமைந்துள்ளதாக மேற்படி கூட்டத்தில் வாய் மொழியாகக் கூறப்பட்டது. தனித்து இந்த நான்கு தூண்களை வைத்து கணிப்பிடுவோமானால், அலைந்துழல்வு சமூகத்தில் உருவாகியுள்ள காத்திரமான ஒரு அரசியல் அமைப்பு என்ற நிலையிலிருந்து, ஒரு லொபி (Lobby) அமைப்பாக உலகத் தமிழர் பேரவை தரங்குறைக்கப்பட்டுள்ளது என்றே கருத வேண்டியுள்ளது. உலகத் தமிழர் பேரவையானது மேற்குலக சக்திகளுடன் ஒத்திசைவாக செயற்படுவதற்கு இவ்வாறான நடைமுறைகளை கடைப்பிடிக்க வேண்டியுள்ளது என்ற அவர்களது தரப்பு நியாயத்தை ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் இந்நடவடிக்கைகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை திருப்திப்படுத்தத் தவறுமாயின், பேரவையின் இருப்பே அர்த்தமற்றதாகிவிடும் என்பதனை அதன் தலைவர்கள் அறிந்து வைத்திருப்பது நன்று.

◆ **தமிழ் அமைப்புகளை இணைத்து தீர்மானம்**

தமிழ் அமைப்புகளை குறைந்த பட்ச விடயங்களிலாவது சம்மதிக்க வைத்து, அவர்களை ஒரு பொது வேலைத் திட்டத்தில் கொண்டு வரும் முயற்சிகள் புதுமையானவை அல்ல. இந்திய அரசாங்கத்தின் அனுசரணையுடன் நடைபெற்ற திம்புப் பேச்சுவார்த்தை முதற்கொண்டு இம்முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. போருக்கு பிந்திய காலத்தில், 2009 இன் இறுதிப்பகுதியில் தாயகத்திலுள்ள தமிழ் அரசியற்கட்சிகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்ட ஒரு கூட்டம் ஜெனிவாவிலும், புலம் பெயர் தமிழ் அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்ட சந்திப்பு ஒன்று வியன்னாவிலும் நடைபெற்றன. இந்த இரண்டு சந்திப்புகளினையும் மேற்குலக சக்திகளே ஏற்பாடு செய்தன, கலந்து கொண்டவர்களுக்கான பயண, தங்குமிட செலவுகளையும் இவர்களே கவனித்துக் கொண்டனர்.

இதன் தொடர்ச்சியாக, அலைந்துழல்வு தமிழ் சமூகத்தில் இயங்கும் அமைப்புகள், குறிப்பாக உலகத்தமிழர் பேரவை, நாடுகடந்த அரசாங்கம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆகியவை இணைந்து ஒரு பொதுப்பிரகடனம் ஒன்றை வெளியிடவேண்டும் என்ற எதிர்பார்ப்பு மேற்குலக சக்திகளிடமிருந்து வெளிப்பட்டுள்ளது. தென்னாபிரிக்க நிறவெறிக்கெதிரான போராட்டத்தில் ஈடுபட்ட அமைப்புகளின் ஒருங்கிணைவாகக்க கொண்டுவரப்பட்ட 'ஹராரே பிரகடனத்தை' (Harare Declaration) ஒத்ததான ஒரு பிரகடனத்தை மேற்படி அமைப்புகள் இணைந்து வெளியிடவேண்டும் என மேற்குலக சக்திகள் விரும்புவதாகத் தெரிகிறது. இதனையே *ஒரு பேப்பர்* 172 இதழில் இப்பத்தி 'தென்னாபிரிக்க பிரகடனம்' எனக்குறிப்பிட்டிருந்தது.

> இந்நடவடிக்கைகள் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை திருப்திப்படுத்தத் தவறுமாயின், பேரவையின் இருப்பே அர்த்தமற்ற தாகிவிடும் என்பதனை அதன் தலைவர்கள் அறிந்து வைத்திருப்பது நன்று.

தமிழத் தேசிய் அமைப்புகளிடையே, தனி நபர் ஆளுமைச் சிக்கல்கள், சந்தேகங்கள், போட்டிகள் காணப்படுகின்றபோதிலும், தமிழ் மக்களின் அரசியல் தீர்வு விடயத்தில பொருட்படுத்த முடியாதளவு குறைந்தளவு கருத்து வேறுபாடுகளே காணப்படுகிறது. அன்று திம்பு பேச்சுவார்த்தையில், ஒருமித்த தீர்மானத்திற்கு வருவதில் முரண்பட்டு நின்ற தமிழரமைப்புகளிடையே சிக்கல்கள் இருக்கவில்லை. அதே போன்ற நிலையே இப்பொழுதும் காணப்படுகின்றது. சிறிலங்கா அரசாங்கத்துடன் இணைந்து செயற்படும் ஒருசில தமிழ் கட்சிகளை இவ்விடயத்துடன் இணைத்துக் கொள்ள வேண்டியதில்லை.

வெளித்தரப்புகளின் விருப்பிற்கேற்ப ஒரு பிரகடனத்தை வெளியிடுவதற்கு எல்லாத் தமிழரமைப்புகள் உடன்படுமா என்பதில்தான் மேற்குலக சக்திகள் சந்தேகம் கொண்டுள்ளன. ஆகவே தமக்கு ஒத்திசைவாகச் செயற்படும் தரப்புகளை, முன்னிறுத்தி அவர்களினூடாக தமக்கேற்ற முறையில் ஒரு பிரகடனத்தை வெளியிடுவதற்கான முயற்சிகளில் அவை இறங்கியுள்ளன. இவ்வமைப்புகளை ஊக்குவிப்பதற்காக பாரிய நிதியுதவிகளை செய்யவும் இவை தயாராக இருப்பதாகத் தெரிகிறது.

தனித்து குறித்த சில அமைப்புகளுடன் குறுக்கி விடாமல், தாயகத்தில் செயற்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, குடிசார் சமூகம் ஆகியவற்றுடன் அலைந்துழல்வு சமூகத்திலுள்ள முக்கிய அமைப்புகளும் இணைந்து ஒரு பிரகடனத்தை வெளியிடுவார்களேயானால் அது ஈழத்தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்திய தாக அமையும் என எதிர்பார்க்கலாம். மற்றய எல்லா முயற்சிகளையும் நாம் சந்தேகத்துடனேயே பார்க்க வேண்டியுள்ளது.

ஒரு பேப்பர்

கிடைக்குமிடங்கள்

New Malden
Ayngaran 020 8949 6734
Megaa Superstore .. 020 8336 0061
Vaaniyan 020 8605 0434
Murugan Kovil 020 8942 4475
Vaishna Superfoods 020 8399 4488
Stoneleigh Amman . 020 8393 8147

Tooting
Yhaal House 020 8767 8585
Rainbow Restaurant. 020 8640 4230
Amman Kovil 020 8795 4258
Niru Con.Store 020 8672 3200
Ayngaran 020 8540 1500
Suvai Aruvi..... 020 8543 6266
Adchaya 020 8540 8192

Croydon
Best Foods..... 020 8684 6269
Haran Bros..... 020 8686 2552
Chennai dosa 020 8665 9192
Eelam Video..... 020 8664 8351
Spice Land..... 020 8667 1700

Lewisham
Chandra 020 8333 8680
Eelam Shop 020 8690 6545
Katpagam 020 8694 8810
AJ Video 020 8691 8888
Sivan Kovil 020 8318 9844
KRS 020 8297 9432

Eastham
Seelans..... 020 8471 5733
Sakthi Cash & Carry 020 8394 4560
Murugan Temple..... 020 8478 8433
Station Super Store 020 8503 4711
Best Food 020 8552 9578
Akilan Enterprise 020 8548 0033

Ilford
Vinnayagar Kovil..... 020 8911 8934
Nathan 020 8514 1744
Angels 020 8553 0490
Sri Supermarket .....

Edmonton
New Kannan Stores 020 8884 4979
Sayas..... 020 8805 9529
Nagapoosani Temple020 8884 3333

Walthamstow
Vinayagar Kovil..... 020 8527 3819
Kumarans 020 7609 1912
Prabas 020 8509 3322

Harrow
Tsk food & Wine 020 7622 4258
Eelavan 020 8863 6160
Prabhas 020 8866 0977
South Harrow F&W. 020 8423 6321
Best foods..... 020 8423 9933
Sambal Express..... 020 8799 7171

Wembley
Malar Super Market 020 8795 5797
Ganapathy C & C..... 020 8795 4627
Best foods..... 020 8900 0100
Vahizan Disc 020 8795 0648

Ealing
Amman kovil..... 020 8810 0835

Greenford
Ambiha 020 8813 0967

Coventry
Eellakanthan Temple...02476663554

South hall
Thamilini C & C..... 020 8606 9900
Duvaraka C & C 020 8813 9126
Palm Palace 020 8574 9209
Spicy Palace restaurant 020 8574 4087
Luxmys C & C..... 020 8571 4599
Tamilan C & C..... 020 8561 8174
Lady Margret 020 8571 4434

அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்

நற்பொருள் பெறுதல் வேண்டின் நலமெலாம் பெருக வேண்டின் அற்புத மூர்த்தியாம் கற்பக கணபதியின் பொற்பதம் பணிந்திடவாரீர்

11ம் ஆண்டு வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

17.08.2012 முதல் 29.08.2012

இடர் களைந்து இன்னருள் புரியும் ஸ்ரீ கற்பக விநாயகப்பெருமான் ஆலயத்தில் நிகழும் மங்களகரமான கர வருட மகோற்சவம் மேற்கண்ட திகதியில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது

தினசரி உற்சவங்கள்

17.08.2012	வெள்ளி	கொடியேற்றம்	மூஷிகவாகனக்காட்சி
18.08.2012	சனி	2ம்திருவிழா	தூர்வா[அறுகு]கணபதிஉற்சவம்
19.08.2012	ஞாயிறு	3ம்திருவிழா	சக்திகணபதிஉற்சவம்
20.08.2012	திங்கள்	4ம்திருவிழா	புஷ்பகணபதிஉற்சவம்வேதபாராயணத்திருவிழா
21.08.2012	செவ்வாய்	5ம்திருவிழா	பக்திமுக்திபாவனோற்சவம்திருமுறைபாராயணம்
22.08.2012	புதன்	6ம்திருவிழா	வசந்தஉற்சவம்[இசைநிகழ்ச்சி]
23.08.2012	வியாழன்	7ம்திருவிழா	மாம்பழத்திருவிழா
24.08.2012	வெள்ளி	8ம்திருவிழா	வேட்டைத்திருவிழா
25.08.2012	சனி	9ம்திருவிழா	சப்பறத்திருவிழா
26.08.2012	ஞாயிறு	10ம்திருவிழா	தேர்த்திருவிழா
27.08.2012	திங்கள்	11ம்திருவிழா	தீர்த்தம்
28.08.2012	செவ்வாய்	12ம்திருவிழா	பூங்காவனம்திருக்கல்யாணம்
29.08.2012	புதன்	13ம்திருவிழா	வைரவர்மடை

26.08.2012 ஞாயிறு தேர்த்திருவிழா

நன்றி.
இங்ஙனம், ஆலய நிர்வாகம், உபயகாரர்கள்.

தினமும் இரவில் விசேட தவில் நாதஸ்வர கச்சேரி
8.30 & 9.30 மணிகண்டன் குழுவினர்

31.08.2012 ஞாயிறு மணவாளக் கோத் திருவிழா
[1008] சங்காபிஷேகம் விசேட பூஜை, திருவீதி உலா

19.09.2012 வியாழன் : ஆவணிச்சதுர்த்தி, பஞ்சமுக விநாயகப் பெருமானுக்கு சங்காபிசேம், காலை 8.00 மணி 1008பாற்குட அபிசேகம், இரவு பஞ்சமுக அர்ச்சனை விசேட திருவிழாக் காலங்களில் இரவு வசந்தமண்டப பூசை 7.00 மணிக்கு நடைபெறும்.

23.09.2012 ஞாயிறு பிள்ளையார் கரைப்பு

ஞாயிற்றுக்கிழமை 23.09.2012 திருமஞ்சன தீர்த்த திருவிழா

வோல்தம்ஸ்ரோ ஸ்ரீகற்பக விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி தினத்தை முன்னிட்டு மூலமூர்த்தி விநாயகருக்கு விஷேட பாற்குட அபிஷேகம் காலை 7.00 மணி முதல் நடைபெறும். அன்று விஷேடமாக சதுர்த்தி கலாரூப விநாயகர் வழிபாடு நடைபெறும். பின்பு அவ்விநாயகத் திருவுருவம் 23.09.2012 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் புறப்பட்டு Clacton on Sea கடற்கரையில் தீர்த்த நிமஜ்ஜன பெருவிழாவுடன் விநாயக திருவுருவம் நீர் நிலையில் சேர்க்கப் படும். இவ்விழாவில் கலந்து கொள்ளும் அடியார்கள் ஆலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

ஆலய நிர்வாகம், கற்பக விநாயகர் ஆலயம் தொண்டர் அமைப்பு
தொடர்புகட்கு: 020 8527 3819, 07985 213 503

Paradise Travel & Tours Ltd
we keep our promises

PARADISE TRAVELS & TOURS LTD
No.1 Olympic Way,
Wembley, Middlesex,
HA9 0NP

T: 0208 166 8579
F: 0208 166 5100
E: ragu@paradisetravels.co.uk
W: www.paradisetravels.co.uk

IATA
ATOL PROTECTED

- Flights worldwide
- Hotel Booking
- Travel Insurance
- Package Holidays
- Visa Services

Sri Lanka
5 Star Hotel 7 Nights
Including Flights & Transfer
from £699
T&C Applies

Bangkok/ Hong Kong
£225+TAX

Bombay, Delhi
£199+TAX

Singapore/ Malaysia
£300+TAX

Kerala Holiday
Very Special Offer By Paradise Travels & Tours only
2 Nights Houseboat 3 Nights Kovalam Beach
2 Nights Munar Kerala
Including Flights, Transfer, Meals and Travel Insurance
All These just for £699 per person.

Colombo
£225+TAX

Dubai
from
£109+TAX

Canada
from
£99+TAX

Chennai
£199+TAX

All Major Credit Cards Accepted

Maestro VISA MasterCard DELTA

SriLankan QATAR Emirates ETIHAD

Your Magical Gateway Into The World

0208 166 8579

Mobile
07768194124

விடுதலைப்புலிகள் மீதான தடை நீடிப்பும் கருணாநிதியின் டெசோ மாநாடும்

இரண்டு வருடத்திற்கு ஒரு முறை நடை பெறும் விடுதலைப்புலிகள் இயக்கம் மீதான தடைச் சடங்கு நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதனை நியாயப்படுத்தும் வகையில் பல காரணிகளை இந்திய உள்துறை அமைச்சர் வெளியிட்டுள்ளது.

இந்தியத் தேசிய ஒருமைப்பாட்டிற்கும் இறை மைக்கும் தமிழீழக் கோரிக்கை அச்சுறுத்தலாக அமையுமென்பதே இதன் சாராம்சம்.

இதில் தேசிய ஒருமைப்பாடு என்கிற வார்த் தைப் பிரயோகம், விடுதலைப் புலிகளையும் தேசியத் தலைவர் பிரபாகரனையும் முன்னி றுத்திதமிழகத்தில்மேற்கொள்ளப்படும்ஈழவிடு தலைக்கு ஆதரவான போராட்டங்கள் தமிழ கத்தை இந்தியாவிலிருந்துபிரித்துவிடுமோ என் கிற கற்பிதத்தில் உருவாக்கப்பட்டது.

ஆனால் இலங்கையுடன் ஒரு மூலோபாய உடன்படிக்கையை எட்டுவதற்கு, தமிழீழ விடு தலை இயக்கங்களுக்கு 80 களில் உதவி செய் யும் போது, இந்த இறைமைப் பிரச்சினையோ அல்லது ஒருமைப்பாட்டுச் சிக்கலோ இந்தியா விற்கு ஏற்படவில்லை.

ஆகவே ஈழவிடுதலைப் போராட்டத்தை அழுத் தக் கருவியாகப் பயன்படுத்தி, இந்திய-இலங்கை ஒப்பந்தத்தை ஏற்படுத்தியதோடு, தனது நல னைச் சாதித்துக் கொண்டது இந்தியா.

2006இற்குப் பின்னர் இலங்கையில் ஏற்பட்ட மாற்றங்கள், சீனாவின் உள்நுழைவு போன்றவை, அடிப்படைக் கோட்பாட்டில் உறுதியாகவிருந்த விடுதலைப் புலிகளுக்கு எதிரான நிலைப்பாட் டினை மேற்கொள்ள இந்தியாவைநிர்ப்பந்தித்த தோடு, வெளிப்படையாகவே இலங்கை சார்பு நிலைமை எடுக்க வைத்தது.

ஆனாலும் 2009 முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பின் பின்னர், போட்டி வல்லரசுகளின் ஆதிக் கம் அதிகரித்து, இந்தியாவை இலங்கை விவ காரத்திலிருந்து தனிமைப்படுத்தும் அளவிற்கு சென்று விட்டதைக் காணலாம்.

இன்று இராணுவ மயமாகும் இலங்கையின் ஆட்சியதிகாரக் கட்டமைப்பு, பல எச்சரிக்கை களை இந்தியாவிற்கு விடுத்துக் கொண்டிருக் கிறது.

ஆகவே தாம்பரத்திலும், குன்னூர் வெலிங் டன்பயிற்சிமுகாம்களிலும்,இலங்கைப்படையி னருக்கு பயிற்சி அளிப்பதன் ஊடாக, படைத் தரப்போடு ஒரு சுமுகமான நீண்ட எதிர்கால நலன் சார்ந்த உறவினை ஏற்படுத்திக் கொள் ளலாமாவென்று இந்தியா பரீட்சித்துக் பார்க் கிறது.

வேற்று நாட்டு இராணுவத்திற்கு பயிற்சி அளிக்கும் வல்லரசுகள், இருதரப்புநலன்களை வளர்த்தெடுப்பதற்கு இதனைப் பயன்படுத்து வதை காணக்கூடியதாகவுள்ளது.

இவை தவிர இந்தியாவின் அதிவேக போர்க் கப்பலொன்று திருமலைத் துறைமுகத்தை வந்தடைந்துள்ள செய்தி இதனை மேலும் உறு திப்படுத்துகிறது.

தமது மண்ணில் இலங்கைப் படையினருக் குப் பயிற்சி அளிப்பதும், அவர்கள் மண்ணில் அவர்களோடு பரஸ்பர உறவினை ஏற்படுத்து வதும் இதன் ஒரு அங்கமாகும்.

ஆனாலும் இலங்கை அரசோடு படைத் தரப்பு உறவினைப் பலப்படுத்த மேற்கொள்ளும் முயற்சிக்கு, தமிழகம் தடைக்கல்லாக இருப்பது இந்தியமத்திய அரசிற்கு விசனத்தை ஏற்படுத்து கிறது.

விடுதலைப்புலிகளின் மீதான தடை நீடிப்பு ஊடாக தமிழகத்தின் எதிர்ப்புக் குரலை அடக்க, தேசிய ஒருமைப்பாடு, இறைமை என்கிற அஸ் திரங்களைப் பிரயோகிக்க இந்தியா முற்படு வதை அதன் நலன் சார்ந்து புரிந்து கொள்ள லாம்.

இந்தியாவைப் பொறுத்தவரை அதன் பிராந்திய மூலோபாய நலன், முழு இலங்கை யையும் சார்ந்து இருக்கிறது.

இலங்கையின் ஒருமைப்பாட்டிற்கு குந்தகம் ஏற்படாதவகையில், தேசிய இன முரண்பாட் டிற்கான தீர்வு எட்டப்பட வேண்டும் என்கிற இந் தியாவின் பார்வை, இதனடிப்படையில் இருந்து கட்டமைக்கப்படுவதைக் காணலாம்.

அதேவேளை வட-கிழக்கில் சிங்களத்தால் மேற்கொள்ளப்படும் நில அபகரிப்பு குறித்துப் பேசுவதை இந்தியா தவிர்ப்பது ஆச்சரியமான விடயமல்ல.

இருப்பினும் இரு நாடுகளுக்கிடையிலான உறவுகள் அண்மைக் காலமான பலவீனமடை வதை இந்திய உயரதிகாரிகளின் இலங்கைப் பயணங்கள் மறைமுகச் சுட்டிக்காட்டுவதையும் நோக்க வேண்டும்.

இரு தரப்பு உறவு நிலை, முறிவு நிலையினை எட்டாதவாறு பார்த்துக் கொள்வதற்கு, இப் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டாலும், தெற் காசியாவில் விரிவடையும் சீன ஆதிக்கம் குறித்து இந்தியா கவலையடைவதை நேபாளம் மற்றும் பூட்டான் தூதுவர்களை அழைத்து இந் திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் கலந்துரையாடியது கவனிக்கத்தக்கது.

நேபாளத்தில் 36, மாலைதீவில் 8, இலங்கை யில் 12, பங்களாதேசில் 9 என்கிற வகையில் பாரிய முதலீட்டுத் திட்டங்களை மேற்கொள் ளும் உலகின் இரண்டாவது பெரிய பொருளாத ாரர வல்லரசாகத் திகழும் சீனாவின் ஆதிக் கத்தை எதிர்கொள்ள, சில அவசர நகர்வுகளை இந்தியா மேற்கொள்ள முயற்சிக்கிறது.

இந்நிலையில் 1985 இல் ஆரம்பிக்கப்பட்ட தமி ழீழ ஆதரவு அமைப்பினை (டெசோ) மறுபடி யும் தூசிதட்டிக் கையிலெடுத்துள்ளார். தி.மு.க. தலைவர் கருணாநிதி.

இந்திய மத்திய அரசின் ஆட்சியதிகாரத்தில் பங்கு வகிக்கும் கருணாநிதி அவர்கள், இலங்கை-இந்திய இராஜதந்திர உறவில் சிக்கல் ஏற்பட் டுள்ள இத்தருணத்தில், டெசோவை ஏன் தூக் கிப் பிடிக்கின்றார் என்கிற கேள்வி எழுகின்றது.

அரசியல் பார்வை

இதயச்சந்திரன்

இவரின் ஈழத்தமிழர்களின் பால் கொண்ட பெரு விருப்பினை, முள்ளிவாய்க்கால் இனஅழிப் பின் போது நாம் கண்டு கொண்டோம். அப்போது டெசோ அமைப்பு கோமா நிலையில் இருந்தது.

போர் நிறுத்தப்பட்டு விட்டது என்று பொய்யு ரைத்த கருணாநிதி, இலட்சக் கணக்கான மக்கள் கொல்லப்படுவதை தமிழக மக்களுக்கு மூடி மறைத்தார் என்கிற குற்றச்சாட்டு பரவலாக இருக்கிறது.

இந்திய மத்திய அரசின் பிராந்திய நலனிற்கு துணை போகவேண்டிய அவசியத்தால், சொந்த இனம் அழிக்கப்படுவதை அவர் அனுமதித்தார் என்பது தான் உலகத் தமிழினத்தின் கருத்து.

இப்போதும் அதே பிரச்சினை தான் அவருக்கு.

கடந்த சட்ட மன்றத் தேர்தலில் சந்தித்த படுதோல்வி, இடைத்தேர்தல்களில் கூட்டுச் சேராமல் தனித்து நின்று வெற்றி வாகை சூடும் ஜெயலலிதா அம்மையாரின் ஆளுமை, காங்கி ரஸை தமிழகத்தில் செல்லாக் காசாக்கிய சீமா னின் திடீர் எழுச்சி என்பன. நிரந்தமான அரசி யல் சரிவினை தி.மு.க.விற்கு ஏற்படுத்தி விடுமோ என்கிற அச்சத்தால், ஈழப்பிரச்சினையை டெசோ ஊடாக தூக்கிப் பிடித்து, சரியும் செல்வாக்கை நிமிர்த்த முயல்கிறார் கருணாநிதி. அதே வேளை காங்கிரசிற்கும் இம்மாநாடு தேவைப்படுகிறது.

தி.மு.க. தனது மக்கள் செல்வாக்கினை அதிகரித்தால் மட்டுமே, அடுத்த நாடாளுமன் றத் தேர்தலில் அதனோடு கூட்டுச் சேர்ந்து சில ஆசனங்களையாவது பெறலாம் என்று காங் கிரஸ் கணக்குப் போடுகிறது.

ஆனால் இம்மாநாட்டில் 'தமிழீழம்' தான் ஒரே தீர்வு என்கிற தீர்மானத்தை நிறைவேற்றி, தனது எதிரிகளின் காலடியில் ஒரேயடியாக இலங்கை அரசு வீழ்ந்து விட வழியேற்பட்டு விடக் கூடாதென்கிற எச்சரிக்கை உணர்வும் இந்திய மத்திய அரசிற்கு இருக்கிறது.

அத்தோடு, இந்த டெசோ மாநாட்டின் ஊடாக, விலகிச் செல்லும் இலங்கை அரசிற்கு, அச்சுறுத் தும் செய்தி ஒன்றினைக் கொடுக்கலாமெனவும் மத்திய அரசு திட்டமிடுகிறது.

ஆனால் இம்மாநாட்டில் "தமிழீழம்" தான் ஒரே தீர்வு என்கிற தீர்மானத்தை நிறைவேற்றி, தனது எதிரிகளின் காலடியில் ஒரேயடியாக இலங்கை அரசுவீழ்ந்துவிட வழியேற்பட்டுவிடக் கூடாதென்கிற எச்சரிக்கை உணர்வும் இந்திய மத்திய அரசிற்கு இருக்கிறது.

இதனை மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தின் வேண்டுகோள் மேலும் உறுதிப்படுத்துகிறது.

இதனையடுத்து, இரணங்களை ஆற்றுவதும், பசியைப் போக்குவதும், வாழ்வாதாரங்களை வளப்படுத்துவதுமே இன்றைய தேவை எனக் கூறும் கருணாநிதி, ஒரு அரச சார்பற்ற தொண்டு நிறுவனம் (NGO) போல் பேச ஆரம்பித்துள்ளார்.

அத்தோடு தனி ஈழத்திற்கான போராட்டம், கிளர்ச்சி எதுவுமில்லை என்றும் தெளிவாகச் சொல்கிறார்.

ஆகவே, டெசோ மாநாட்டின் மூலம் பிறப் புரிமைக் கோட்பாட்டில் உறுதியாகவிருக்கும் ஈழத்தமிழ் மக்களுக்கு எதுவித பலனுமில்லை என்பதே உண்மை.

சரிந்துவரும் மக்கள் ஆதரவினை மீளப் பெறுவதற்கு, ஈழமக்களின் வாழ்வுரிமைப் போராட்டத்தை மறுபடியும் தனது கரங்களில் எடுத்துள்ளார் கருணாநிதி.

டெசோ வரவேற்புக் குழுவில் இருக்கும் இராத கிருஸ்ணன் என்பவர், புலம்பெயர் அமைப்புக்க ளையும், தனி நபர்களையும், ஈழ ஆதரவு ஊடக ங்களையும் அணுகிக் கொண்டிருக்கிறார்.

கருணாநிதியின் பொறிக்குள் சிக்கி, தமி ழகத்தில் நிரந்தரமாக இருக்கும் ஆதரவுச் சக்தி களை நாம் இழக்கக்கூடாது.

குருதியில் உறைந்த தேசத்திற்கு, புதிய படிப் பினைகள் தேவையில்லை.

Come Directly to a...

TAMIL SPEAKING BARRISTER

For expert legal advice & represenation in Criminal and Immigration law

Criminal Litigation
- Money Laundering
- Serious Fraud
- VAT / Tax investigations
- Confiscation & proceeds of crime
- Appeals against conviction and sentence.
- Regulatory / Health & Safety Investigations

Immigration
- Nationality
- Asylum
- EU Law
- Visas (Tiers1-5, Resident Permits, Indefinite Leave to remain)
- Judicial review

அனைத்து சட்ட ஆலோசனைகளுக்கும்...

Services Includes:

Flexible consultancy times & police station representation can be arranged(24 hours).

சகல விதமான குடிவரவு ஆலோசனைகளையும் நிபுணத்துவத்துடன் செய்து தர அழையுங்கள்....

For Appointments
Contact: 07837 450397
Email: mganesan@furnivallaw.co.uk

Chambers:
Furnival Chambers, 32 Furnival Street, London, EC4A 1JQ.

Muthupandi Ganesan
முத்துப்பாண்டி கணேசன்
LL.B(Hons)(Wales),LL.M(Criminal Litigation)
Barrister-at-Law [Direct Access]

சுகி

(ஒரு பேப்பருக்காக)

ஆங்கிலேயரோடு ஒப்பிடும் இடத்து எம்மிடம் அதிகமாக ஏன் என்றுகேள்விகள் பலகேட்காது, சொல்வதை செய்யும் பழக்கமும், அதே நேரம் ஏன் என்று பல கேள்விகள் கேட்டுக்கொண்டு நிற்காது சொன்னதை செய்ய வேண்டும் என்று, சொல்பவர் எதிர்பார்க்கும் பழக்கமும் கொஞ் சம் தாராளமாகவே உள்ளது. ஊரில் வைத்தி யரிடம் போனால், நாக்கை நீண்டச்சொல்லி, அது இது எல்லாம் பார்த்து விட்டு, இந்தா இந்த பெரிய வெள்ளை குளிசையில் சாப்பாட்டுக்கு பின் ஒரு பாதி, சின்ன வெள்ளைக்குளிசையில் இரண்டு படுக்க முதல் என்று சொல்லி தந்து விடுவா. நாமும் கேள்வி ஒன்றும் கேட்டாமல் எல் லாம்சரிவந்துவிடும் தானே டொக்டர் என்று ஈனக் குரலில்முணுங்கிவிட்டுவந்துவிடுவோம். ஆனால் இங்குள்ள வைத்தியரிடம் போனால், அவர் குளி சையின் பெயர், ஏன் பாவிப்பது, பாவிக்காவிட் டால் என்னவரும், பாவித்தால் என்ன பக்கவி ளைவுகள் வரக்கூடும் என்று எல்லாம் விபர மாகச் சொல்லுவார்கள்.

இங்கு நடக்கும் பயிற்ச்சிபட்டறைக்கு போனா லும் எந்த கேள்வியும் முட்டாள் தனமான கேள் வியே அல்ல என்று கூறி கேள்வி கேட்பதை ஊக் குவிப்பார்கள். ஆனால் நாங்களோ கேள்விகேட் காமலே இருக்க எம்மை பழக்கப்படுத்திக் கொண்டு விட்டோம். முன்பு இலங்கையில் உள்ள அலுவலகங்களில், அலுவலங்களில் தலைமை பதவியில் உள்ளவர் வரும் வரை அவருக்கு முன்பு வந்தவர்கள் 8.40 என்று கை யெழுத்து வைத்துக் கொண்டே போவார்கள், ஒன்பது மணிக்கு தொடங்க வேண்டிய அலுவல கத்திற்கு தலைவர் 9.15க்கு வந்தாலும். அவர் தான் 9.00 வந்ததாக கையெழுத்து போட்டு, அதற்கு கீழ் ஒரு சிவப்பு மையால் கோடடித்து விட்டு அதன் கீழ் 9.05 என்று போட்டு லேற் என்று எழுதிவிடுவார். இனி பிறகு வருபவர் கள் எல்லோரும் லேற்றாக வந்ததாக கணிக்கப் படும். மூன்று தடவை லேற்றாக வந்தால் அரை நாள் லீவு வெட்டப்படும். இதை ஏன் தலை மைக்கு பொருந்தாது என்று தலைமை பதவி யில் உள்ளவர்களுக்கு எதிர்ந்து யாரும் கேள்வி கேட்பதில்லை. அப்பிடி கேட்டாலும் அவர்கள் அதை தனிப்பட்ட தாக்குதலாகவே எடுப்பார்கள்.

முன்பு இலங்கையில் உதவிஅரசாங்க அதிப ராக இருந்த ஒரு நண்பரை அவர் லண்டனுக்கு நிரந்தமாக இருக்க என்று வந்த நேரத்தில் எப் பிடி லண்டன் பிடித்துள்ளதா? வேலை எப்படி என்றுகேட்டபோது, அதையேன்கேட்கிறீர், அங்கு தன்னை எல்லோரும் மேடம்..மேடம் என்று இரண்டடி தள்ளிநின்று பணிவாக கூப்பிட்ட தற்கு இங்குள்ள அலுவகத்தில் தன்னுடைய முதல்பெயரைச்சொல்லிகூப்பிடுவதைக்கேட்க கோபம் கோபமாக வருகிறது என்றா!. ஆக மொத்தத்தில் அரசியலிலும் சரி, சமூகத்திலும் சரி அவர்கள் வகிக்கும் பதவி அவர்களுக்கு தெரிந்தோ தெரியாமலோ அவர்களின் கண் களை மறைந்து ஒருவித மமதையில் மாய்கின் றது. ஏன் என்று கேள்வி கேட்டாது தன்னைத் தொடரவேண்டும் என்ற எதிர்பார்பை அதிகரிக் கிறது. அப்பிடி கேள்வி கேட்பவர்கள் மீது தனிப் பட்ட தாக்குதலுக்கு தூண்டவும், அவர் தனிப் பட்ட காரணத்திற்குத்காதத்தான் கேள்வி கேட் கின்றார் என உறுதியாக நம்பவும் தலைப்படு கிறார்கள்.

அதற்கு காரணம் எமது கைதட்டி விசில் அடிக்கும் வழமைத்தவிர, எமது ஊடகங்களா கவும் இருக்கலாம். இங்குள்ள ஊடகங்கள் போன்று, நாட்டின் பிரதான பதவியில் உள்ளவர் களைக் கூட Hardtalk, Question time என்ற நிகழ்ச் சிகளில் பல சிக்கல்களில் ஆழ்த்தும் கேள்வி களை மிகச்சாதாரணமாக கேட்டுத் துளைத் தெடுத்திடுவார்கள். எமது ஊடங்கள் போன்று எல்லோருக்கும் தெரிந்த கேள்வியைக் கேட் கவோ, அல்லது சிக்கலான கேள்வியை மக்கள் கேட்கும்போது பாதியில் அதை இடைநிறுத் தியோ, அல்லது தொழிற்நுட்ப கோளாறுக்கு மனவருந்துகின்றோம் என்று நொண்டி சாட்டு சொல்வதோ இல்லை. அல்லது நேரடிக்கூட் டமாக இருந்தால் இங்குள்ள வெளிநாட்டு அர சியல் வாதிகள் செய்வது போன்று 10,15 கேள்வி களை சபையோரிடம் இருந்து ஒன்றாக எடுத்து விட்டு, விரும்பியதற்கு மட்டும் நீண்டி முழக்கி பதில் சொல்லிவிட்டு, மற்றக்கேள்விகளை தொட்டு போதல் அல்லது நேரம் கருத்தில் கொண்டு தொடாமலே விடுதல் போன்ற உத்திகளையும் கையாளுகின்றோம். மொத்தத்தில் ஏன் என்று கேட்டாமல், அவர்கள் பின்னால் வரவேண்டும் என்றுதான் விரும்புகிறார்கள்.

அதைவிட கேள்வி கேட்டால், அப்ப நீர் வந்து செய்யும், என்றோ அல்லது நீர் என்ன செய்தநீர் என்றோ கேட்கும் வழமையும் உள்ளது. ஒரு பத்திரிகையாளர் ஒரு தலைவரிடம் கேள்வி கேட்டால், இங்கு யாரும் அவரை, பத்திரிகைக்கு எழுதுவதை விட்டு வந்து தலைமை பதவியை ஏற்றச்சொல்லிக் கேட்பதில்லை. நாய் பார் கும் வேலையை நாய் பார்க்க வேண்டும், கழுதை பார்க்கும் வேலையை கழுதை பார்க்க வேண் டும் என்ற சொல்லாடல் எம்மிடையே உள்ளது. மக்கள் கேள்வி ஒன்றும் கேட்டவில்லை என்றா லும் கவலை கொள்ளத்தான் வேண்டும். ஒரு வேளை அப்படி ஒரு நிறுவனம் இருப்பதோ, தலைமை இருப்பதோ மக்களுக்கு தெரியாமல் இருக்கக்கூடும். அல்லது அவர்களுக்கு அதில் அக்கறையே இல்லாமல் இருக்கக் கூடும். ஆகவே கேள்விகள் வருகின்றன என்றால் மக்கள் அதில் அக்கறையாக இருக்கிறார்கள் என்று அர்த்தம். மொத்தத்தில் அதையிட்டு மகிழ்ச்சி கொள்ள வேண்டும்.

ஏன் என்று கேள்வி கேட்காது தன்னைத் தொடரவேண்டும் என்ற எதிர்பார்பை அதிகரிக்கிறது. அப்பிடி கேள்வி கேட்பவர்கள் மீது தனிப்பட்ட தாக்குதலுக்கு தூண்டவும், அவர் தனிப்பட்ட காரணத்திற்குத்காதத்தான் கேள்வி கேட்கின்றார் என உறுதியாக நம்பவும் தலைப்படுகிறார்கள்.

இங்கு சிறு வயதில் இருந்தே கேள்வி கேட்கும் ஆற்றலையும், பதிலை ஆராயும் தன்மையை யும் பிள்ளைகளில் வளர்த்தெடுக்கிறார்கள். ஆகவே இனிவரும் காலங்களை முன்னிருத்தி யாவது, மனப்பாங்கை மாற்றிக்கொள்ள வேண்டும்.

Shoptek .co.uk
A2 Asfare Business Park, Hinckley Road, Wolvey, Leicestershire LE10 3HQ
USED SHOP SHELVING
large stock of used shop shelving
NEW SHOP SHELVING
1000mm GONDOLA BAY £146+VAT
Suppliers of New and Used Shop Shelving
From our Cash & Carry Warehouse
Shoptek .co.uk Tel: 01455 221512
Email: info@shoptek.co.uk

MASS GLOBAL SHIPPING
Sea - Air - Road & Ticketing , Serving all Communities
MOST PROFESSIONAL SRI LANKAN SHIPPING COMPANY IN UK
* Packers * Movers * Shippers
Best Rate Guaranteed for Car Shipments 20ft & 40ft Containers
We Offer the Best Services than all the Other in the trade!
உங்கள் பொருட்களை ஆகாய தரை கடல் மார்க்கமாக பாதகாப்பாகவும் துரிதமாகவும் குறைந்த செலவிலும் அனுப்புவதற்கு நம்பிக்கையுடன் நாட வேண்டிய ஒரே நிறுவனம்.
Special rates for Containers and Machinery
4 Collection Points :
Harrow
Watford
Knightsbridege
Croydon
T-chest Box சென்னைக்கு அனுப்ப £40 மட்டுமே
ஒரு T-chest Box அனுப்ப £40 இரண்டு T-chest Box அனுப்ப £30
FREIGHT ONLY £15.00
FREIGHT AND BOX £15.00
(Volume 4.5Cu.ft)
Wooden boxes available
Call - 0208 3862314
Hot Line 24/7- 079 4010 8177
Local Collection Charge £10.00 upto Hounslow.
Within M1 collection charge £15.00 All other area's we will offer the best rates
MASS GLOBAL SHIPPING
N0 58 THE ARCHES, HARROW, HA2 8AA
E-Mail: info@massshipping.com, Web : www.massshipping.com
*Condition Apply - No hidden charges - No bogus promotions

சிவந்தனின் ஐந்து அம்சக் கோரிக்கையும் கோபி அனனின் ஆறு அம்சத் திட்டமும்

வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

இலங்கையில் ஒரு மக்கள் கிளர்ச்சி அடக்கப் பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால் அங்கு அப் பாவித் தமிழர்களுகு எதிரான அடக்கு முறை உச்சக்கட்டத்தில் தொடர்கிறது. சிரியாவில் ஒரு மக்கள் கிளர்ச்சி அடக்கப்பட்டுக் கொண்டிருக் கிறது. சிரியாவில் நடக்கும் அடக்கு முறையை முடிவுக்குக் கொண்டுவர ஐக்கிய நாடுகள் சபை யின் பாது காப்புச் சபையில் தீர்மானம் 2043 நிறைவேற்றப்பட்டது. அதன் படி சிரிய மக்க ளின் பிரச்சனை தொடர்பாக பேச்சு வார்த்தை நடாத்தி சிரிய மக்களின் பிரச்சனையை முடிவுக் குக் கொண்டுவர ஐக்கிய நாடுகள் சபையின் முன்னள் பொதுச் செயலர் கோஃபி அனன் ஐக்கிய நாடுகளுக்கும் அரபு லீக் நாடுகளுக் குமான தூதுவராக நியமிக்கப்பட்டார்.

இரசியா சிரியாவிற்கு படைக்கலன கள் அனுப்புவதை நிறுத்தி விட்டது. இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிப்பதை இந்தியா இன்று வரை தொடர்கிறது.

இலங்கையில் போர் உச்சக் கட்டத்தில் நடந்த போதோ அல்லது இன்றுவரை தொடரும் மக்க ளுக்கு எதிரான அடக்கு முறையின் போதோ ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை யில் எந்த ஒரு தீர்மானமும் நிறைவேற்றப்பட வில்லை. இலங்கையில் மக்கள் நாளொன்றிற்கு இருபத்தையாயிரம் பேர் வரை கொல்லப்பட்ட போது ஐக்கிய நாடுகளின் பாது காப்புச் சபை உறுப்பினர் நிலத்திற்கு கீழ் அறையில் இரகசிய மாகக் கூடினர். மனித உரிமை அமைப்புக்க ளும் சில ஊடகங்களும் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலர் பான் கீ மூன் இலங்கை செல்ல வேண்டும் என்று வலியுறுத்தியதால் ஐக்கிய நாடுகள் சபை பான் கீ மூனின் சிறப்பு ஆலோ சகர் விஜய் நம்பியாரை இலங்கைக்கு அனுப்பி யது. அவர் இலங்கை சென்று பின்னர் சாக வசமாக இந்தியாவும் சென்று நியூயோர்க் திரும் பினார். இலங்கை நிலவரம் தொடர்ப்பாக அறிக்கை சமர்ப்பிக்கும் படி அவரை கேட்ட போது அவர் மாட்டேன் என்று அடம் பிடித்தார். ஐக்கிய இராச் சியம் விஜய் நம்பியார் மீது நடவடிக்கை எடுக்கப் படும் என்று மிரட்டிய போது மீண்டும் நிலக் கீழ் அறையில் இரகசியமாக அறிக்கை சமர்ப்பிக் கப்பட்டது.

சிரிய மக்களுக்கு எதிராக நடக்கும் அடக்கு முறைகள் தினசரி உலக ஊட்கங்கள் எல்லாவற் றிலும் பகிரங்கப்படுத்தப்படுகிறது. பெண்க ளுக்கு எதிராக பாலியல் வன்கொடுமைகளை சிரியப் படையினர் தண்டனையாகசெய்வதாக ஊடகங்கள் அம்பலப்படுத்துகின்றன. இலங் கையில் இன்றும் தொடரும் அடக்கு முறைக ளைப் பற்றி எழுதிய வாஷிங்டன் போஸ்ற் பத்திரிகை இலங்கையில் தமிழர்களின் வீடுகளில் படையினர் சமையல் கட்டுக்குள் சென்று அங்கு பெண்களிடம் காப்பி தரும்படி கேட்கிறார்கள் என்று எழுதியுள்ளது.

இலங்கைப் படையினர் செயல்களில் மிகவும் உச்சமான மரியாதைக்குரிய நடத்தை சமையல் கட்டுக்குள் சென்று காப்பி கேட்பதுதான் என்று எமக்குத் தெரியும். பிரச்சனைகளைப் பற்றிய செய்திகளை மக்களுக்கு எடுத்துச் செல்வதில் ஊடகங்கள் எப்படி செய்திகளைத் திரிபு படுத் துகின்றன என்பதற்கு இது ஒரு எடுத்துக் காட்டு. சிரியாவில் ஒரு மக்களாட்சி வேண்டி மக்கள் புனிதமாகப் போராடுவதாகச் சொல்லும் ஊடக ங்கள் இலங்கை அரசு ஒரு மாபெரும் பயங்கர வாத இயக்கத்தை ஒழித்துக் கட்டிவிட்டு மக் களிடை நல்லிணக்கம் ஏற்படுத்தாமல் மனித உரிமைகளை மீறுகிறது என்று தெரிவிக்கின் றன. பசியால் கதறும் குழந்தை முன் கிலு கிலுப்பை ஆட்டுவது போல் சில நாடுகள் 2012 மார்ச் மாதம் ஜெனீவாவில் ஒரு தீர்மானத்தை இலங்கை தொடர்பாக நிறைவேற்றின.

சிரியாவிற்கான ஐக்கிய நாடுகள் சபையினதும் அரபு லீக் நாடுகளினதும் தூதுவர் கோஃபி அனன் சிரியாவிடம் ஒரு ஆறு அம்சத் திட்டத்தை முன் வைத்தார்:

- சிரிய மக்களின் விருப்பங்களை நிறைவேற் றும் வகையில் சிரிய மக்களால் முன்னெ டுக்கப்படும் அரசியல் தீர்வுக்கான நடவ டிக்கை எடுத்தல்
- மோதல்களை நிறுத்தி ஐக்கிய நாடுகள் சபையின் படைக்கலன்கள் ஏந்தாத 300 கண்காணிப்பாளர்களைச் சிரியாவிற்குள் அனுமதித்து மோதல் நிறுத்தத்தை உறுதி செய்தல்.
- மோதல்களால் பாதிக்கப்பட்ட பகுதிக ளுக்கு பன்னாட்டுத் தொண்டர் நிறுவனங் களை சேவை செய்ய அனுமதித்தல். மோதல் நடக்கும் இடங்களில் நாளொன்றிற்கு இரு மணித்தியாலங்கள் தொண்டர் நிறுவ னங்களை சேவை செய்ய அனுமதித்தல்.
- காரணமின்றி கைது செய்து தடுத்து வைத் திருப்பவர்களை உடன் விடுதலை செய்தல்.
- நாடு முழுவதும் ஊடகவியலாளர்களை தடையின்றி பயணங்கள் செல்ல அனு மதித்தல்
- சட்ட பூர்வமான அமைதியான ஆர்ப்பாடங் களை அனுமதித்தல்.

இந்த ஆறு அம்சத் திட்டத்தை நிறைவேற்றா விடில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை சிரியாமீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும் என்று ஒரு மனதாக எச்சரிக்க வேண்டும் என கோஃப் அனன் சொல்கிறார். இரசியா சிரி யாவிற்கு படைக்கலனகள் அனுப்புவதை நிறுத்தி விட்டது. இலங்கைப் படையினருக்குப் பயிற்சி அளிப்பதை இந்தியா இன்று வரை தொடர்கிறது. சிரியாமீது கடும் பொருளாதாரத் தடை அடுத்த கட்டமாக வரலாம். சிரியக் கிளர்ச்சியாளர்க ளின் ஒரு பிரிவினரை ஐக்கிய அமெரிக்க அரச உயர் அதிகாரிகள் சந்திக்கிறார்கள். அடுத்த கட்டமாக அமெரிக்கா சிரியக் கிளர்ச்சியாளர் களுக்கு படைக்கலன்கள் வழங்கும். ஏற்கனவே துருக்கி ஊடாக சிரியக் கிளர்ச்சியாளர்களுக்கு பயிற்ச்சியும் படைக்கலன்களும் வழங் கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க அடக்கு முறையில் இருந்து விடுவிக்க எந்த ஒரு காத்திரமன நடவடிக்கையும் யாரும் எடுக் காத நிலையில் புலம் பெயர் அமைப்புக்கள் பிளவு பட்டு நிற்கும் நிலையில் சிவந்தன் என னும் ஒரு இளைஞன் களமிறங்குகிறான் உலகத் தின் கவனத்தை ஈர்க்க. உலக விளையாட்டுவீரர் களும் இரசிகர்களும் அரசத் தலைவர்களும் கூடும் இலண்டன் ஒலிம்பிக் நிகழ்வை மைய மாக வைத்து தனது அறப் போர்களத்தை திறக் கிறான். ஆம் சீரடி சிவந்தன் என்றழைக்கப்படும் கோபி சிவந்தன். கறுப்பு யூலை 22 தொடக்கம் ஒலிம்பிக் இறுதி நாள் ஓகஸ்ட் 12 தொடக்கம் தொடர் உண்ணாநிலைப் போராட்டமும் கவன யீர்ப்புநிகழ்வும் Olympic Park பகுதியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

உலக விளையாட்டு வீரர்களும் இரசிகர்களும் அரசத் தலைவர்களும் கூடும் இலண்டன் ஒலிம்பிக் நிகழ்வை மையமாக வைத்து தனது அறப் போர்களத்தை திறக்கிறான். ஆம் சீரடி சிவந்தன் என்று அழைக்கப்படும் கோபி சிவந்தன்.

இக்காலப்பகுதியில் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து மனிதநேயன் திரு.சிவந்தன் அவர் கள் உண்ணாநிலை போராட்டத்தை நடாத் துவார்.

1. தொடர் இனவழிப்பு நடவடிக்கையில் ஈடு படும் சிறிலங்காவினை ஒலிம்பிக் போட்டி யில் கலந்து கொள்வதை நிறுத்த வேண்டும்
2. ஐ.நா. ஆணைக்குழுவினரால் பரிந்துரை செய்யப்பட்டதற்கு அமைவாக அனைத் துலக சட்ட மீறலை விசாரிக்க அனைத் துலக சுயாதீன விசாரனை ஒன்றினை ஆரம்பிக்க வேண்டும். இதில் தமிழீழ மக்களுக்கெதிராக நடாத்தப்பட்ட போர்க் குற்றங்கள் மானிடத்திற்கெதிரான குற்றங் கள் மற்றும் தமிழனவழிப்பு நடவடிக்கை என்பன உள்ளடக்கப்படல் வேண்டும்.
3. தமிழீழத்தில் அதிவேகமாக நடைபெற்று வரும் சிங்கள நிலஆக்கிரமிப்பை தடுத்து நிறுத்த வேண்டும்.
4. தமிழினத்தின் அடிப்படை உரிமைகளுக் காக போராடி சிங்களச் சிறையில் விசார ணைகள் ஏதுமற்று தடுத்து வைக்கப்பட் டுள்ள போர்க் கைதிகளை விடுதலை செய்ய வேண்டும். அவர்களின் மீதான வன்முறைத் தாக்குதல்கள் உடன் நிறுத் தப்பட்டு அனைத்துலக அபய நிறுவனங் கள் அவர்களை தொடர்ச்சியாக சென்று பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப் படல் வேண்டும்.
5. தொடர் இனவழிப்பு நடவடிக்கையில் ஈடு பட்டு வரும் சிறிலங்காவிற்கு வெளிநாடு களில் அரசியல் தஞ்சம் கோரும் தமிழர் களை திருப்பி அனுப்புவதை உடன் நிறுத்த வேண்டும்.

பதினேழாயிரம் பேர் கொல்லப்பட்ட சிரியா வின் பிரச்சனைக்கு கோஃபி அனனின் ஆறு அம்சக் கோரிக்கைகளுடன் ஒப்பிடுகையில் மூன்று இலட்சத்திற்கு மேல் கொல்லப்பட்ட தமிழர்களின் பிரச்சனைக்கு சிவந்தன் வைத்த கோரிக்கை நியாயமானதே.

இதை உலக நாடுகள் உணராத நிலையில் தமிழர்கள் அனைவரும் ஒன்று கூடி சிவந்தனின் போராட்டத்திற்கு ஆதரவு கொடுத்து அம்மியை நகர்த்தும் முயற்ச்சிகளைத் தொடரவேண்டும்.

கடன் சுமையால் கஸ்டப்படுகிறீர்களா?

தனிநபரோ... வியாபாரமோ...

- கடன்/Credit Cardக்கு மாதாந்தம் கட்டும் பணத்தை குறைக்க...
- Bankruptcy யை தழுவ அல்லது தவிர்க்க...
- வியாபாரத்தை பலப்படுத்த...
- TAX / VAT / PAYE போன்றவற்றில் தகுந்த ஆலோசனையைப் பெற...

இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்

உங்களுக்கு உதவி செய்யக் காத்திருக்கிறோம்

BBK PARTNERSHIP

www.bbkca.com

Email: admin@bbkca.com

Chartered Accountants and Business Recovery Professionals

- Accountancy / Audit
- Tax Solutions
- Company Formation
- Confidential Tax Consultancy
- Investigations / Tax Mitigation
- Bankruptcy / IVA
- Liquidations
- Business Startup & Consultancy
- Solicitors Rules Audit
- Payroll / VAT / Book keeping

THE INSTITUTE OF CHARTERED ACCOUNTANTS IN ENGLAND AND WALES

BARNET-LONDON 020 8216 2520 MR. BRIAN

CROYDON 020 8150 9950 MR SIVA RANJAN

CAMBRIDGESHIRE 01354 707 911 MR. VAHEESAN

கருணாநிதியின் டெசோ குரங்கா பிள்ளையாரா?



வேல் தர்மா

(ஒரு பேப்பருக்காக)

டெசோ எனப்படும் தமிழீழ ஆதரவு அமைப்பு 1985இல் ஆரம்பித்து வைக்கப்பட்டது. டெசோவைப் புகழ்ந்து பேசும் திரவிடக் கழகத் தலைவர் கி. வீரமணி டெசோ செய்த இரண்டு சாதனைகளைக் குறிப்பிடுகிறார். ஒன்று அண்டன் பாலசிங்கமும் செல்வநாயகம் சந்திரகாசனும் இந்தியாவில் இருந்து நாடுகடத்தப்பட்டமையை தடுத்து நிறுத்தியமை. மற்றது 1985-இல் அன்றைய ஆந்திர முதல்வர் என் டி ராமாராவ், வாஜ்பாய் (பாஜக), பி.உபேந்திரா (தெலுங்கு தேசம்), எச்.என்.பகுகுணா (லோக்தள்) பல்வந்த் சிங் ராமுவாலியா எம்.பி(அகாலிதளம்), பி.உன்னிகிருஷ்ணன் எம்.பி. (காங்கிரஸ்-எஸ்), ராச்சையா (ஜனதாக்கட்சி), அப்துல் ரஷீத் எம்.பி.(காஷ்மீர் மாநில தேசிய மாநாட்டுக் கட்சி), ஜஸ்வந்த் சிங் எம்.பி, இந்துஸ்தான் முன்னணி சார்பாக சுப்பிரமணிய சாமி எம்.பி., அஸ்ஸாம் கணபரிஷத்தைச் சேர்ந்த தினேஷ்கோஸ்வாமி எம்.பி, க.அன்பழகன், கி.வீரமணி, ப.நெடுமாறன், அய்யணன் அம்பலம், தேவசகாயம் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, என்டிஆர், வாஜ்பாஸ் ஆகிய பிரபலமானவர்களையும் முன்னணி அமைப்புக்களையும் கொண்ட ஒரு மாநாட்டை ஒழுங்கு செய்தமை. ராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்ட பின்னர் மத்திய அரசிற்குப் பயந்து டெசோ அமைப்பு செயலிழக்கச் செய்யப்பட்டது. 2012 ஏப்ரல் 25-ம் திகதி கருணாநிதி டெசோ அமைப்பின் மாநாடு விழுப்புரத்தில் ஆகஸ்ட் 5-ம் திகதி நடக்கும் என்று அறிவித்தார். பின்னர் டெசோ மாநாடு சென்னையில் ஆகஸ்ட் 12-ம் திகதி நடக்கும் என்று அறிவித்தார்.

■ கருணாநிதிமீது கடும் கண்டனக் கணைகள்

டெசோ மாநாடு கூட்டுவதற்கான அறிவிப்பு விட முன்னர் கருணாநிதி தான் இறப்பதற்கு முன்னர் ஈழம் அமைவதை விரும்புகிறேன் என்றும் தனதுநிறைவேறாத கனவுஈழம்தான் என்றும் கூறியிருந்தார். டெசோ மாநாட்டில் இலங்கையில்ஈழம்அமைப்பதற்கானபொதுவாக்கெடுப்பை ஐக்கிய நாடுகள் சபை நடத்த இந்திய அரசு முயற்சிகள் மேற் கொள்ள வேண்டும் என்று கருணாநிதி அறிவித்திருந்தார். இலங்கையில் இறுதிப் போரின் போது மக்கள் ஆயிரக்கணக்கில் தினசரி கொல்லப்பட்ட போது மானாட மயிலாட நடத்திக் கொண்டிருந்த கருணாநிதி இப்போது ஏன் மாநாடு நடாத்தத் துடிக்கிறார் என்று கேள்வி எழுப்பப்படுகிறது. தமிழ்நாட்டில் பெருகி வரும் ஈழத் தமிழர்களுக்கான ஆதரவைச் சிதைக்க கருணாநிதியும் இந்திய மத்திய அரசும் இணைந்து சதி செய்கின்றன என்றும் கூறப்பட்டது. அது மட்டுமல்ல டெசோ மாநாட்டை ஜெயலலிதா மூலம் மத்திய அரசு குழப்பி ஜெயலலிதாவிற்கு தமிழின உணர்வாளர்களிடை வெறுப்பை வளர்க்கச் சதி செய்யப்படுகிறது எனவும் கூறப்பட்டது. ஈழப்பிரச்சனையை அடிப்படையாக வைத்துகாங்கிரசுக் கட்சியில் இருந்து வெளியேறிய தமிழருவி மணியன் 'ஐந்து முறை முதல்வராக இருந்த கருணாநிதி தமது பதவிக் காலத்தில் ஈழம் மலர வேண்டும் என்று உளப் பூர்வமாக ஒரு போதும் சிந்தித்தது இல்லை. இப் போதும் உலகத் தமிழர்களின் வெறுப்புப் பார்வை மட்டும்தான் கருணாநிதிக்கு எஞ்சியுள்ளது.

■ 2011-இல் நடந்த சட்ட சபைத் தேர்தல்

ஈழத் தமிழர்களின் விரோதியான கன்னடத்து பார்பனப் பெண்ணான ஜெயலலிதா முள்ளிவாய்க்காலின் பின்னர் தமிழ்நாட்டில் எழுந்துள்ள ஈழ ஆதரவு அலையை நன்கு புரிந்து கொண்டும் தமிழ்நாட்டில் பெரும் கட்சிகளிடை ஈழ ஆதரவு இடைவெளியை நன்கு புரிந்து கொண்டும் ஈழத் தமிழர்கள் தொடர்பான தனது கொள்கையை மாற்றிக் கொண்டார். அதனால் 2011இல் நடந்த சட்ட சபைத் தேர்தலில் பெரு வெற்றியும் ஈட்டினார். 2ஜி அலைக்கற்றை வழக்கில் மாட்டிய மகள் கனிமொழி பதவிப் போட்டியில் மோதிக் கொள்ளும் மகன்கள் அழகிரியும் ஸ்டாலினும் காங்கிரசுடனான உறவில் விரிசல், திமுகாவைப் பிடிக்காத அடுத்த பிரதமர் ராகுல் காந்தி இப்படி பல பிரச்சனைகளால் தனது குடும்பத்தின் எதிர்காலம் பற்றி கலங்கி நிற்கும் கருணாநிதிக்கு ஓர் ஊன்று கோல் அவசியம் தேவைப்படுகிறது. இந்த ஊன்றுகோல்தான் ஈழ ஆதரவு நாடகமா? இந்தியாவில் கட்சிகளிடையிலான கூட்டணி தர்மத்தை நிர்ணயிப்பது கட்சிகளின் கொள்கைகள் அல்ல. கட்சித் தலைவர்களின் ஊழல்கள் தொடர்பாக உளவுத் துறையினரிடம் இருக்கும் கோப்புக்களே கூட்டணி தர்மத்தை நிர்ணயிக்கின்றன.

■ சிவ் சங்கர் மேனனும் சுற்றறிக்கையும்

ஜூன் 29-ம் திகதி கொழும்பு சென்ற சிவ்சங்கர் மேனனிடம் தமிழ்நாட்டில் அதிகரிக்கும் ஈழ ஆதரவு நிலைப்பாடுபற்றி எடுத்துக் கூறப்பட்டது. கொழுபின் கைக்கூலிகள் போல் செயற்படும் இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் உடனடியாக தமிழ்நாடு அரசு அதிகாரிகளுக்கு அனுப்பிய சுற்றறிக்கையில், விடுதலைப் புலிகளை ஆதரிப்போர் மீது கடும் நடவடிக்கையை மாநில அரசு எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டனர். அது மட்டுமன்றி இம்முறை விடுதலைப் புலிகளைத் தடை செய்யும் அறிக்கையில் தமிழருக்கு என தனிநாட்டை (தமிழீழம்) உருவாக்கும் நோக்கம், இந்திய நாட்டின் இறையாண்மைக்கும், ஒருமைப்பாட்டுக்கும் அச்சுறுத்தலாக அமையும் என்றும், தமிழ்நாட்டில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவான அடித்தளம் அமைத்து வருவதால், இந்திய ஒருமைப்பாடு சிதையும் சூழல் உள்ளது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு வாக்கு வேட்டைக்காக இலங்கைத் தமிழர்கள் தொடர்ப்பாக எந்தவித விட்டுக் கொடுப்பும் செய்யப் போவதில்லை என்னும் நிலைப்பட்டில் சோனியா காந்தி மிகவும் உறுதியாக உள்ளார் என்பதை இவை எடுத்துக் காட்டுகிறது.

■ வில்லனாக்கிய கருணாநிதியின் உண்ணாவிரத நாடகம்

2009மே மாத நடுப்பகுதியில் இந்தியப் பாராளமன்றப் பொதுத்தேர்தல் பிரச்சாரமும் இலங்கை இறுதிப் போரும் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. இலங்கையில் நடந்த போரின் கடைசி நாட்களில் விடுதலைப் புலிகளும் இலட்சக் கணக்கான பொது மக்களும் ஒரு சிறுபகுதிக் குள் முடக்கப்பட்டுநாற்புறமும் சிங்களப்படைகளும் சூழ்ந்துள்ள நிலையில் இலங்கை அரச படைகளால் கனரக படைக்கலன்கள் பாவிக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. ஒரு புறம் இருக்கும் சிங்களப் படையினர் ஏவும் கனரகப் படைக் கலன்கள் மற்றப்புறம் இருக்கும் சிங்களப்படையினர் மீது விழும். இக்கட்டதில் சிங்களப்படையினருக்கு ஆலோசனை வழங்கிக்கொண்டிருந்த இந்தியப் படை வல்லுனரும் புதுடில்லியில் இருக்கும் சதிகாரர்களும் கோபாலபுரத்தினரும் சேர்ந்து ஒரு சதித் திட்டம் தீட்டினர். அதன்படி கருணாநிதி போர் நிறுத்தம் வேண்டி ஒரு உண்ணாவிரதம் இருப்பது என்றும் அப்போது இலங்கை அரசு தாம் இனி கனரக படைக்கலன்கள் பாவிப்பதில்லை என அறிவித்தனர். அதை கருணாநிதியின் ஊடகங்கள் இலங்கை அரசு போர் நிறுத்தம் செய்வதாக திரித்துப் பிரச்சாரம் செய்தன. தேர்தல் மேடைகள் யாவிலும் கருணாநிதி இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்படுத்தி விட்டார் என்று முழங்கப்பட்டது. ஆனாலும் இலங்கை விமானப் படைகள் தொடர்ந்து குண்டுகள் வீசிக் கொண்டிருந்தன. அதுபற்றி கருணாநிதியிடம் கேட்டபோது மழை விட்டு விட்டதுதூவானம் விடவில்லை என்றார். இந்த உண்ணாவிரத நாடகமும் வாய்ச்சவாடலும் தமிழின உணர்வாளர்கள் மத்தியில் கருணாநிதியின் மீது மாற்ற முடியாத வெறுப்பை உருவாக்கி விட்டன.

■ கருணாநிதியின் ஆடித் தள்ளுபடி + சீதம்பர இரகசியம்

கருணாநிதி டெசோ மாநாடு நடத்துவதாக அறிவித்ததமையைத் தொடர்ந்து மத்திய அமைச்சர் ப சிதம்பரம் அவரைச் சந்தித்தார். பின்னர் கருணாநிதி டெசோ மாநாடு தனி ஈழத்திற்கானது அல்ல அது தமிழர்களின் பிரச்சனைகளை அடிப்படையாக வைத்தே என்றார். சிதம்பரம் சோனியாவின் மிரட்டலைக் கருணாநிதியிட்டம் தெரிவித்தபடியால் கருணாநிதி டெசோ மாநாட்டில் இருந்துதனிஈழ ஆதரவைதள்ளுபடி செய்து விட்டார் என செய்திகள் வந்தன. ஆனால் கருணாநிதி தன்னுடன் சிதம்பரம் ஈழம் பற்றிப் பேசவில்லை என்றார். அப்பட்டமான பொய்களை வாய் கூசாமல் பேசுபவர்தான் கருணாநிதி என ஏற்கனவே வை கோபாலசாமி கூறியிருந்தார். ஈழம் இல்லாத டெசோ மாநாடு திருமணம் நடக்கும் ஆனால் முதலிரவு கிடையவே கிடையாது என்பது போன்றது.

■ மீண்டும் வாய்ச் சவாடல்

கருணாநிதி இப்போது கூறுவது 'இலங்கையில் உள்ள ஈழத் தமிழர்களின் உரிமைகளைப் பெற வேண்டும். ஆயுதப் போராட்டத்திற்குப் பின், எஞ்சியுள்ள இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க வேண்டும். அவர்களின் வாழ்வாதாரங்களை வலுப்படுத்த வேண்டும். அவர்களுக்கு போரினால் ஏற்பட்ட இன்னல்களைக் களைந்திட, அறவழியில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் என்பது தான், சென்னையில் நடத்தப்போகும் மாநாட்டின் திட்டமாகவும், தீர்மானமாகவும் இருக்கும்.தனித் தமிழ் ஈழம் வேண்டும்? அதுவும் இன்றைக்கே வேண்டும். அதற்கு ஆயுதங்களை ஏந்த வேண்டும் என்று சொன்னால், உடனே, இவர் இப்படிச் சொன்னதால் தான், இலங்கைத் தமிழர்கள் அடிபட்டு சாக வேண்டி இருக்கிறது. அவர்களின் அழிவுக்கு இவர் தான் காரணம் என்பர். முதலில் இலங்கைத் தமிழர்களின் தற்போதைய துன்பங்கள் தீர வேண்டுமென்றும், மற்றவற்றைப் பற்றி நேரம் பார்த்து சிந்தித்துச் செயல்படலாம் என்றும் சொன்னால், பார்த்தீர்களா, தமிழ் ஈழம் கொள்கையையே விட்டு விட்டார் என்பர்.தமிழ் ஈழத்தைக் கருணாநிதி விட்டு விட்டார் என்றெல்லாம்கற்பனைஉலகத்தில்சஞ்சரிப்பார்களானால், அவர்கள் அப்படியே சஞ்சரிக்கட்டும். நாம் நம் வழியிலே நடப்போம். இதிலே ஒன்றும் குழப்பம் இல்லை'

■ தமிழர்களுக்குத் தேவை டெசோ அல்ல

தமிழர்களுக்கு உதவிசெய்யவேண்டுமானால் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் ஒன்று கூடி இந்திய மைய அரசில் காத்திரமான பங்காளிகளாக மாறி குடும்ப நலன்கள் பதவி மோகங்களைத் துறந்து இந்தியாவின் பாதுகாப்பு அமைச்சையும் வெளியுறவுத் துறை அமைச்சையும் கைப்பற்றி இலங்கை தொடர்பாக இந்தியாவின் வெளியுறவுக் கொள்கையை மாற்ற வேண்டும். அல்லது ஒட்டு மொத்தத் தமிழர்களும் ஒன்று கூடி காங்கிரசுக் கட்சியினதும் இந்தியக் கொள்கை வகுப்பாளர்களினதும் இலங்கை வாழ் தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளை மாற்ற வேண்டும். வெறும் கூக்குரல்கள், கூட்டங்கள், மாநாடுகள், கொட்டும் மழையில் கைகோர்த்துநிற்றல், ஏன் தீக்குளித்தல் கூட ஈழத் தமிழர்களின் துயர் துடைக்க உதவாது. இந்திய அரசின் கொள்கைகளை மாற்றாமல் எஞ்சியுள்ள இலங்கைத் தமிழர்களைப் பாதுகாக்க முடியாது. அவர்களின் வாழ்வாதாரங்களை வலுப்படுத்த முடியாது. அவர்களுக்கு போரினால் ஏற்பட்ட இன்னல்களைக் களைந்திட முடியாது.

We offer our clients expert and focused legal advice, quality, care and efficiency

- Residential Property and commercial property **(WE CAN ACT FOR ALL THE LENDERS)**
- Immigration
- Intellectual Property
- Company law
- Landlord and Tenant
- Outsourcing Law
Sadeesh..... 020 8846 0902
Manu.....020 8846 0903
Sudharma..... 020 8846 0911

Duke's Court Travel Est.1987

3045 ATOL PROTECTED IATA

204 King Street, London W6 0RA

Mon to Fri - 9.00am to 6.30pm
Sat & Sun - 9.00am to 5.00pm

020 8748 3535

BRITISH AIRWAYS AIR CANADA Virgin atlantic KLM AmericanAirlines bmi Emalaysia AIR MAURITIUS CATHAY PACIFIC AIR INDIA Continental Airlines

விம்பிள்டனில் தோல்வி இதயங்களில் வெற்றி

உலக அரங்கில் பல்வேறு நாடுகளில் ரெனிஸ் விளையாட்டுப் போட்டிகள் தவறாது இடம் பெற்றாலும், விம்பிள்டனில் நடைபெறும் வருடாந்த அமர்க்களம் போல எதுவுமே ஈடாகாது. 2012 ஆம் ஆண்டுக்குரிய ரெனிஸ் பந்தாட்டப் போட்டி 08.07.12 ஞாயிற்றுக்கிழமையுடன் முடிவடைந்தது. ஆண்களுக்கும் பெண்களுக்குமான ஆட்டங்களில் அதிக விறுவிறுப்பையும் பல கோடி மக்களின் கவனத்தையும் ஈர்த்த ஆண்டுக்கான தனியொருவர்களின் போட்டி தான்.

இறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற றொஜர் பெடரர் சுவிஸ் நாட்டைச் சேர்ந்தவர். 30 வயது நிரம்பிய இவர், இரு பிள்ளைகளுக்கு தந்தையானவர். உலகளவில் ரெனிஸ் விளையாட்டில் பிரபல்யமடைந்தவரும் ஏற்கனவே ஆறு தரம் விம்பிள்டன் வெள்ளிக் கோப்பையைக் கைப்பற்றியவரும் ஆவர். இந்தச் சிங்கத்துடன் மோதஸ்கொட்லாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அண்டி மறோ முன்னணிக்கு வந்தது. விம்பிள்டன் விளையாட்டரங்கில் 74 வருடங்களின் பின் கிடைத்த அசுர சாதனையாக பிரித்தானிய மக்களும் பத்திரிகைகளும் தொலைக்காட்சி அலைகளும் ஓயாமல் அறிவித்தன. இத்தகைய ஆதரவு 25 வயதான அன்டிமறேக்கு கிடைத்தது அளப்பரிய உற்சாகமாகும்.

இடைவிடாது பெய்த மழையையும் பொருட்படுத்தாமல், இரவிரவாக இடம் பிடித்து, போட்டிகள் இடம்பெறும் உள்ளரங்கில் இடம் கிடைக்காது போனாலும் எவ்வளவு அருகிலிருந்து காணமுடியுமோ அந்தளவு தூரத்தில் விசேடமாக அமைக்கப்பட்ட பெரிய திரையில் உற்சாக உச்சத்தில் ரெனிஸ் பிரியர்கள் நின்ற வண்ணமும் இருந்த வண்ணமும் ஆண்கள் பெண்கள் முதியவர், சிறியவர்கள் என்ற வித்தியாசமின்றி இப் போட்டியை ரசித்த காட்சிகள் கண்கொள்ளாது. இதைவிட 17 கோடி மக்கள் தொலைக்காட்சிகளில் கண்டு களித்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. பிரெட் பெரி என்ற பிரித்தானியர் 1936ஆம் ஆண்டு சுவீகரித்த விம்பிள்டன் வெற்றிக் கிண்ணத்தின் பின்னர் பேர்ணி ஒன்றின் என்பவர் தான் 1938ஆம் ஆண்டில் தனியொருவரின் போட்டியில் முன்னணிக்கு வர முடிந்ததாக அறிய முடிகிறது. அதன்பின் 74 வருடங்களின் பின் ஒரு பிரித்தானிய வீரர் ஒருவர் வரிப்பந்தாட்டத்தில் இறுதிப் போட்டிக்கு வர அண்டி மறேயால் தான் சாத்தியமானது அதனால் தான் அவருடைய இறுதி வெற்றியை கண்டு கழிக்க பிரித்தானிய ரெனிஸ் ரசிகர்கள் தந்த மகத்தான ஆதரவு.

இறுதிப் போட்டியில் அன்டி மறே, றொஜர் பெடருடன் மோதும்போது 4-6, 7-5, 6-3, 6-4 என்ற முடிவில் தோல்வியடைந்தாலும், பிரித்தானியவிளையாட்டுப்பிரியர்களின் இதயங்களை வென்றது. ரசிகர்களின் கலங்கிய கண்களிலிருந்து வழிந்த கண்ணீர் காட்சி.

கழிப்பிட வசதிகளில் பாராபட்சம்

இணையத்தளமொன்றில் சமீபத்தில் வெளிவந்த ஒரு கட்டுரை சிந்திக்க வைத்தது. இதில் சமர்ப்பித்துள்ள புள்ளி விபரங்கள் திடுக்கிட வைத்தாலும் இந்தியாவின் முக்கிய நகரங்களான மும்பை, புதுடெல்லி போன்ற இடங்களில் சேகரிக்கப்பட்ட எண்ணிக்கையை முற்று முழுதாக ஏற்றுக் கொள்ளாமல் ஒதுங்கினாலும், பெண்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினையை சாதாரணமாக ஒதுக்கிவிட முடியாது.

இக்கட்டுரையாளர் தெரிவித்த விபரப்படி, மும்பாய் நகரத்தில் மட்டும் ஆண்கள் பாவிப்பதற்கு 5993 பொதுசன மலசல கூடங்களும் இதற்கு மேலாக 2438 சிறுநீர்க்கழிப்பிடங்களும் நகராட்சி மன்றத்தின் வசதி செய்யப்பட்டுள்ளன. அதேசமயம் பெண்களுக்கான மலசல கூடங்கள் 3538 எண்ணிக்கையில் மட்டுமே ஒதுக்கியிருப்பதாக அறியப்படுகிறது.

தகவல் களஞ்சியம்

வைத்திருப்பவர் : **உமா மகாலிங்கம்**

இந்தியாவின் தலைநகரமென பெருமைப்படும் புதுடெல்லி மாநகரத்தில் கேவலம் 1534 மலசலகூடங்கள் ஆண்களுக்கு வெறும் 132 கழிப்பிடங்கள் மாத்திரம் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிந்தபோது. இந்தியக் குடியரசில் பெண்களுக்கு கிடைக்கும் சம உரிமை இவ்வளவு தானா என வெட்கப்பட வேண்டியுள்ளது. பாவனையிலுள்ள மலசல கூடங்களின் சுகாதார நிலைமை எண்ணியே பார்க்க முடியவில்லை. வெளிச்சமே இல்லாத இருண்ட கட்டிடத் தொகுதிகளில் அமைந்துள்ள சில கழிப்பிடங்களில் தண்ணீர் வசதி கூட இல்லாத இடங்களும் இருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெண்களுக்கு இயற்கையாகத் தேவைப்படும் சுகாதார வசதிகளை இந் நகரங்கள் புறக்கணிப்பது. ஒரு வெளிநாட்டவரின் கண்களுக்கு மட்டும் தெரிந்துள்ளபோது, உள்நாட்டில் இயங்கும் சமூக நலன் சேவையாளர்களுக்கு தெரியாமல் போனது விந்தையே.

பெண்களின் சமஉரிமைக்காக போராடும் இயக்கங்கள், இவர்களின் அடிப்படைத்தேவைக்கு உதவும் கழிப்பிடங்களை சுகாதாரமாகவும் குடிசன மதிப்பீட்டுக்குத் தகுந்த எண்ணிக்கையிலும் உள்ளூர் நகராட்சி மன்றங்கள் உருவாக்க வேண்டுமென்பதே பெண்களின் உரிமை கோரும் carex cauusers என்ற இணையத்தளத்தின் வேண்டுதலாகும்.

தடுப்பூசிக் கிருமிகளைப் பாதுகாக்க...

வறிய நாடுகளில் வாழும் குழந்தைகளை தொற்று நோய்களிலிருந்து காப்பாற்ற முடியாமல் கோடிக்கணக்கில் மரணமாகும் சம்பவங்கள் குறைந்தபாடில்லை. இந்த அழிவைத் தடுக்க உதவும் MMR தடுப்பூசியை உரிய காலத்தில் குழந்தைகளுக்குத் தரமுடியுமானால், இந்தப் பேரழிவிலிருந்து குழந்தைகளை நிச்சயம் காப்பாற்ற முடியும். தடுப்பூசிகள் தாராளமாகக் கிடைத்தாலும் இவை கெட்டு விடாமல் சேமித்து வைக்க குளிர்சாதனப் பெட்டிகளோ மின்சார வசதிகளோ வறிய நாடுகளில் கிடைப்பது அரிதாகவே காணப்படுகிறது.

இந்தப்பிரச்சினையைத் தீர்க்க வேறுவழியே கிடைக்காதா என ஆராய்ச்சியில் ஈடுபட்ட MRDford TUFTS பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டேவிட் கப்பிளான் என்பரும் அவரது சகாக்களும் பட்டினால் (silk) உருவாக்கப்படும் உறைகளில் உயிருள்ள தட்டம்மை (measles) பொன்னுக்கு வீங்கி (mumps) ஊருபெல்லா வைரஸ்கள் ஆகியவற்றை ஆறு மாதங்கள் வரை கெட்டுப்போகாமல் பாதுகாக்க முடியுமென பரிசோதனைகள் மூலம் நிரூபித்துள்ளனர். குளிர்சாதனப் பெட்டிகளில் சேமித்து வைக்கப்பட்ட தடுப்பூசிக் கிருமிகள் நாளாக நாளாக தரம் குறைந்த போதிலும் பட்டுறைகளில் பாதுகாக்கப்படும் நோய்க்கிருமிகள் தரம் கெடாமல் இருப்பது இவ்வாராய்ச்சியாளர்களின் கண்டுபிடிப்பாகும். பட்டுப்பூச்சிகளில் இயற்கையாக கிடைக்கும் Fibrion எனப்படும் புரதச்சத்து கண்ணுக்குத் தெரியாத மூலக்கூறுகளிலான ஒரு தடுப்புத் திரையை உருவாக்குவதினால் பாதுகாக்கப் படும் நோய்க்கிருமிகளை நீர் அணுகாத வண்ணம் தடை செய்வதாக ஆராய்ச்சிகள் நிரூபித்துள்ளன. எனவே MMR தடுப்பூசிக்கு தேவைப்படும் அத்தனை கிருமிகளையும் உயிருடன் சேமித்துவைக்க குளிர்சாதனப்பெட்டிகள் இனி மேல் அவசியப்படாது. அது தான் பட்டுறைகள் போதுமெனத் தெரிந்துவிட்டதே. வறிய நாடுகளில் வாழும் குழந்தைகளின் வருங்காலம் வசந்தம் பெற வழிவகுத்தவர்களை வாழ்த்துவோம்.

பிரிய ராகங்கள்

பாடல் போட்டி நிகழ்ச்சி

இந்த ஆண்டிற்கான பாடல் போட்டி நிகழ்ச்சி

WINNER 2012

தேதி : 9.09.2012
நாள் : ஞாயிறு
நேரம் : மாலை5.00 மணி

எம் இளம் கலைஞர்களை ஊக்குவிக்குமுகமாக இந்நிகழ்சிக்கு உங்கள் அனைவரையும் வருக! வருக!! என வரவேற்கின்றோம்.

FOR TICKET PLEASE CONTACT

PRIYA RAAGANKAL

0208 2389 238 / 079 4008 4453 priyaraagankal@hotmail.com

இடம்
Harrow Arts Centre,
Uxbridge Road,
Hatch End,
Harrow HA54EA.

"முள் கிரீடம்"



ச்சே?. இந்த இளவட்டங்களுக்கெல்லாம் கொஞ்சம் கூட விவஸ்தையே இல்லை போலிருக்கிறது. எதற்கெடுத்தாலும் வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ என்று முத்தமிழ் "அறிஞர்". தப்புதப்பு!!. ஐந்தமிழறிஞர் கலைஞர் எதைச் சொன்னாலும் பகடி செய்யக் கிளம்பி விடுகின்றனர்.

ஈழத்தில் விமானத் தாக்குதல்களுக்கும், கொத்துக் குண்டுகளுக்கும் தப்பி...முள்வேலி வதை முகாம்களில் இருந்து குற்றுயிரும் குலை உயிருமாய் மீண்டு... மிச்ச சொச்ச உயிரையும் கையில் பிடித்துக் கொண்டு அலை பவர்களைக் கரையேற்றலாம் என்று பார்த்தால் அதற்கும் விட மாட்டேன் என்று அழிச்சாட்டியம் செய்தால் யார்தான் சகித்துக் கொள்வார்கள்....

'டெசோ' வை (அதுவாகப்பட்டது தமிழீழ ஆதரவாளர் அமைப்பு) மீண்டும் ஆரம்பிக்கலாம் என்கிற பல்லவியை பழைய 'டெசோ'க்காரர் வீரமணி லாவகமாக ஆரம்பித்துவைக்க... ஈழப்போரில் முன் நின்று போராடிய களைப்போடு 'முத்தமிழறிஞர்' சரணமாகத் தொடர.. சுபவீ சுருதி சேர்க்கக் களை கட்டி விட்டது தமிழீழக் கச்சேரி. இதில் எரிச்சல்படவும் ஏகடியம் பேசவும் என்ன இருக்கிறது வரலாறு தெரியாத விடலைகள் எல்லாம் அரசியல் கதைக்க வந்தால் இப்படித்தான் இருக்கும். நேற்றுப் பெய்த மழையில் இன்று முளைத்த காளானா நம் முத்தமிழ்க் காவலர்?

இன்று நேற்றல்ல... ஏறக்குறைய இருபத்தி ஆறு வருடங்கள் முன்னரே இதே டெசோவை அமர்க்களமாக ஆரம்பித்து தரணி எங்கும் பவனி வந்தாரே எங்கள் 'தமிழினத் தலைவர்'.. அப்போதெல்லாம் இவர்கள் பிறந்திருக்கக் கூட மாட்டார்கள். ஆனால் 'தெய்வாதீனமாக' எம் பெற்றோர் கிருபையால் பிறந்து வளர்ந்து இருபத்தி நான்கு வயது கொண்ட இளைஞனாய் நின்றேன் அப்போது. தடிமாடு மாதிரி வெறும் இளைஞனாய் அல்ல.

'இலட்சியத்தில் உறுதி'யும் 'கொள்கையில் நேர்மை'யும் கொண்டு எம் தலைவர் எங்கெங்கெல்லாம் அலைகடலென ஆர்ப்பரித்து வா அடலேறே என அழைக்கிறாரோ அங்கெல்லாம் போய் நின்றேன். நின்று தமிழீழத்துக்காக 1986 ஆம் ஆண்டு தமிழ்க் காவலரால் கூட்டப்பட்ட கூட்டங்களில் நின்று.....

"இலங்கையில் தமிழீழம் மலர ஆதரவு தருவேன்".

இலங்கைத் தமிழர்களுக்கு நிலையான உரிமையும் நிரந்தரப் பாதுகாப்பும் கிடைக்கும் வரை போராடுவேன்...

போராளிகளுக்கு அடைக்கலம் தரும் கடமையில் இருந்து தவறாமல் இருப்பேன்....

தமிழினத்தின் பாதுகாப்புக்காக எந்தவித்த் தியாகத்துக்கும் தயராக இருப்பேன்....

இந்தக் கடமைகளைச் செய்யும் போது மத்திய மாநில அரசுகளின் அடக்குமுறைகளுக்கு ஆளாக நேர்ந்தாலும் அவற்றை இன்முகத்துடன் ஏற்பேன்....."

என்று தலைவர் சொல்லச் சொல்ல கூடவே ஓங்கி உறுதிமொழி எடுத்த இளைஞனாக நின்றேன். போதுமா

இதுதானா தலைவர் செய்த குற்றம்? இது குற்றமென்றால் ஒரு முறை அல்ல ஓராயிரம் முறை கூட என்னுயிரை அடச்சே?. தன்னுயிரை பலியிடத் தயங்கமாட்டார் எம் தலைவர். இதைக்கூட புரிந்துகொள்ளாமல்.(மீண்டும் ஒரு 'ச்சே' போட்டுக் கொள்ளவும்) என்ன செய்ய இல்லத்தைப் போலவே ஈழத்திலும் வந்த 'சகோதர' ச்சண்டையை சாக்கிட்டு சுற்றியிருந்தவர்களுக்குக் கூட சொல்லாமல் டெசோவுக்குப் போட வேண்டியதாயிற்று பூட்டை.

எம் கொற்றவன் குற்றம் செய்யவில்லை....

குற்றம் செய்ததெல்லாம் நம் மக்கள்தான்.

பின்னே.....?

கடலில் போட்டாலும் கட்டையாவேன்?.

கரையில் போட்டாலும் விறகாவேன்... என்றிருந்தவரை எம்.ஜி.ஆர் போன பின்பு வலுக்கட்டாயமாக இழுத்து வந்து 'முள்கிரீடம்' சூட்டினால் அவர்தான் என்ன செய்வார் பாவம்?

அதுவும் அவருக்கு எப்போதும் பிடிக்காத 'முள் கிரீடம்'.

அக்கிரீடம் படுத்திய பாடுதான் நேருவின் மகளை வரவேற்று நிலையான ஆட்சியைத் தரச் சொன்னது...

அக்கிரீடம் படுத்திய பாடுதான் மண்டலை ஆதரித்த வரை கமண்டலக்கட்சிக்காரர்களோடு கூட்டணி வைக்கச் செய்தது?..

அக்கிரீடம் படுத்தியபாடுதான் சொக்கத்தங்கம் சோனியாவோடு கூட்டு சேர வைத்து ஈழத்தமிழர் பிணங்களைப் பார்த்தும் அமைதி காக்க வைத்தது?.

அக்கிரீடம் படுத்திய பாடுதான் லஞ்ச் பிரேக் உண்ணாவிரதம் இருக்க வைத்தது...

அக்கிரீடம் படுத்தியபாடுதான் மழை விட்டாலும் தூவானம் இருக்கத்தான் செய்யும் எனப் பேச வைத்தது...

அக்கிரீடம் படுத்தியபாடுதான் முத்துக்குமார் செத்துக் கிடந்தாலும் மகனது பர்த் டே பார்ட்டியைக் கொண்டாட வைத்தது....

அக்கிரீடம் படுத்தியபாடுதான் மருத்துவத்துக்காக சாவின் விளிம்பில் தமிழகம் வந்திறங்கிய எளிய மூதாட்டி பார் வதியம்மாளை திருப்பி அனுப்ப வைத்தது..

இப்பொழுது சொல்லுங்கள் யார் குற்றவாளி?

முள்கிரீடம் அளித்தவரா?

அல்லது அதைச் சுமந்தவரா?

டெசோவை யார் வேண்டுமானாலும் ஆதரிக்கலாம்..

யார் வேண்டுமானாலும் பொறுப்பு வகிக்கலாம்?..

ஆனால் நோக்கம் தமிழீழமாக இருக்க வேண்டும். அதுதான் முக்கியம். ஆகவே தோழர்களே.... எமது தலைவர் நிறுவனராக இருக்கும் இத்தமிழீழ ஆதரவாளர் அமைப்புக்கு தலைவராக ராஜபக்சே... செயலராக சோனியா... பொருளாளராக பொன்சேகா.. கூட இருக்கலாம் ஏனென்றால் நமக்குத் தேவை தமிழீழம்தான். அதற்காக அங்கு தமிழர்கள் உயிர்வாழ வேண்டும் என்கிற கட்டாயம் ஏதும் கிடையாது.

(அதுசரி ஆளே இல்லாத கடைல ஏம்ப்பா இப்பிடி 'டீ' ஆத்திகிட்டு இருக்கீங்க?)

பாமரன்

கோர்த்து விடும் செய்திகள்

■ திருக்கோவில் தர்மகர்த்தாக்களின் கருங்கல் மனங்கள்

வன்னியில் போரால் விதவைகளாகி கடும் மனநோயால் பீடிக்கப்பட்ட இருபத்தி இரண்டு பெண்களைப் பராமரிக்கும் படி பிரித்தானியாவில் உள்ள சில சைவத் திருக்கோவில்கள் தர்மகர்த்தாக்களிடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டபோது சிறுவர்கள் என்றால் நாம் பராமரிப்போம் இது வயது போனவர்கள் தானே இன்னும் சில ஆண்டுகளில் இறந்து விடுவார்கள் அவர்களைப் பராமரிக்க தேவையில்லை எனக் கைகளை விரித்து விட்டார்கள். பிரித்தானியாவில் உள்ள அனைத்துக் கோவில்களும் பூவிற்கு செலவழிக்கும் தொகை ஆண்டு ஒன்றிற்கு ஒரு மில்லியன் ஸ்ரேலிங் பவுண்களிலும் அதிகம்.

■ இம்முறை தயாபரன் எப்படிக் குழப்புவார்?

ஒலிம்பிக் போட்டிகள் நடக்கும் போது இலண்டனில் பல ஆர்ப்பாட்டாங்கள் நடக்க இருக்கின்றன. முக்கியமாக சீரடி கோபி சிவந்தனின் உணவு தவிர்ப்புப் போராட்டம். முன்பு மஹ்ந்த பிரித்தானிய ராணியாரின் வைர விழாவிற்கு வந்த போது ஆர்ப்பாட்டம் செய்யும் இடத்தை மாற்றிமாற்றி ஜீரிவியில் சொல்லி தமிழர்களைக் குழப்பியதயாபரன் இம்முறை எப்படிக் குழப்புவார் என்பதையிட்டுசிலர் இலண்டனில் பந்தயம் கட்டத் தொடங்கிவிட்டனர். ஒலிம்பிக் போட்டிக்கு அனுமதி பெறச் சென்றவர்களிடம் பிரித்தானியக் காவல்துறை நீங்கள் வருவீர்கள் என்று தமக்குத் தெரியும் நாம் தயார் என்றதாம். அத்துடன் மிகவும் கண்ணியமாகவும் மரியாதையாகவும் நடந்து கொண்டார்களாம். அப்போது மஹிந்தவின் கொடும்பாவி எரித்தது பற்றி தமது அதிருப்தியை அனுமதி பெறச் சென்றவர்களிடம் காவல்துறையின் தெரிவித்தனர். எரித்த இடத்தில் தெருக் கோடுகள் அழிந்து விட்டனவாம். அதற்கு அனுமதி பெறச் சென்றவர்கள் நாம் மட்டும்தான் ஆர்ப்பாட்டத்தின் போது எமது உடமைகளைக் கொழுத்தினோம் என்றார்களாம்.

■ வல்லரசுக் களமாகும் இலங்கை

சென்ற மாத இறுதிப் பகுதியில் சீனாவின் ஷிங்குவாநெற் இலங்கை தொடர்பான கட்டுரைகளையும் பேட்டிகளையும்இம்மாத ஆரம்பத்தில் வாஷிங்டன் போஸ்ற் பத்திரிகை இலங்கை தொடர்பாக மூன்று கட்டுரைகளை வெளியிட்டது. குடுமிகள் சும்மா ஆடவில்லை. வாஷிங்டன் போஸ்ற் சிங்களப் படையினர் தமிழர்களின் வீட்டுக்குள் நுழைந்து அடுக்களை வரை சென்று பெண்களிடம் தமக்கு கோப்பி கொடுக்கும் படி கேட்கிறார்கள் என்று மனவருத்தப் பட்டிருந்தது.

ஆனால் ஒரு சிங்களப் படையைச் சேர்ந்தவன் தமிழ்ப் பெண்ணிடம் நடந்து கொள்ளும் உச்சக்கட்ட நாகரீகமான செயல் காப்பி கேட்பதுதான் என்று அப்பத்திரிகைக்குத் தெரிந்திருக்கவில்லை.

■ ஓட்டைவாய ராஜ்பக்ச

நாய்க்குட்டிக்காக விமானத்தை மாற்றிய விவகாரம் பற்றிக் கேட்ட பத்திரிகை ஆசிரியை தகாத வார்த்தைகளால் திட்டி நீ கொல்லப்படுவாய் என்று கொக்கரித்த ஓட்டைவாய ராஜபக்சவிற்கு இப்போது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. மஹ்ந்தவின் முன்னாள் தோழர் மங்கள சமரவீர ஓட்டைவாய பதவி விலக வேண்டும் எனப் பிரச்சாரம் செய்கிறார்.

■ 70,000 பொய் புகழ் பிரணாப் டெசோ மாநாட்டைத் தொடக்குவாரா?

கருணாநிதியின் டெசோ மாநாட்டிற்கு பிரித்தானியா வாழ் தமிழினஉணர் வாளர்களுக்கும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளதாம். செம்மொழி மாநாட்டுக்குச் சென்ற செம்மறிகள் இதற்கும் செல்லலாம்.

செம்மொழி மாநாட்டை கருணாநிதியின் உற்ற நண்பனும் இலங்கை இறுதிப் போரின் போது போர்முனையில் 70,000 மக்கள் மட்டுமே இருக்கிறார்கள் என்று பொய் சொன்ன வருமான இந்தியாவின் வருங்காலக் குடியரசுத் தலைவருமான வங்கத்து (அ) சிங்கம் பிரணாப் முஹர்ஜீ தொடக்கி வைத்தார். அவர் டெசோ மாநாட்டையும் தொடக்கி வைப்பாரா?.

ஊருளவாரி

பெத்தானியா தேவாலயம்
உங்களை அன்புடன்
வரவேற்கிறது

ஞாயிறுதோறும் தமிழ், ஆங்கிலம், சிங்களம், பஞ்சாபி, உருது
போர்த்துகீஸ் என பல்வேறு மொழிகளில் ஆராதனைகள் நடைபெறுகிறது

Southall - Hayes - Sudbury - Kenton - Slough - Norwich - Old Southall - Acton - Hanwell
Greenford - Northolt - Hounslow - Rayners Lane - North Harrow - Harrow Weald - South Harrow
Wembley - Radlett - Uxbridge - Langley - Basingstoke - Frimley - Reading - Egham

BFM BETHANY CHURCHES
The family Uneed

Bethany House
12, Park Avenue, Southall. UB1 3AJ
P.O. Box 294, Southall, UB2 5EE
Tel: 020 8571 2156
E-mail: info@bethanychurches.org
Web: www.bethanychurches.org

சமூகநல உதவிப்பணம் WELFARE BENEFITS
உங்களுக்கு கிடைக்கவில்லையா?

- பிரித்தானியாவில் புலம் பெயர்ந்து வாழும் எம்மவர் பலர் பிரித்தானியா அரசாங்கம் ஒதுக்கியுள்ள உரிமைகளைப் பற்றி அறிந்து கொள்ளாமலும் அவற்றைப் பெற்றுப் பயனடையாமல் இருக்கின்றார்கள்.
- LIMITED CAPABILITY FOR WORK REVIEWS AND TRIBUNAL APPEALS Pension Credit, Disability, Living Allowance, carer's allowance-income support and Attendece allowance
- APPLICATIONS TO DSS BENEFITS REVIEWS & APPEALS TO SOCIAL SECURITY TRIBUNALS.
- குறிப்பாக 65 வயதிற்கு மேற்பட்ட பெற்றோர்கள் ஸ்பான்சரில் (Sponsership) இந்நாட்டிற்குள் வந்து நிரந்தரமாக பதியும் போது தங்களுக்கு உரிய பென்சன் கிரடிற் (Pension Credit) உரிமை மறுக்கப்பட்ட நிலையில் இருக்கின்றீர்களா?
- குறைந்த வருமானம் உத்தரவாதம், வலுவிழந்தோருக்கான உதவிப்பணம், பராமரிப்போருக்கான உதவிப்பணம் போன்ற சலுகைகளைப் பற்றி அறியாமல் இருக்கின்றீர்களா?
- இவற்றிற்குரிய விண்ணப்பங்களை முறையாக எழுதாத காரணத்தால் உங்களின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டுள்ளதா?
- உங்களின் விண்ணப்பம் உயரதிகாரிகளில் மறுபரிசீலனைக்கு அனுப்பட்டுள்ளதா? (REVIEWS BY SENIOR MANAGER AND APPEALS TO SOCIAL SECURITY TRIBUNALS)

உங்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருந்தால் அவற்றைப் பற்றிய தக்க ஆலோசனையும், உதவியும் பெற தொடர்பு கொள்ளுங்கள்.

தர்மா: 07949219008 / 02082528506

கெஞ்சிக் கேட்கிறோம்

என் நினைவிற்கு எட்டிய வரையில் ஓர் அரசியல் அமைப்பு இன்னோர் அரசியல் அமைப்பை கண்டித்திருக்கிறது, விமர்சித்திருக்கிறது, குற்றம் சாட்டியிருக்கிறது, கேள்விகேட்டிருக்கிறது, ஆதரித்திருக்கிறது, எதிர்த்திருக்கிறது, பாராட்டியிருக்கிறது.

ஆனால் கெஞ்சிக்கேட்டதை, அதுவும் பகிரங்கமாகக் கெஞ்சிக் கேட்டதை ஒரு போதும் நான் அறிந்ததில்லை.

கிழக்கு மாகாண சபை தேர்தல் தொடர்பாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் விடுத்த அறிக்கையில் இறுதிப் பகுதி இவ்வாறு வருகிறது,

கூட்டமைப்பிடம் பகிரங்கமாகக் கெஞ்சிக் கேட்கிறோம். உத்தியோகபூர்வமாக மாகாண சபையை நிராகரிக்க வேண்டும் இவ்வாறு கூறிய அறிக்கை துரோகம் செய்ய வேண்டாம்' என்றும் வேண்டுகிறது.

இவ்வாறு பகிரங்கமாகக் கெஞ்சிக் கேட்கும் நிலைமைக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை உந்தியது எது? அதுவும் தமிழரை தலை நிமிரச் சொல்லி தானும் தலை நிமிர்ந்த பொன்னம்பலத்தின் பேரனை எது இவ்வாறு கீழிறங்க வைத்தது? நமது தேசியத் தலைவரை தன் தலைவராக கொண்ட ஒருவர் இவ்வாறு பகிரங்கமாக கேட்க எவ்வாறு சம்மதித்தார்? தன் இலட்சிய உறுதியில் தடுமாற்றம் இல்லாது பயணம் செய்யும் ஒருவர் எதன் பொருட்டு இவ்வாறு கீழிறங்கி வந்தார்?

இவற்றுக்கெல்லாம் உறுதிபட என்னால் கூறக்கூடிய ஒரேஒரு மறுமொழி, 'ஈழத்தமிழ்த் தேசியத்தின் மீதான அவர்களது அடங்காப்பற்று' என்பதே ஆகும். எக்காலத்திற்கும் எவருக்கும் என்ன காரணத்திற்காகவும் விட்டுக் கொடுக்க முடியாததொன்று தான் ஈழத்தமிழ்த் தேசியம் என்பதாகும்.

ஈழத்தமிழரின் வாக்குகளைப் பெற்று, அதே ஈழத்தமிழர்களுக்கு துரோகம் செய்யும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்பாடுகள் இவர்களை, அதாவது கஜேந்திரகுமாரை இவ்வாறு கெஞ்சிக் கேட்க வைத்திருக்கலாம். தலைக்கு மேல் வெள்ளம் போவதற்கு இடையில் இறுதி வார்த்தையாகக் கூட இவை இருக்கலாம்.

மேலாக, நாற்பதினாயிரம் மாவீரரச் செல்வங்களை இழந்தோமே, அவர்களது உன்னதத் தியாகத்தாலும், ஆன்மாவாலும், கட்டப்பட்ட ஈழத்தமிழ்த் தேசியம் இந்த வாக்குப் பொறுக்கிகளால் விலை பேசப்படப்போகிறதா? என்ற வெப்பியாரமாகக் கூட இருக்கலாம்.

தாயகம், தேசியம், தன்னாட்சி என்ற அசைக்க முடியாத கொள்கைகளை குழிதோண்டி புதைக்கப் போகின்றார்களே என்ற அச்சமாகக் கூட இருக்கலாம். இவை தாம் பகிரங்கமாகக் 'கெஞ்சிக் கேட்கின்றோம்' என்று சொல்ல வைத்ததா?

மறுவளமாக அதனையே புலம்பெயர் தேசத்தில் பிரதியிடுகின்றேன். அப்படிப் பிரதியிடுகின்ற போது என்னிடமும் அந்த வார்த்தை வருகின்றது. 'கெஞ்சிக் கேட்கிறோம்'.

நான் சொல்வதை ஒரு கணம் உணர்ந்து பாருங்கள். இங்கு சொல்ல வருவன எவையும் இறுதியான உறுதியான முடிவுகள் அல்ல என்னுள்ளும் நண்பர்களுடனும் நிகழ்த்துகின்ற விவாதங்களும் விமர்சனங்களும் யாவற்றையும் அரசியலாக பார்க்கின்ற பக்குவமுமே இப்பொழுது என்னை வழிநடாத்துகின்றன. வழிநடத்த வேண்டும். என்னை மாத்திரம் அல்ல, யாபேரையும் இத் தகைய ஆரோக்கிமான விவாதங்களும் மனம் திறந்த உரையாடல்களும், குற்றம் காணாது, நோக்கம் கருதிய விமர்சனங்களுமே வழிநடத்த வேண்டும்.

தமிழ்த் தேசியம் என்பது எங்கள் மூச்சாக, பேச்சாக இரத்தமாக, அது ஓடும் நாளமாக அமைதல் வேண்டும். தமிழ்த் தேசியம் எனும் போது தாயகம் தேசியம், தன்னாட்சி என்பது அதன் கூறுகள். இவற்றை யார் ஏற்றுக் கொண்டாலும் அவர்கள் எமது நண்பர்கள். ஆனால் ஏற்பவர்களின் தாரதம்மியம் மேலும் கீழும் ஏறும் இறங்கும் அதனால் என்ன?

நாம் நண்பர்களை பெருக்குவோம். எதிரிகளை இயலுமானளவுகுறுக்குவோம். நாங்கள் என்ன செய்கிறோம் என்றால் ஊகங்களை முடிவுகளாக் கொண்டு எதிரிகளை அதிகரிக்கின்றோம். துரோகி என்ற ஒற்றைச் சொல்லை எவ்வித கிலேசமும் இன்றி உச்சரிப்பதற்கு நாம் தயங்குவதே இல்லை.

நாங்கள் யாவற்றையும் அரசியலாகச் சிந்திக்க வேண்டிய காலகட்டம் இது. அரசியல் சிந்தனைக்குரிய வேலைத்திட்டத்தையும் நிகழ்ச்சி நிரலையும் கொண்டு இயங்க வேண்டும். அவற்றை நோக்கி ஓரளவிற்காகவாவது நகர்கின்ற அமைப்பாக இரண்டினை இனம் காண்கின்றேன்.

தமிழ்த் தேசியத்திற்கான மக்கள் முன்னணி ஒன்று, மற்றையது நாடு கடந்த அரசாங்கம் ஆயினும் இவற்றில் திருப்தி கொண்டேன் அல்ல. 'உள்ளதில வள்ளி சாக' என்னால் இவற்றை அடையாளம் காண முடிகிறது.

இரவி அருணாசலம்

எழுதுவது என்னவெனில்

அதற்காக ஏனைய அமைப்புகளை நிராகரிக்கின்றேன் என்று அர்த்தம் அல்ல, அவற்றை தமிழ்த் தேசிய அமைப்புகள் என்று நம்புகின்ற அதேசமயம், அரசியல் வேலைத்திட்டம் என்ன என்பதில் தெளிவைத் தேடுகின்றேன். குறைந்த பட்சம் ஒரு வருட வேலைத்திட்டத்தை முன் வைத்து அவை மக்களிடம் வெளிப்பட வேண்டும்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பை தமிழ்த்தேசிய சக்தியாக என் கவனத்தில் எடுக்கவில்லை. இன்னும் சொல்லப் போனால் இதுவரை கால ஈழத்தமிழரின் இழப்பையும், தியாகத்தையும், உணர்வையும் தம்முடைய தேர்தல் அரசியலுக்குப் பயன்படுத்தி ஈழத்தமிழர் தேசியத்தை விற்றுப் பிழைக்கின்ற வியாபாரிகளாக ஈனப்பிறவிகளாக இருக்கின்றார்கள். முப்பது வருடங்களுக்கு முன்னர் அமிர்தலிங்கம் விட்ட இடத்திலிருந்து இப்பொழுது உள்ளவர்கள் தொடர்கிறார்கள்.

இறுதியாக இதைத் தான் சொல்லி முடிக்கின்றேன். நமது தானைத் தலைவர் மீது கொண்ட நம்பிக்கையில் அவர் தம் இயக்கத்தின் மீது கொண்ட விசுவாசத்தில் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர் நாம் நிறைய முதலீடு செய்துள்ளோம். அவை எமது வங்கிப் பணத்திலிருந்து எடுத்தவை அல்ல. குளிரில் விறைத்து, இரவில் நித்திரை மறுத்து, இருபத்துநான்கு மணிநேரமும் போதாது என்று நினைத்து உடற்சுகம் அத்தனையையும் துறந்து உழைத்த முதலீடு அவை. கொடுத்தோர் அனைவரும் அதனை உணர்வர். தமிழ்த்தேசியத்தின் பெயர் சொல்லி எவ்வித உழைப்பும் அற்று ஒரு சிலர் அதனை ஆண்டு அனுபவிக்கின்றார்கள். அவர்களிடம் ஈழத்தமிழர் நாம் பகிரங்கமாக கெஞ்சிக் கேட்கின்றோம். அவ்வாறு அனுபவிப்பதில் சிறுபங்கையாவது இத்தேசிய சக்திகள் வளர வழங்கமாட்டீர்களா?

வல்வெட்டித்துறைக் கடலோடிகள்

வீர வரலாற்றுபடைத்தார் ஒரு தமிழர். வல்வெட்டித்துறையிலிருந்து 70 ஆண்டுகளுக்கு முன்பு பாய் மரக்கப்பலில் அமெரிக்கா சென்றார். இந்த பயணம் தமிழர் வீரத்தை மட்டுமா பறை சாற்றியது அவர்களின் கடற் பயண தொன்மையையும் அல்லவா எடுத்துக் காட்டுகின்றது. எமது தேசியத் தலைவரின் பாட்டனார் வெங்கடாசலம் தன் வணிகத்துக்காக 15க்கும் மேற்பட்ட உருவள் வைத்திருந்தார்.

இப்படியான வல்வெட்டித்துறைக் கடலோடிகள் முன்மாதிரி எடுத்துரைக்கபடுகிறது. இதை ஒரு நூல் என்பதிலும் ஆதாரங்கள் கொண்ட ஒரு ஆவணம் என்பதே சாலப் பொருந்தும். இப்படியான தகவல்கள் எம்மிடையே உள்ள வேற்றுமைகளை மறக்க வைக்கின்றன. தமிழ்த் தேசிய ஒற்றுமையை நாட வைக்கின்றன.

அழகிய அட்டை நெய்தல் நிலத்தை ம் அதில் உள்ளடக்க பட்ட கவர்ச்சியான வல்வெட்டித்துறைமுகத்தை ம் காட்டுகின்றது. 269 பக்கங்களுக்கிடையிடையே வரும் படங்கள் ஆவணத்தை மெருகூட்டுகின்றது.

கடவுள் துகள்..

(18ம் பக்கத் தொடர்ச்சி)

...அறிவியலின் மீது அந்தப் பொறுப்புப் போடப்பட்டது.

திணிவேயில்லாது சக்திமயமாகவிருந்த பிரபஞ்சத்தில் திணிவைக் கொடுக்கும் ஹ்க்ஸ்போசான் துணிக்கைகள் அல்லது வயல் பரவியிருந்து அவற்றில் ஏனைய அணுத்துணிக்கைகளான புரோட்டான் நியூத்திரன் இலத்திரன் மற்றும் ஒளித் துணிக்கையான போட்டோன் போன்றவை வெவ்வேறு மட்டத்தில் அமிழ்ந் திருப்பதாலேயே திணிவுடைய சடப்பொருள் உருவாகியுள்ளது என்னும் கொள்கையை அறிவியல் மூலம் வெளிவிடும்போது, ஓர் புறச் சக்தியே பிரபஞ்ச சிருஷ்டிக்குக் காரணமென்னும் வாதத்தை அறிவியல் மூல மாக வலுப்படுத்தலாமென்று மேற்குலக சமயவாதிகள் எண்ணவும் கூடும். அதனாற்தானோ என்னவோ சேர்ண் ஆய்வு மையத்தினர் பாப்பாண்ட வரை இரகசியமாகச் சந்தித்து அவரது ஆசியையும் பெற்றிருக்கின்றனர்.

அறிவியல் பிரபஞ்சத்தோற்றத்திற்கான மூலவிசை எதுவென்று இதுவரை கூறவில்லை. இயங்கியல் பொருண்முதல்வாதப் பார்வையில் காரணகாரியத் தொடர்புகளை அது ஆராய்ந்துகொண்டே போகிறது. அதன்படி, தற் போதைக்கு வெற்றிடமே பிரபஞ்சத்தின் ஆரம்பமாகக் கருதப்படுகிறது. மேற் கத்திய சமய வாதிகளுக்கு இது ஏற்புடையதல்ல. அவர்களது சமயக் கொள் கையின் நம்பகத்தன்மை விவிலியம் கூறும் கடவுளின் சிருஷ்டிப்பால் பிரபஞ் சம் தோன்றியதென்பது நிறுவப்படுவதிலேயே பலம் பெறமுடியும்.

அறிவியல் அதற்கு உடன்படும்போது நாம் மேற்சொன்ன *தத்வம் அஸிக்* கொள்கையை உலகத்தில் பின்தள்ளி விடலாமென்னும் தப்புக்கணக் கோடுதான் ஆய்வுகள் போய்க் கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. அதாவது பிரபஞ்ச சிருஷ்டிக்கு ஒவ்வொரு தனிமனிதனின் உள்ளமே காரண மென்னும் பேருண்மையை விஞ்ஞானம் தோற்கடிக்க முயற்சிப்பதால், உல கின் கவனம் திசை திருப்பப்பட்டு சில குறித்த சமயங்களின் கொள் கைகளுக்கே முக்கியத்துவம் கிடைக்கும் என்னும் எண்ணத்தில் அறிவியல் அந்த வழியை நோக்கிச் செல்கிறதோ தெரியவில்லை. அதனால் இதற்குள் சமய அரசியலும் இருப்பதாகவே எண்ணத்தோன்றுகின்றது. எதையும் பொறுத் திருந்து பார்ப்போம்.

தொடருவம்..

PHOENIX SERVICES
(Quantity Surveyors)
Providing estimating services to Main Contractors, Painters, Decorators and individuals requiring estimating services
We specialise in
Cost Planning • Procurement Advice • Contractual Advice
• Cash Flow Forecasting • Tender Documentation • Tender Reporting
• Production of Bills of Quantities • Tender Reporting
• Post Contract Cost Management
Please Call Krishnakumar (07429101674) or Sajitkaanth (07861491997) for quotation and any further information.
Website - www.phoenix-services-uk.com Email - info@phoenix-services-uk.com

HOUSE FOR SALE
நல்லூரில் இராசாவின் தோட்ட வீதியில் 2 1/2 பரப்புக்காணியில் அமைந்துள்ள குளிர்சாதன வசதிகள் உட்பட நவீன வசதிகளுடன் கூடிய ஐந்து அறை மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
இவ்வீடு இதுவரை உலக சுகாதார ஸ்தாபனக் (WHO) காரியாலயமாகப் பாவிக்கப்பட்டது.
Modern House Situated in 2 1/2 Perches land at Rasavin Thottam lane in Nalloor, Jaffna with modern facilities including Air Conditioning with Five Bedroom and upstairs available for sale.
This House was used as WHO Office until recently.
CONTACT:- 02083900014

பிப்பிலிப் பேய்

சாத்திரி
(ஒரு பேப்பர்)

கதையின் காலம் 1984

ஆ ஆ ஆ ஆ ஆ ஆ ஆ………ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஓ ஐயோ……வழைமையாய் இரவு பத்துமணிக்கு பிறகு கேட்கும் அந்த பெண்ணின் அலறல் அன்றைக்கும் கேட்டது. மருதடி பிள்ளையார் கோயில் தேர் முட்டியில் அரட்டையடித்துக் கொண்டிருந்த அந்த ஆறு பேரும் ஆளையாள் பார்த்துக்கொண்டார்கள்.

டேய் பேய் கத்துதடா நேரமும் பத்தரையாகிது வாங்கோடா போவம் என்று லேசாய் நடுக்கியபடி சொன்னான் இருள் அழகன்(சிவா). டேய் அது பேயில்லை மகேந்திரத்தாரின்ரை இரண்டாவது பெட்டை தேவரதிக்கு விசர் பிடிச்சிட்டுதாம். அவள்தான் கத்துறாள். சீரணி மலையாள சாத்திரியிட்டை தொடங்கி மட்டக்கிளப்பு வரை கொண்டு போய் பேயோட்டி பாத்திட்டினமாம். ஒண்டும் சரிவரேல்லை என்றான் காந்தன். விசர் பிடிச்சிட்டுதா நல்ல படிச்ச பெட்டையல்லே? யாழ்ப்பாணம் கற்றன் நசினலிலை (வங்கி) வேலை செய்தவள் இது நான். வேலைக்கு போய் வாற நேரத்திலை மினிபஸ் கொண்டெக்கரர் பெடியன் ஒருத்தனை லவ் பண்ணினவளாம் அது தெரியவண்து தகப்பன் காரன் சரியான அடியாம். பிறகு வேறையிடத்திலை மாப்பிளை தேட வெளிக்கிடேக்குள்ளை பெட்டைக்கு விசர் பிடிச்சது எண்டினம் சில பேர். அவள் கத்துறது சரி ஆனால் இரவிலை வீடுகளுக்கு கல்லெறியிறது ஆராம்?? கேட்டு விட்டு எல்லாரையும் பாத்தன். மற்வையைளும் ஆளையாள் பார்த்தார்கள்.

இன்னொரு விசயம் தெரியுமே? முக்கியமா சனி ஞாயிறு இரவிலைதான் பேய் உலாவுதாம் அண்டைக்குத்தானம் அனேகமா கல்லெறி விழுறது பேய் லீவுநாளிலைதான் உலாவ வேணும் எண்டு ஏதும் சட்டம் இருக்குதோ தெரியாது எண்டு தனது திக்கு வாயால் திக்கி திக்கி சொல்லி முடித்து விட்டு சிரித்தான் பிறேம். நானும் கேள்விப்பட்டனான் சனி ஞாயிறுகளிலைதானாம் கல்லெறி விழுறது எண்டு றோட்டுக் கரையிலை இருக்கிற சனங்கள் சொல்லினம். சிலநேரம் ரோந்து போற ஆமிக்காரன்தான் எறியிறானே? எண்டும் பயத்திலை அவை வெளியாலை வந்து பாக்கிறேல்லை. எண்டு நான் சொல்லி முடிக்க முதலே சரி இந்த சனி ஞாயிறு நாங்கள் ஒருக்கா ரோந்து போய் பாப்பம் எண்டான் காந்தன்.எதுக்கும் சுடலையில் பிணம் எரிக்கும் சந்திரனிட்டை பேயை பற்றி கேட்டுப் பாக்கலாமெண்டு யோசிச்சாலும் அவனிட்டை கேட்டு பேயை அலேட் ஆக்காமல் நாங்களாகவே தேடி பிடிக்கிறதெண்டு முடிவாயிட்டுது.சரி இந்த சனி இரவு பேய் பிடிக்கிறதெண்டு முடிவாகியது. பேயோடையெல்லாம் விளையாடாதையுங்கோ நான் வரேல்லையெண்டு அடம் பிடித்த இருள்அழகனையும் விடாப்பிடியாய் எங்களோடு கட்டாயம் வரவேணும் இல்லாட்டி எங்களோடை சேரக்கூடாது எண்டு சொல்லியாச்சு அவனும் மௌனமாய் தலையாட்டியிருந்தான்.

திட்டத்தை போடத்தொடங்கினோம். பேய் பிடிக்கப் போவதற்கு ஆயுதங்கள் தேவைப்பட்டது. நானும் பிறேமும் புலிகள் இயக்கத்தில் இருந்ததால் எங்களிடம் ரி.என்.ரி ரக கைக் குண்டுகள் இருந்தது. அடுத்தது காந்தன் அவன் புளொட் அவனிடமும் பென்ரலைற் குண்டு ஒன்று இருந்தது. சசி ஈ.பி யிலை இருந்தவன் அவனிட்டை குத்திப்போட்டு எறியிற குண்டு இருந்தது இறுதியாக குணம் மற்றும் இருள் அழகன் இவர்கள் எந்த இயக்கங்களையும் சாராது கல்வியே கண்ணாயிருந்தவர்கள். அவர்களிற்கு ஆயுதத்திற்கு என்ன செய்யலாமென யோசித்த பொழுதுதான். கோயிலில் ஜயர் வேட்டை திருவிழாவிற்கு வாழை வெட்டும் வாள் நினைவுக்கு வந்தது. இரண்டு வாள்கள் கோயில் வாகன சாலையில் சாத்திவைக்கப்பட்டிருக்கும். யாருக்கும் தெரியாமல் அதை எடுப்பது என்று முடிவானது.

அன்று சனிக்கிழைமை இரவு பதினொன்றை தொட்டுக்கொண்டிருந்தது பேய் பிடிக்கப் போகும் ஆறுபேர் கொண்ட எங்கள் அணி ஆளிற்கு ஒவ்வொரு ரோச் லைற்றும் ஆயுதங்களோடு தயாராகியிருந்தது. எங்கள் திட்டப்படி பிறேமும் இருள்அழகனும் மானிப்பாய் மருதடிக்கும் பிப்பிலிக்கும் இடையில் வரும் வயல் வெளியில் இடையில் உள்ள நாயுருவி பத்தைக்குள் போய் ஒழித்திருப்பது அங்கிருந்து நீளமான வீதியில் இரண்டுபக்கமும் பாக்கலாம் ஆமி ரோந்துவந்தால் அதை அவர்கள் கவனிக்வேண்டும் ரோந்து வருபவர்கள் பேசாமல் நேரை போனால் அப்படியே பதுங்கியிருக்கவேணும். அவங்கள் இறங்கி றோட்லை வீடுகளிலை சோதனை செய்ய தொடங்கினால் குண்டு அடிக்கிறது அப்ப நாங்கள் எல்லாரும் வீடுகளிற்கு போய்விடுவது. காரணம் அப்பளங்களிடம் வோக்கியோ செல்போன்களோ இல்லாத காலம்.

அடுத்ததாய் நானும் காந்தனும் தோட்ட வெளிகளுக்குள்ளாலை சுடலைக்குள் போய் பார்ப்பது சசியும் குணமும் எங்களோடு வந்து இடையில் பிரிந்து சுடலைக்கு இறங்கும் ஒழுங்கைக் குள் போய் கவனிப்பது அதற்கு அருகில்தான் விசர் பிடிச்ச தேவரதியின்ரை வீடும் இருந்தது. புறப்படத் தயாரானதும் இருள் அழகன் விபூதியை எடுத்து நெத்தியிலும் கொஞ்சத்தை உடம்பு முழுவதும் பூசிக்கொண்டான்.தோட்டங்களிற்குள்ளால் இறங்கி நடக்கத் தொடங்கினோம். மெல்லிதான் நிலவு வெளிச்சமும் இருந்தது. பிறேமிற்கு அடுத்ததாக கடைசியாய் இருள் அழகன் வந்து கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்தில் டேய் அ..அ…அ…வனை கா…கா….கா…ணேல் லையடா எண்டு கத்தினான். எல்லாரும் நிண்டு திரும்பி பாத்தம் இருள் அழகளை காணவில்லை ஓடிவிட்டான். ஓராள் குறைந்ததால் திட்டத்தை மாற்றவேண்டி வந்தது. பிறேமும் சசியும் பிரதான வீதிய கவனிப்பதற்காக இடையில் பிரிந்து போய் பற்றைக்குள் படுத்ததும் எங்களிற்கு ரோச் லைற் மூலம் சிக்னல் தந்தனர். நாங்கள் மூவரும். சுடலைப்பக்கமாக போய் எட்டிப் பார்த்தோம் அன்று பிணம் எதுவும் இல்லாததால் சுடலைக்காவற்காரனையும் காணவில்லை மயான அமைதியாய் இருந்தது. மயானம் அப்பிடித்தானே இருக்கும்.

பின்னர் வேலியோடு ஒட்டியபடி பதுங்கியபடி பிரதான வீதிப் பக்கமாக முன்னேறிக்கொண்டிருந்தபொழுது மீண்டும் அதே ஜயோ…..அலறல். அப்படியே நின்று ஒருத்தரை ஒருத்தர் பாத்துவிட்டு மீண்டும் நடக்கத்தொடங்கிய பொழுது ஒழுங்கையின் மறு பக்கத்திலிருந்து எதிரே ஒரு உருவம் மெதுவாக பிரதான வீதிக்கு வந்தது அங்கும் இங்கும் பார்த்தது. நாங்கள் ஆளையாள் சுரண்டி டேய் பேய்..எண்று மெதுவான குரலில் சொல்லிவிட்டு அப்டியே அமர்ந்து கவனித்தோம். டேய் பேயின்ரை கால் நிலத்திலை முட்டுதா வடிவா பார் முட்டாட்டி பேய்தான் ஓடிப் போயிடும் என்றான் குணம். எற்று பாத்தோம் மெல்லிய வெளிச்சம் எண்டாதை கால் முட்டின மாதிரியும் இருந்தது முட்டாத மாதிரியும் இருந்தது. பேய் வெள்ளை உடுப்போடையல்லோ வரும் இதென்ன ஒரே கறுப்பாயிருக்கு என்று காந்தன் கிசு கிசுக்க . சிலநேரம் வைரவராயும் இருக்கலாமெண்டன். உருவம் வீதியை கடந்து எங்கள் பக்கமாய் ஒழுங்கைக்குள் இறங்கியது எங்கள் இதயத்துடிப்பும் கொஞ்சம் அதிகரித்தது. நான் கைக்குண்டினை இறுக்கி பிடித்திருந்தேன். மறுபக்கம் இறங்கிய உருவம் குனிந்து சில கற்களை எடுத்து அருகில் இருந்த வீடுகளிற்கு எறிந்தது மீண்டும் தேவரதியின் அலறல். உருவம் வேலியோரமாக இருட்டிற்குள் இறங்கியது . டேய் பேய் மறைஞ்சிட்டுதடா வாடா ஓடிடுவம் மீண்டும் குணம். பேசாமல் இரடா கொஞ்ச நேரம் பாப்பம் இல்லாட்டி லைற் அடிச்சு பாக்கலாம் எண்றுவிட்டு இருக்கும் போதே மீண்டும் இன்னொரு உருவம் ஒழுங்கையில் இறங்கியது. டேய் ஒண்டில்லையடா இரண்டுபேய் எண்டன். இப்பொழுது இருளில் நின்ற உருவம் வெளியே வந்து ஒழுங்கையில் இறங்கிய மற்றைய உருவத்தோடு சேர்ந்து நாங்கள் பதுங்கியிருந்த பக்கமாக வரத்தொடங்கியது. அருகில் வரும்பொழுதுதான் ஒன்று ஆண் மற்றது பெண் என அடையாளம் காணக்கூடியதாக இருந்தது. ஆண் உருவம் மீண்டும் சில கற்களை எடுத்து வீடுகளிற்கு எறிந்து விட்டு எங்களை அண்மித்து விட்டார்கள். நாங்கள் வேலியோரமாகதரையோடு ஒட்டி படுத்துகொண்டோம். எங்களை தாண்டி அவர்கள் சுடலைக்கு பக்கத்திலிருந்த காணிக்குள் புகுந்துகொண்டார்கள்.

நாங்கள் மெதுவாக பதுங்கியபடி காணிக்கு புகுந்து கொண்டோம். அந்தக் காணிக்குள் ஒரு கிணறு இருந்தது அதன்முன்பக்கம் சீமெந்து தரை போட்டிருந்தார்கள். சீமெந்து தரையில் மேல் போய் சேர்ந்த இரு உருவங்களிற்கும் நாங்கள் மெதுவாக போனதில் சருகு சத்தம் கேட்டிருக்க வேண்டும் கொஞ்ச நேரம் அப்படியே நின்று சுத்திவர பார்த்தார்கள்.நாங்கள் அசையாமல் நின்று கொண்டதும். ஆண் உருவம் தனது சாரத்தினை களற்றி தரையில் விரித்தது பின்னர் இரு வரும் அதில் படுத்துக் கொள்ள அவர்களிற்கு அருகாக முன்றியிருந்த நாங்கள் ஆளையாள் சுரண்டி சமிக்கை செய்து விட்டு முன்று பேருமாக சேந்து ரோச் வெளிச்சத்தை அடித்தபடி அசையாதை என்று கத்தினோம். ஆண் முழு நிருவாணமாக குந்தியிருந்தார் பெண் அப்பொழுதுதான் ஆடைகளை அவிழ்க்கத் தொடங்கியிருந்தார். வெளிச்சம் அவர்கள் மீது பாய்ந்து கொண்டிருந்ததால் அவர்களால் எங்களை பார்க்கமுடியவில்லை அதனால் அவர்கள் ரோந்து வந்த ஆமிக்காரர்கள் நாங்கள் என நினைச்சு மாத்தையா எங்களை ஒண்டும் செய்யாதேங்கே எண்டு நிலத்தில் படுத்து கும்பிட்டார்கள். ரோச் வெளிச்சத்தை நிறுத்திவிட்டு அவர்களிட்டை உடுப்பைப்போட சொல்லிப்போட்டு விசாரித்தோம்.

ஆண் எங்கள் ஊரில் வீடுகளில் கூலி வேலைகளிற்கு போவபர் அதோடு சீவல் தொழிலாளி நல்ல உடற்கட்டானவர். அந்த பெண்ணின் வீட்டிற்கும் போய் எடுபிடி வேலைகள் செய்வார்.பெண்ணின் கணவர் அரபு நாடு ஒன்றில் கட்டிட பொறியியலாளர். இரண்டு பிள்ளைகள் மாமன் மாமியாருடன் வசித்து வந்தவர். மாமனார் சனி ஞாயிறு நாட்களில் யாழ்ப்பாணம் நவீன சந்தை இரவு காவல் கடைமைக்கு போய் விடுவார். பெண் மாமியாருடன் பிள்ளைகளை படுக்க வைத்து விட்டு வெளியேறிவிடுவார். இதனால்தான் சனி ஞாயிறுகளில் மட்டும் பேய் உலாவியிருந்தது.அதே நேரம் விசர் பிடித்த தேவரதியின் அலறலும் இரவு ஆமிரோந்தும் இவர்களிற்கு கை கொடுத்திருந்தது. ஆண் தான் வந்து விட்டதை அறிவிக்கத்தான் கல்லால் எறிவார். இப்படி இவர்களை விசாரித்துக் கொண்டிருக்கும் போது குண்டு வெடித்த சத்தம் ஊரே அதிர்ந்தது. ஆமி வந்திட்டான் எனவே அவர்களையும் இழுத்துக்கொண்டு பின்னால் தோட்டங்களிற்குள் புகுந்து பதுங்கிக் கொண்டோம். சிறிது நேரம் துப்பாக்கி சூட்டு சத்தங்களும் கேட்டது ஆமி சந்தியில் நிண்டு சுட்டு விட்டுமாதகல் நோக்கிபோய்க்கொண்டிருந்தான் முன்னால் போய்கொண்டிருந்த ஜீப்பில் பெரிய லைற் ஒன்றை பூட்டி சுத்திவர அடித்து பாத்துக் கொண்டே போனார்கள். இனி பேய் விளையாட்டு விளையாடினால் சந்தியில் கட்டுவைச்சு போடுவம் எண்டு எச்சரித்து கலைத்து விட்டோம்.

அடுத்தநாள் குண்டு சத்தத்தை பற்றித்தான் ஊரிலை சனத்தின்ரை கதையாயிருந்தது. நாங்கள் கோயிலடிக்கு வந்திருந்தம் இருள் அழகன் மட்டும் வரவில்லை அங்கு தோட்டம் செய்யும் ஒருவர் கோயில் வாளை கையில் தூக்கியபடி வந்துகொண்டிருந்தார் அவரை அப்படியே மடக்கினம். தம்பியவை இது கோயில் வாள் காத்தாலை தோட்டத்துக்கு போனனான் வரம்புகரையிலை கிடந்தது எப்பிடிவந்தது எண்டு தெரியேல்லையெண்டார். ஜயா இரவிலை பிள்ளையார் உலாவுறவராம் அவர்தான் கொண்டுவந்து உங்கடை தோட்டத்திலை போட்டிருப்பார் இனி உங்களுக்கு நல்லகாலம்தான் எண்டிட்டு வாளை வாங்கிட்டன். அவரோ பிள்ளையரே நீதான் காப்பாத்தவேணும் எண்டு கோயிலிலை விழுந்து கும்பிட்டிட்டு வீபூதியை எடுத்து பூசிக்கொண்டு போயிட்டார். இனி இருள் அழகனை தேடி போகவேணும் அவனின்ரை வீட்டுக்கு எல்லாருமாய் போனம். குறுக்காலை போவாரே என்ரை பிள்ளைக்கு என்னடா செய்தனீங்கள் அவனுக்கு ஒரே குலைப்பன் காச்சல் காசாயம் காச்சி குடுத்திருக்கிறன். குறயைாட்டி சாமியாரிட்டை கொண்டு போய் விபூதி போட வேணும் ராத்திரி நீங்கள் தான் குண்டும் எறிஞ்சிருப்பியள் இனி இந்தப் பக்கம் வரக்கூடாது என்று திட்டி எங்களை அவனின் தாயார் கலைத்துவிட்டார்.நாலைந்து நாள் கழித்து தலையை தொங்கப் போட்டபடி மீண்டும் இருள் அழகன் எங்களை தேடி கோயிலடிக்கு வந்திருந்தான்.

இலங்கை மற்றும் உலகின் எந்தப் பாகத்திற்கும்
DOOR to DOOR DELIVERY

இலங்கையில் எந்தப் பாகத்திற்கும் வீட்டுக்கு வீடு சேவை
• இலங்கை மற்றும் இந்தியாவிற்கு விசேட விலையில் விமான மார்க்கமாகவும் பொதிகள் அனுப்பப்படும்.
• Express Letter Service
• Vehicle Shipping
• Furniture Shipping
• Packing Service
• Relocation Service
• Man and Van Service
• Packing Materials
• European Parcel Service
DUNN SHIPPING LTD.
020 8842 2020
07949 361 434 - 07949 361 313
info@dunnshipping.co.uk • www.dunnshipping.co.uk
பொருட்கள் பெற்றுக் கொள்ளப்படும் இடங்கள்
• GREENFORD • WIMBLEDON • VAUXHALL • BIRMINGHAM
• STOKE-ON-TRENT • A-LANKA TRAVELS LTD, TOOTING

நான் வேலையிடத்தில் நின்றபொழுது ஒரு குறுந்தகவல் என்னுடைய நண்பி ஒருத்தியினுடையது. அவர் பிரான்சின் pathe திரைப்பட நிறுவனத்தின் எனது பிராந்தியத்திற்கான நிருவாக இயக்குனராக இருக்கிறாள். படம் பார்ப்பதற்கான ஓசிரிக்கற்றுக்கள் அடிக்கடி தருவாள். அவளதுகுறுஞ் செய்திஎன்னவெண்டால் ஒரு பொலிவூட் படம் ஒண்டு எங்கடை நிறுவனம் வாங்கியிருக்கு வாற ஞாயிற்று கிழமை படம் நான் நிக்கமாட்டன் வக்கேசனிலை போறன் அதாலை றிக்கற் உன்ரை தபால் பெட்டியிலை போட்டு விடுறன். இதுதான் தகவல்.

போலிவுட் படமெண்டால் ஏதாவது கிந்திப் படமாயிருக்கும் ஏனெண்டால் சாருக்கான் நடிச்ச படமெண்டு இஞ்சை ஓடினது இல்லாட்டி Slumdog Millionaire மாதிரி வெள்ளைக்காரன் இந்தியாவிலை போய் எடுத்த படமாயிருக்கும் எண்டுதான் நான் நினைச்சன். காரணம் என்ரை இடத்திலை என்ரை குடும்பத்தை விட்டால் வேறை இரண்டுதமிழ்குடும்பம்தான்தூரத்திலை இருக்கினம். அதாலை தமிழ் படம் எடுத்து ஓடுறதுக்கான சாத்தியம் எதுவும் இல்லை. வீட்டை வந்துதபால்பெட்டியைதிறந்துபாத்தால் பில்லா2 எண்டு எழுதி ஒரு நோட்டிசும் 3 றிக்கற்றும் இருந்திச்சிது எனக்கு சரியான புளுகம். ஏனென்டால் எங்கடை சிற்றியிலை ஓடுற முதல் தமிழ்படம் அதுவும் பிரெஞ்சு கொம்பனியே எடுத்து போடுறாங்கள். அதைவிட ஓசி றிக்கற் வேறை இதுக்கு மேலையும் படத்தை பாக்க போகாமல் விட்டால் நான் தமிழனேயில்லை எண்டு முடிவுக்கு வந்திட்டன். ஆனால் தலையின்ரை படம் பேர் வேறை பில்லா படத்திலை தலை எப்பிடியும் ஒரு பிஸ்ரலாலை மகசீன் மாத்தாமலேயே ஆயிரம் குண்டுகளால் குறைஞ்சது 50 பேரையாவது சுட்டுத்தள்ளுவார். வன்முறைகாட்சிகளாகஇருக்கும்அதாலை மகளை விட்டிட்டு நானும் மனிசியும் போறது எண்டு முடிவெடுத்தன். பொதுவா பிரான்சிலை ஓடுற படங்களிற்கு வயது கட்டுப்பாடு 10..12... 16..18...வயது எண்டு நாலாய் பிரிச்சிருப்பாங்கள். அந்த வயதுக்குட்பட்டவையை உள்ளை விடமாட்டாங்கள். ஆனால் பில்லா படத்துக்கு இந்தியன் சென்சார் போர்ட் குடுத்த Uசேட்டிபிக் கற்றை பாத்திட்டு பிரெஞ்சு காரன் வயது கட்டுப்பாடு எதுவும் போடேல்லை.

சரி இப்ப தியேட்டர் வாசல்லை வந்து இறங்கியாச்சுதியேட்டர் நிருவாகம் ஒருமாதமாய்விளம்பரம் செய்ததிலை 60 கி.மீற்றர் தூரத்திலையிருந்தும் தமிழாக்கள் வந்திருந்திச்சினம்.பல வருசம் காணாத பலரையும் காணக்கூடியதாய் இருந்தது. ஆனாலும் மெல்லிதாய் ஒரு தலையாட்டல் ஒரு புன்னகை இதோடை சரி மிஞ்சிப் போனால் எப்பிடி இருக்கிறியள் எண்டொரு கேள்வி அவ்வளவும்தான். ஒரு 50 அல்லது ..60 எங்கடையாக்கள் பாண்டிச்சேரி தமிழர்கள் ஒரு இருபது பேரளவில் இருந்தனர் அதோடை 12 பிறெஞ்சுக்காரர். எண்ணிப் பாத்தனான். தியேட்டருக்குள்ளை போய் இருந்தாச்சு எனக்கு வலப் பக்கம் ஒரு பாண்டிச்சேரி குடும்பம் இடப்பக்கம் கொஞ்சம் வயதான பிரெஞ்சு சோடியொண்டு. பிரெஞ்சுக்காரி என்னை பாத்து நமஸ்தே எண்டாள் நான் வணக்கம் எண்டன். வெள்ளைக்காரி குழம்பிட்டாள் அதுக்கிடையிலை என்ரை மனிசி புகுந்து நமஸ்தே போட்டு வைக்க நான் பிரெஞ்சிலை பொன்சு எண்டிட்டு பேசாமல் இருந்திட்டன்.

படம் எழுத்தோட்டம் தொடங்கிச்சுது இராணுவராங்கி. கெலிகொப்ரர் துவக்கு சூடு எண்டு எழுத்தோட்டம் பேகத் தொடங்கவே இது ஈழத் தமிழனிட்டையிருந்து தொடங்கப் போகுதெண்டு எனக்கு விளங்கிட்டுது. மணிரத்தினம் மாங்குளத்திலை மலையை காட்டினமாதிரி இதிலை மன்னாரிலை மலையையோ இல்லாட்டி யாழ்ப்பாணத்திலை தொப்பிக்கலை காட்டையோ காட்டப்போறாங்கள் எண்டுநினைச்சு நிமிந்து இருந்தன். ஆனால் படம் பயங்கர சண்டையிலை தொடங்கிச்சுது ஒரே விசிலடி கைதட்டல் கனபேர் தலையெண்டும் தலைவா எண்டும் கத்தினாங்கள். நானும் மனிசியும் பக்கத்திலையிருந்த பிரெஞ்சுக்காரியும் ஒருத்தரையொருத்தர் பாத்தம். கனகாலத்துக்கு பிறகு எங்கடை படம் பாக்கிற மகிழ்ச்சி அதுதான் கத்துறாங்கள் எண்டு பிரெஞ்சு காரியிட்டை சொல்ல அவள் அதை அடுத்ததாய்யிருந்த தன்ரை மனிசனிட்டை கடத்தினாள். அஜித் ஒருத்தனின்ரை கழுத்திலை கத்தியை வைச்சு சறக்கொண்டு அறுக்க பின் வரிசையிலை தாயின்ரை மடியிலையிருந்த ஒரு பெண் குழந்தை 3 வயதுதானிக்கும் வீரிட்டு அழத் தொடங்கிச்சிது. அதை அவர் ஓராட்டி பாத்து களைச்சு வெளியாலை தூக்கி கொண்டு போயிட்டார். ஒரு படத்திலையே சண்டை வன்முறை காதல் காமம் உணர்வு எண்டு எல்லாத்தையும் கலந்து அரைச்சு குடுக்கிற தமிழ் படங்களிற்கு குழந்தையளை அதுவும் 12 வயதுக்கு குறைஞ்சவையை கூட்டிக் கொண்டு போக கூடாது எண்டது என்ரை கருத்து.

சண்டை முடியத்தான் கதை தொடங்கிச்சுது தமிழ்நாட்டு கடற்கரையிலை அஜித் அகதியாய் படகிலை வந்து இறங்குவார். ஈழத்தமிழ் கதைச்சு கொலைவெறி வரப்பண்ணப் போறான் எண்டு நினைச்சன் நல்லவேளை அப்பிடியொண்டும் நடக்கேல்லை.முகாமிலை பதியிறவரிட்டைதான் பவளத்துறையிலை இருந்து வாறதாய் சொல்லுவார். எனக்கு சந்தேகம் மனிசியை மெல்ல சுரண்டி பவளத்துறையா பருத்தித்துறையா? எண்டன். உனக்கு காதும் மங்கிப்போச்சுது பவளத்துறையாம் எண்டாள்.அப்ப அவர் ஈழத்து அகதியில்லை இந்தியாவுக்கு கீழை இலங்கையை தவிர வேறையொரு நாடும் இருக்கு எண்டு அப்பதான் எனக்கு தெரிஞ்சிது. என்ரை பூகோள வாத்தி பூலோகம் சுத்திப்போட்டான் சொல்லித்தரேல்லை. அங்கையும் தமிழர் இருக்கினம் சண்டை நடக்கிது அங்கையிருக்கிற பவளத்துறையிலையிருந்துதான் இவன் அகதியா வந்திருக்கிறான். எதுக்கும் வீட்டை போன உடனை கூகிழ் மப்பிலை தேடிப்பாக்க வேணும் எண்டு நினைச்சபடி படத்தை பாத்தக்கொண்டிருந்தன். அதுக்கிடையிலை பிரெஞ்சக்காரிக்கு ஒரு சந்தேகம் வந்திட்டுது அவள் என்னட்டை மன்னிக்கவேணும் ஒரு சந்தேகம் எண்டாள். என்னை மாதிரி எல்லாம் தெரிஞ்ச ஒருத்தன் பக்கத்திலை இருக்கேக்குள்ளை தாரளமாய் கேக்கலாமெண்டன். இந்த கதை இந்தியா விலை எந்த பகுதியிலை நகருது எண்டாள். இது சவுத் இந்தியா தமிழ் நாட்டு கடற்கரையிரை நகருது ஆனாலும் நத்தை வேகம் எண்டன். அனால் அடுத்த சந்தேகம். அவர் எந்த நாட்டிலையிருந்து அகதியா வாறார் எண்டாள். அது சஸ்பென்ஸ் படத்தின்ரை கடைசியிலைதான் சொல்லுவாங்கள் எண்டு நான்தான் கதை வசனம் எழுதினமாதிரி சொன்னன். தொடந்து நடந்த சண்டைக்கு இடைவேளை விட்டாங்கள். இங்கத்தைய படங்களுக்கு இடைவேளை விடுறேல்லைதானே. அதாலை இடைவேளையோடை கன வெள்ளையள் படம் முடிஞ்சுதெண்டு வீட்டை போட்டாங்கள்.

எனக்கு பக்கத்திலை இருந்தவைக்கு படம் முடியேல்லையெண்டு சொன்னதாலை அவங்கள் போகேல்லை. கடைசியா நாலு வெள்ளையள்தான் மிச்சம். படத்திலை கீழை பிரெஞ்சிலை மொழி பெயர்ப்பு ஓடிக்கொண்டிருந்ததாலை அஜித்தை பார்வதி ஓமணகுட்டன் மாமா எண்டு கூப்பிறநேரமெல்லாம் பிரெஞ்சிலை oncle(uncle) எண்டு மொழி பெய்ப்பு போய்க் கொண்டிருந்தது ஆனால் இரண்டு பெரும் லவ் பண்ணி பாட்டும் தெகுடங்க பக்கத்திலை இருந்த பிறெஞ்சுக்காரி குளம்பிட்டாள். உங்கடை ஊரிலை மாமனை கட்டுறவங்களா? எண்டாள். ஜயோ இது என்ரை ஊரில்லை இந்தியா அங்கை இப்பிடித்தான் வரைமுறை பழக்க வழக்கம் தெரியாததுகள் மாமனையும் கட்டுங்கள் மச்சானையும் கட்டுங்கள். அவங்கள் கட்டுறாங்களே? இல்லையே? சினிமாகாரர் வருசக் கணக்கா இப்பிடித்தான் காட்டுறாய்கள் எண்டு சொல்லநினைச்சனான். ஆனால் என்ரை மனிசி பெங்களூர்காரி பிறகு அவள் என்னை டேய் நீ என்ரை மாமனாஉன்னைஎப்பிடிநான்கட்டினான் எண்டுகேட்டால்வில்லங்கமாயிடும் .அதேகுளிரோட இரவு நுளம்புக்கடியோடை பல்க்கனியிலைதான் படுக்கவேணும். அது..அது வந்து இஞ்சைபுருசன்பெண்சாதிசெல்லமா மைபேபி எண்டு கூப்பிடுற மாதிரி மாமா எண்டு சும்மா கூப்பிடுறவை அதைத்தான் மொழி பெயர்த்த வன் பிழையா மொழி பெயர்த்துப் போட்டாங்கள் எண்டன்

அப்பாடா.. படம் ஒரு மாதிரி முடிஞ்சு வீட்டை வந்ததும் முதல் வேலையா கொம்புயூட்டரை போட்டு கூகிழ் மப்பிலை உலகப்படத்தை எடுத்தன். இண்டைக்கு பவளத்துறையை கண்டுபிடிக்காமல் விடுறேல்லை ஏனெண்டால் இப்பிடித்தான் கொஞ்ச காலத்துக்கு முதல் இவன் நடிச்ச படம் ஒண்டை பாத்திட்டு அத்திப்பட்டியை தேடி களைச்சுப்போனன். இந்தியாக்கு கீழை உள்ள நாடுகளை நேட்டம் விட்டன் . ஆ கண்டுபிடிச்சிட்டன் படத்தை கொஞ்சம் பெரிசாக்கினன். அப்பதான் விளங்கிச்சிது மௌசை வேகமாய் இழுத்திட்டனெண்டு..... ஐயோ ஐயோ அது அவுஸ்ரேலியா.....

சாத்திரி (ஒரு பேப்பர்)

மகிந்தா உன் முகம் காணும் போது....

மலமும் உமிழ்நீரும் கூட
அழகாய் தெரிகிறது
மகிந்தா உன் மானங்கெட்ட
முகத்தை காணும் போது

பக்கத்துக்கு பேய்களும் சீனத்து
நாய்களும்
வக்கத்த உனக்கு வலுவேத்த
இல்லை எனில்

திக்கத்து போயிருப்பாய்
திறனி இன்றி வாடி இருப்பாய்
தமிழனின் வீரத்தில்
தறிகெட்டு ஓடி இருப்பாய்
தன்மானமற்றவனாய்
மண் மூடி போயிருப்பாய்
ஆண்மையை வித்து நீ
ஆயுதம் வாங்கினாய் எங்கள்
ஆண்மகன் நினைவிலே தினம்
அச்சத்தில் தூங்கினாய்

இருளிலே விளக்கேற்றி
இல்லத்தை மெருகேற்றி
தெருவிலே கோலமிட அவளை
சுற்றி தேனிக்கள் ரீங்காரமிட
சிரிப்பிலே குழந்தையாய்
சிந்தையில் ஞானியாய்
நெருப்பிலே உள்ளது போல்
நெறியான தூய்மையாய்
பிறப்பிலே பேரு பெற்ற
எங்கள் மங்கையின் உடல்
தின்ற மாமிச நாய்களே –
அவர்கள்
அங்கத்தை அறுத்த
அறமற்ற பாவிகளே
இந்த தோல்வி கண்டு
எங்கள் உணர்வு குறையாது
தரணி அழியும் வரை
தமிழினம் மறையாது...

ஆனால்....

உங்கள் ஒரு கோடி விந்துக்கள்
ஒன்று கூடி நின்றாலும்
உங்கள் சிங்கள கருவிலே
ஒரு மாவீரன் வரமாட்டான்

இன்று தமிழர்கள் அழிந்தாலும்
தமிழ்த் தாய்க்கு அழிவில்லை
தமிழ்தாய் இருக்கும் வரை
தமிழ் இனத்துக்கு முடிவில்லை.

பல அன்னிய சாக்கடையால்
அவதரித்த வன் புழுவே – நீ
பண்ணிய பாவம் எல்லாம் – உன்
பரம்பரையை பழி வாங்கும்.

வாழும் வரை புல்லாக வளைய
மாட்டோம் – நாங்கள்
வளைந்தாலும் வில்லாக
வீரம் காப்போம்.

எங்களை ஒடுக்கியே விட்டதாய்
ஓலம் வேண்டாம்– சும்மா
தடுக்கி தான் விட்டுவிட்டாய்
மீண்டும் எழுவோம்!!

-பிரேம புத்திரன்

~ Friday Special ~
Thali 12 Items £5.00
£20 க்கு மேல் வாங்கினால்
Mutton briyani or kothu rotti FREE...
4 Vadai..... £1
தினமும் அப்பம் கிடைக்கும்
மரக்கறி உணவு 100க்கு மேல் வாங்கும்போது ஒரு சாப்பாட்டின் விலை £2.99
Outdoor catering services
E.Mail : rainbow.mitcham@gmail.com
Web: www.rainbowmitcham.co.uk
RAINBOW South Indian & Sri Lankan RESTAURANT
தாயகத்தில் கிடைத்த அதே சுவை....
